நிரு நியுசன் சென்ரர்
புகையிரத வீதி,
கோண்டாவில்.
A/L 91
விஞ்ஞானப் பிரிவு
பௌதிகவியல், இரசாயன வியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம் பிரயோக கணிதம்.
விபரங்கட்கு, நிர்வாகி.

வார
முரசொலி
VARAMURASOLI

நிரு நியுசன் சென்ரர்
புகையிரத வீதி,
கோண்டாவில்.
A/L 91
வர்த்தகப் பிரிவு
பொருளியல், கணக்கியல், வர்த்தகம், புவியியல், இந்து நாகரிகம், தமிழ், அளவையியல், அரசியல்
விபரங்கட்கு, நிர்வாகி.

RE 10/5/89

முரசு 3 ஒலி 138 ஞாயிற்றுக்கிழமை 07 - 05 - 1989 (சித்திரை 24) ஷவ்வால் 01 விலை ரூபா நான்கு

# ஒப்பந்தத்துக்கு அமைவாக கொழும்பு பேச்சு நடக்குமா?

## இந்திய அரசுக்கு பலத்த சந்தேகம்; சிங்குடன் நரசிம்மராவ் ஆலோசனை

(புதுடில்லி)

**கொழும்பில் இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தை நிலைமைகள் பற்றி கொழும்பிலிருந்து புதுடில்லி திரும்பிய வெளியுறவுச் செயலர் திரு. எஸ். கே. சிங், நேற்று வெளியுறவு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவைச் சந்தித்து விளக்கிக் கூறினர்.**

பேச்சுக்களின் நிலைமைபற்றியும், இவை இருநாட்டு ஒப்பந்தத்துக்கும் உட்பட்டதாகவே அமைய வேண்டுமென்றும் இந்தியா விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசு அலட்சியப்படுத்தியுள்ளதாக இந்தியா கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் பேச்சு நிலைமை பற்றி இந்தியாவுக்கு உடனுக்குடன் அறிவிக்க வேண்டுமென்ற பிரதமர் ராஜீவ் காந்தியின் கோரிக்கையை இலங்கை ஜனுதிபதி ஏற்றுக்கொண்டுள்ளாராயினும், இதனை இலங்கை எவ்வளவு தூரம்செயற்படுத்துமென்பதில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

இவ்வாரத்தில் இந்திய வெளியுறவு உயர்மட்டக்குழு இலங்கை நிலைபற்றி விரிவாக ஆராயுமென்றும் தெரிய வந்துள்ளது.

## இந்தியா இப்படி கூறுகிறது

(புதுடில்லி)

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போது நேரடிப் பேச்சில் ஈடுபடுவதற்கு இந்திய இராணுவமும் ஒரு காரணமாகும் என இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது என வெரித்தாஸ் தெரிவித்தது.

இந்திய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட கடும் நடவடிக்கை காரணமாகவே விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்களில் நேரடியாக இலங்கை அரசுடன் ஈடுபட்டுள்ளதாகவும் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### ஈராக்கில் நடந்த வான விபத்து

## மூன்று ஹெலிகள் நொருங்கின; பாதுகாப்பு அமைச்சர் பலி!

(பாக்தாத்)

ஈராக்கில் இடம்பெற்ற ஹெலிகப்டர் விமான விபத்தில் ஈராக் பாதுகாப்பு அமைச்சரும் உதவி பிரதமருமான ஜெனரல் அட்னன் கைராலா உட்பட அதில் பயணம் செய்தவர்களும் கொல்லப்பட்டனர்.

இங்கு வீசிய கடும் புயலில் மூன்று ஹெலிகப்டர்கள் சிக்கி விழுந்து நொருங்கியதாகவும் அவற்றில் பயணம் செய்தவர்கள் யாவரும் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சர் ஹெலிகப்டரில் பாக்தாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து இடம் பெற்றது. இவர் ஈராக் ஜனுதிபதியின் மைத்துனராவார்.

## ரம்zான் வாழ்த்து

நேற்றிரவு பிறை காணப்பட்டதால் இன்று ஈதுல் பித்ர் ரம்ழான் பெருநாள் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய வாசகர்கள், வர்த்தகர்கள், நண்பர்கள் அனைவருக்கும் முரசொலி தனது ஈதுல் பித்ர் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## சகல பாடசாலைகளிலும் நாளை முதல் கடும்பாதுகாப்பு

நாளை திங்கட்கிழமை முதல் தென்பகுதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி ராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இப்பாதுகாப்பு பொலிஸாரால் அல்ல, பாடசாலை அபிவிருத்திச்சபை, பெற்றோராலேயே வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாடசாலைகள் மீது சில திட்டமிட்ட தாக்குதல் மற்றும் பயங்கரவாத செயல்கள் அவிழ்த்து விடப்படலாமென்று பொலிசாருக்கு ரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன.

## அரச அதிபரின் தகனக்கிரியை கோம்பயன்மணலில் நடந்தது

சூடுபட்டு மரணமான யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்றன.

காலையில் அன்னாரின் ஆனைக்கோட்டை இல்லத்தில் சமயச் சடங்குகள் நடைபெற்றதைத் தொடர்ந்து அஞ்சலியுரைகள் இடம்பெற்றன.

மதப்பெரியார்கள், அரசாங்க அதிகாரிகள் உட்பட பல்வேறு பிரமுகர்களும் இங்கு உரை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து பெருந்தொகையான மக்கள் பங்குபற்றிய இறுதி ஊர்வலம் ஆனைக்கோட்டை இல்லத்திலிருந்து ஆரம்பமாகி கோம்பயன்மணல் மயானத்தைச் சென்றடைந்தது. முற்பகல் பதினொரு மணியளவில் அன்னாரின் இளைய சகோதரர் திரு.

→16 ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரிகள் வெளியேற்றம்

(லண்டன்)

பிரிட்டனில் உள்ள மூன்று தென்னுபிரிக்க தூதரக அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

## கல்வியங்காடு சந்தியில் ஆணும் பெண்ணும் சுட்டு கொலை

(கல்வியங்காடு)

கல்வியங்காடு சந்தியில் நேற்று நண்பகல் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அருகருகே வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களது கொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

கல்வியங்காடுச் சந்தையில் வியாபாரம் செய்து வரும் இவர்களின் சடலங்கள் யாழ். பெரியாஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

ஆணை குணம் என்றும், பெண்ணை "பூவும் பொட்டும்" என்றும் சந்தைக்குச் சாமான்கள் வாங்கச் செல்பவர்கள்

→16 ஆம் பக்கம் பார்க்க

## முதலாண்டு மாணவர் அனுமதி புதிய திட்டம் வருகின்றது

பிரபல அரசாங்க பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் (ஆண்டு ஒன்று) பிள்ளைகளைச் சேர்க்கும் முறையில் அடுத்த வருடத்திலிருந்து மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

பிரபல பாடசாலைகளின் கனிஷ்ட பாடசாலைகளிலேயே இனிமேல் முதலாம் வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐந்தாம் தர புலமைப் பரீட்சையில் மாணவர்கள்

- 16 ஆம் பக்கம் பார்க்க

## கொக்குவில் சந்திக்கருகில் பஸ்வண்டி எரிக்கப்பட்டது

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு முன்பாக நேற்று மாலை நாலரை மணியளவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போவுக்கு சொந்தமான பஸ் ஒன்று இனம் தெரியாத சிலரால் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

இந்த பஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து குரும்பசிட்டிக்கு சென்று கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றது.

66 சிறி 6661 என்ற இலக்கமுடைய இந்த டாட்டா பஸ் இந்திய அரசால் அண்மையில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வன்னி, முல்லைத்தீவு பகுதிகளில் வீதிகள், வீடுகளில் தொல்லை

வவுனியா, முல்லைத்தீவு, நெடுங்கேணிப் பகுதிகளில் தொடர்ந்தும் தேடுதல், தாக்குதல் கெடுபிடிகள் இடம் பெற்றுவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திடீரென வீதிச்சோதனைகள் மட்டுமன்றி, வீட்டுச் சோதனைகளும் இடம்பெறுவதாக அங்கிருந்து வெளியேறி அயற் கிராமங்களில் புகலிடம் பெறுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவின் அயற் கிராமங்களில் உணவு, மருந்துப்

→16 ஆம் பக்கம் பார்க்க

## சிமெந்தின் விலை நாளை முதல் அதிகரிப்பு

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் நாளை திங்கள் முதல் சிமெந்தின் கொள்வனவு விலையை அதிகரித்துள்ளது. தொழிற்சாலைகளில் நேரடியாக விற்பனையாளர்கள் கொள்முதல் செய்யும் விலையே இதுவாகும். இதன்படி தற்போது காங்கேசன்துறை சிமெந்து ஆலையின் கொள்வனவு விலை தொண்ணூற்றி ஆறு ரூபாவிலிருந்து நூற்றி பதினைந்து ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது. இதேபோல புத்தளம் ஆலையில் நூற்றி பதினைந்து ரூபாவாகவும், காலி ஆலையில் நூற்றி இருபது ரூபாவாகவும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

நாரந்தனை மேற்கில் நல்ல தண்ணீர் வசதியுடன் கூடிய வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வ. நித்தியானந்தன். நாரந்தனை மேற்கு, ஊர்காவற்றுறை. 05124

**தேவை**

தச்சுவேலையில் அநுபவமிக்க மூவர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும் மு. இராசேந்திரம், 758, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 05142


**கல்வி**

ஆங்கிலம் பேசவும் வாசிக்கவும், முழு இலக்கணத்துடன் பயிலவும் தபால் மூலம் பயிற்சிகள் நடைபெறுகின்றன. முத்திரையொட்டி சுயவிலாசமிட்ட நீள தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும்: இம்பீரியல் இன்ஸ்ரிரியூட்ஸ், 25, மாட்டின் வேன், யாழ்ப்பாணம். 05131

**விற்பனைக்கு**

பின்வருவன உடன் விற்பனைக்குண்டு(i) யாழ். இந்துக் கல்லூரியின் சுற்றுடலில் வீடும் வளவும்(ii) தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி வியாபார ஸ்தலத்திற்கு உகந்தது. விரும்புவோர் தரகர் இன்றி நேராகத் தொடர்பு கொள்ளவும். (தினசரி காலை 8.30 இற்கும் பிற்பகல் 12.30 இற்கும் இடையில்) இல. 93, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 05138

டபிள் ரீச் ஹார்மோனியம், புதிதாக செய்யப்பட்ட தபேலா (செற்) சுருதிபெட்டி, டோல்கி, விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சோதிடர் ச. அரியநாயகம், 54/5 ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம். 05137




**வின்ஸர்**

வெண் திரையில்
இன்று முதல்
இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
ஹாய்பேபி புகழ் கமலஹாசன், உங்கள் சத்தியராஜ், அம்பிகா, ராஜீவ், மாதவி நடித்த
"காக்கிச் சட்டை"
05141

புதிய வெளியீடு

**ராணி சினிமா**

10.30—2.30—5.30
கமல், அம்பிகா, ராதா, ஜெய்சங்கர், நடித்த

**காதல் பரிசு**

(கலர்)

05133

---

பிரயாண அன்பர்கட்கு
எமது ஸ்தாபனத்தார் வழங்கும்

## மகிழ்ச்சிகரமான பிரயாண ஏற்பாடுகள்

★ கனடா ★ ஜேர்மன்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ தாய்வான்

கடந்த வாரம் புறப்பட்ட எமது குழு வெற்றிகரமாக பிரயாணத்தை முடித்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அடுத்த குழு மிக விரைவில் புறப்பட இருப்பதால் எமது அன்பர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**சிங்கப்பூர்**

பணிப்பெண்கள் உடன் தேவை

உங்கள் பயண அமைப்பாளர்

# M. P. LINGAMS

764, Hospital Road, Jaffna

05081

---

## அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம்

(தபாற்கந்தோர் அருகாமையில்)
வட்டுக்கோட்டை
கிளை: 507, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

அன்பார்ந்த முஸ்லிம் பெருமக்களுக்கு அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கத்தின் மனமார்ந்த ரம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்.

எமது சேவைகள் தமிழ் பேசும் மக்களிடம் எல்லாத் திசைகளிலும், எல்லா மதத்தவர்களுக்கும் பரவலாக்கப் பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்,

எமது சேவைகளில் சிலவற்றை தங்கள் கவனத்திற்குத் தரவிரும்புகிறோம்.

ருதுவிவாகம்—நன்கொடை
திருமண வைபவம்—நன்கொடை
சுண்ணத்துச் சடங்கு—நன்கொடை
சிறு கடன்கள்

மேலும் பல நன்மைகள் உங்களுக்குக் காத்திருக்கின்றன

**பிரவேசம்: 120 ரூ. மாதாந்தம்: 20 ரூ.**

இப்படிக்கு
வே. இ. புவனஈஸ்வரன்
தலைவர்
அகில இலங்கை பரஸ்பரசகாயநிதிச் சங்கம்
தபாற் கந்தோர் அருகாமையில்,
வட்டுக்கோட்டை.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.
பொது முகாமையாளர்

**அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கம் லிமிட்.**

(தபாற் கந்தோர் அருகில்)
வட்டுக்கோட்டை

05126

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பதிவாளர் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பங்கள் 1989-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ம் திகதிவரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் 20/- ரூபா செலுத்தி இப்பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ தாபனக்கிளையிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால்மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை 23 x 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட பதவிக்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்தில் எடுத்து சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப் படுவர்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

துணை வேந்தர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989. 04. 28.

05091

---

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி லெட்சுமி கதிர்காமத்தம்பி**
[மயில்வாகனம்]

திதி: 07-05-1989

மலர்வு: 07-06-1950
உதிர்வு: 07-05-1988

எமது குல விளக்கே! எம்மை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்ட அணையாச் சுடரே! பாசத்தின் பிறப்பிடமே! எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தாலும் இந்நாளில் அல்ல எந்நாளும் உம்மை மறவோம். உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் வாடும்
அன்புக் கணவர், அருமைப் பிள்ளைகள்.

10/2, அம்பகார் வீதி,
தலாலி, கொக்குவில்.

ஏறாவூர் 4-ம் குறிச்சி,
மட்டக்களப்பு.

05112




# கம்பனின் பார்வையில் தம்பியர் பாசம்

**அகளங்கன்**

இராமாயணத்தில் இராமனுக்கு உடன் பிறந்த தம்பிகள் மூவர். உடன் பிறவாத் தம்பிகள் மூவர். கைகேயியின் மகன் பரதனும், சுமித்திரையின் பிள்ளைகளான இலக்குமணன், சத்துருக்கன் என்போருமே இராமனுக்கு உடன் பிறந்த சகோதரர்கள்.

இராமனுக்கு தன் தம்பிகளிலே அளவுக்கதிகமான பாசமுண்டு. அதற்குக் காரணம் அத்தம்பிகள் இராமனைப் போற்றி அன்பு செலுத்திய முறைதான் என்று கூறலாம். இராமனின் தம்பிகள் இராமனுக்காகவே வாழ்ந்த உத்தமத் தம்பிகள்.

இராமன் வனவாசம் செல்ல ஆயத்தமானான். அவனது தம்பிகளில் ஒருவனான இலக்குமணன் அரச போகத்தையும் அன்பு மனைவியையும், அன்னையையும் துறந்து அண்ணன் இராமன் பின்னே ஓர் அடியவனாகச் சென்றான்.

தாயின் வரத்தால் தந்தையின் வாக்கினால், தனக்குக் கிடைத்த இராச்சியத்தை உதறித் தள்ளி, அண்ணன் இராமனைத் தேடி ஆரண்யம் சென்றான் பரதன். தனக்குக் கிடைத்த இராச்சியத்தை இராமனிடமே ஒப்படைத்து நாட்டுக்கு வந்து நாடாள வேண்டுமென்று வற்புறுத்தினான். இரங்கிக் கேட்டான். தொழுது நின்ற பரதனிடம் அது தந்தையின் வரத்துக்குப் பழுது என்று மறுத்தான் இராமன்.

இறுதியில் இராமரின் பாதுகைகளைத் தலைமேற் சுமந்துவந்து அதனைச் சிம்மாசனத்தில் வைத்து முடிசூட்டி விட்டு நாட்டெல்லையிலே நந்திக் கிராமத்திலே வந்து தவ வாழ்க்கை வாழ்ந்தான் பரதன். பதினான்கு ஆண்டுகள் முடிந்ததும் இராமன் வந்து சேர வேண்டும் தவறினால் நெருப்பிலே விழுந்து உயிர் துறப்பதாகச் சபதமுஞ் செய்திருந்தான் பரதன்.

இந்த இருதம்பிகளின் இருவகை நிகழ்ச்சிகளும் இராமனுக்கு இதயத்தில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

## குகன் சுக்கிரீவன் விபீடணன்

தன்மேல் அன்பு செலுத்தி உதவி செய்ய யார் முன்வந்தாலும் அவர்களையும்த தன் தம்பிகளாகப் பார்க்கும் தன்மை இராமனுக்கு ஏற்பட்டதற்குக்காரணமே இராமனின் தம்பிகளின் சிறப்புத் தான். 'முதன் முதலில் தன் மேல் அன்புகொண்டு தேனும்மீனும் கொண்டு வந்த கங்கைக்கரை வேடனைத் தனது தம்பியாக்கிப் பார்க்கிறான் இராமன்.

ஆயிரம் அம்பிக்கு நாயகனான குகன், இராமன் இராச்சியம் இழந்து கானகம் வந்ததற்கு இரங்கினான். தனது படகுகள் செலுத்தும் வேடுவர்களைக் கொண்ட இராச்சியத்தை இராமனுக்குத் தருவதாகக் கூறுகிறான். ஆயிரம் படகுகளுக்கு அவன் சொந்தக்காரன். அதை அப்படியே இராமனுக்குக் கொடுத்து இராமனின் ஏவலைச் செய்வதையே தன் பாக்கியமாகக் கருதிய உயர்ந்த உள்ளம் அவனுடையது. மீனும், தேனும் கொண்டுவந்து கொடுத்து உண்ணச் சொன்ன குகனைத் 'தாயினும் நல்லான்' என்கிறார் கம்பர், இராச்சியமும் கொடுக்க முன்வந்த குகனை 'தந்தையினும் நல்லான்' என்றால் அதுவும் முற்றும் பொருந்தும்.

கங்கைக் கரை வேடனை மட்டுமின்றி கிஷ்கிந்தையில் சந்தித்த குரங்கு இனத்தவனான சுக்கிரீவனையும் தம்பியாக்கி அவன் மனையில் உணவு உண்டசமத்துவவாதிஇராமன் இலங்கை வேந்தனின் தம்பியான விபிடணனையும், தம்பியாக்கி அன்பு சொரிந்தது அண்ணல் இராமனின் அன்பு இதயம்.

வேடுவன் குரங்கு அரக்கன் என்ற வேறுபாடுகள். இராமனின் 'இதயத்தில் இல்லை.

குகனொடும் ஐவரானோம்;
முன்பு; பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்;
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல்ஐய; நின்
னொடும் எழுவரானோம்,
புகலருங் கானந்தந்து 'புதல்வ
ராற் பொலிந்தான் உந்தை

என்று இராமன் விபீடணனை வரவேற்பதாகக் கம்பன் காட்டுகிறான். குன்று சூழ்வான் மகன் என்பது சூரியனின் மகனான சுக்கிரீவனை. இராமனுக்கு இராச்சியங் கொடுக்க முன் வந்தனர் இரு தம்பிகள். பரதன் அயோத்தி இராச்சியத்தைக் கொடுக்க முன் வந்தான் குகன் கங்கைக் கரை இராச்சியத்தைக் கொடுக்க முன் வந்தான் இராமன் இரு தம்பிகளுக்கு இராச்சியங் கொடுத்தான். வாலியின் தம்பியான சுக்கிரீவனுக்கு கிஷ்கிந்தை இராச்சியத்தைக் கொடுத்தான். இராவணனின் தம்பியான விபீடணனுக்கு இலங்கை இராச்சியத்தைக் கொடுத்தான்.

## சத்துருக்னன்

இராமனின் தம்பிகளில் சத்துருக்னன் பற்றி இராமாயணத்தில் அதிகம் கூறப்படவில்லை. பரதனைப் போல், இலக்குவனைப்போல் சத்துருக்னன் வாசகர்களால் போற்றப்படுவதும் குறைவு. இராமாயணத்தில் சத்துருக்னன் சம்பந்தப்படும் காட்சிகள் மிகக் குறைந்த அளவே உண்டு.

கம்பன் தனது இராமாயணத்தில் சத்துருக்னனுக்கு ஒரு உயர்ந்த இடத்தைக் கொடுக்கச் சரியான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தான். ஒரே ஒரு சந்தர்ப்பம் வந்து வாய்த்தது. அந்த ஒரே ஒரு சந்தர்ப்பத்தை வைத்து சத்துருக்னனின் குணப் பண்பை மிக நன்றாக போதிய அளவு பெருமைப் படத்தக்கதாக விளக்கி விடுகிறான்.

தசரதனுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தும் நாலாவது புதல்வனான சத்துருக்னனுக்கே தந்தைக்கு கொள்ளி வைக்கும் பாக்கியம் கிடைத்தது. இராமனும் இலக்குவனும் காட்டில். பரதன் தன் உடலுக்குக் கொள்ளி வைக்கக் கூடாது என்பது கோபங் கொண்ட தசதரனின் கோரிக்கை. அதனால் அப்பெரும் பாக்கியம் நான்காவதுபிள்ளையான சத்துருக்னனுக்கே கிடைத்தது.

அத்தகைய பேறுபெற்ற சத்துருக்னன் பற்றி கம்பன் காட்டும் காட்சியொன்றைக் காணுவோம். நந்திக் கிராமத்தில் இராமனின் வருகையை நோக்கிக் காத்திருக்கிறான் பரதன். பதினான்கு ஆண்டுகள் முடிந்து கொண்டிருக்கின்றது. இராமன் வருவதாக வாக்களித்த கால எல்லை முடிவதை அறிந்த பரதன் அக்கால எல்லையின் பின் உயிர் வாழ விரும்பாதவனாக தன் உயிரைப் போக்கிக் கொள்வதற்காகத் தீமூட்டித் தியை வலம் வந்தான். தனது தம்பியான சத்துருக்னனிடம் தனது இறுதி விருப்பத்தைக் கூறினான்.

''இராமன் வருவதாக வாக்களித்த காலம் முடிவடைகிறது. இராமன் வராது விட்டால் நான் இந்தத் தீயில் விழுந்து எரிந்து இறந்து விடுவேன். அதனால் எனக்கு நீ ஒரு வரந்தரவேண்டும். என்ன வரம் எனில் எங்கள் நால்வரில் நீயே இப்போது இங்கிருக்கிறாய். அதனால் நீயே நாட்டை அரசாள வேண்டும்''. என்று சத்துருக்னனைக் கட்டித் தழுவி வரங் கேட்டான் பரதன். பரதனின் வார்த்தைகள் சத்துருக்னனின் செவிகளைத் துளைத்தது தனது காதுகளைக் கைகளால் பொத்தினான். நஞ்சு உண்டவன் போல அவனது கண்களும் உடலும் நடுங்கத் தொடங்கி விட்டன.

பெருமூச்சுவிட்டு அழுதான். விழுந்தான். எழுந்தான். பரதனைத் தொழுதான். ''நான் உனக்கு என்ன பிழை செய்தேன். என்னை ஏன் இப்படி ஒரு துன்பத்தில் ஆழ்த்தினாய்'' என்று அரற்றினான் சோகம் மட்டுமின்றிக் கோபமும் ஏற்படுகிறது அவனுக்கு.

விழுந்து மேக்குயர்
விம்மலன்; வெய்துயிர்த்து
எழுந்து நானனுக்கு
என்ன பிழைத்துளேன்
அழுந்து துன்பத்தினாய்
என்று அரற்றினான்
கொழுந்து விட்டு
நிமிர்கின்ற சீற்றத்தான்.

என்று கம்பர் அவன்நிலையை அழகாகக் காட்டுகின்றார் அதுமட்டுமன்றி சத்துருக்னன் மிக அழகாகத் தன் மன நிலையையும் தனது சகோதரர்கள் செய்த செயலையும் எடுத்துக் கூறுகிறான்.

காட்டுக்குச் சென்ற அண்ணன் இராமனைக் காவல் காத்து. அவன் பின்பு போனானே இலக்குமணன், அவனும் இராமனுக்கு ஒரு தம்பி. காட்டுக்குச் சென்ற அண்ணன் இராமன் இன்னும் வரவில்லையே, சொன்ன காலக்

(15-ம் பக்கம் பார்க்க)

## செயற்கரிய செய்தோர்

### பெருங்குன்றூர்க் கிழார்

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாமருந்தெனினும் வேண்டற் பாற்றன்று' என்பது திருக்குறள். நீதி இலக்கியமாகிய திருக்குறளும்,ஏனைய தமிழ் இலக்கியங்கள் பலவும் விருந்தோம்பலை இல்லறத்தின் தலையாய பயனாகக் கூறுகின்றன.

பெருங்குன்றூர்க் கிழார் என்னும் புலவர் வறுமையால் வாடினார். அந்த வாட்டம் தானோ தனது துணைவியோ, மக்களோ வசதியோடு வாழ முடியவில்லையே என்ற சுயநலத்தால் ஏற்பட்டதன்று. விருந்தினரை உபசரிக்க முடியவில்லையே என்ற எண்ணத்தால் ஏற்பட்டது.

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்னும் அரசன் உறையூரில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான் அவனைப்பாடிப் பரிசில் பெற்று விருந்தினரை உபசரித்தலை விரும்பிய புலவர் அவனிடம் சென்றார். இளஞ்சேட் சென்னி புலவரை வரவேற்று உபசரித்தான். அவரைப் பிரிய விரும்பாதுபரிசில்கொடாது அவரைத் தம்மோடு தங்கச் செய்தான்.

அரசனிடம் தங்குவதால் விருந்தோம்பும் தமது கடமை தாமதிக்கிறதே என்பதை உணர்ந்து அரசனிடம் ''அரசே எனக்குப் பிறிதொரு குறை இல்லையாயினும் விருந்து கண்டால் ஓம்பமாட்டாத வறுமையாகிய பெருங்குறை இருந்து வருத்துகிறது அதனால் என் அறிவும் தடுமாற்றம் அடைகிறது'' என்றார். உடனே அரசன் புலவர்க்கு வேண்டும் பரிசில் கொடுத்துச் சிறப்பித்தான்.

புலவர் மகிழ்வுடன் சென்று இல்லறத்தின் தலையாய பயனாகிய விருந்தோம்பலைச் சிறப்புறச் செய்தார்.

## தரிசனம்

தமிழ்ப் பெருங்குடி மக்களின் முன்னோர்கள், தங்கள் வருங்காலச் சந்ததிக்கு விட்டுச் சென்ற பெரும் முதுசொம் கல்விக் கூடங்கள்.

'கல்வியே கருந்தனம்' என்ற முதுவாக்கை தலைவாக்காகக் கொண்டவர்கள் தமிழர்கள்.

தாம் உண்ணாவிட்டாலென்ன, உறங்காவிட்டாலென்ன, தமக்குக் குடியிருக்க வீடிருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, தங்கள் குழந்தைகளுக்குச் சீரான கல்வி வழங்க வேண்டுமென்பதில் தமிழ்ப் பெற்றோருக்கு நிகர்யாருமில்லை.

ஈழத்துத் தமிழ் பிரதேசங்களில் அமைந்திருக்கும் கல்விக்கூடங்களின் தொகை இதற்குச் சான்றாகும்.

இந்த மண்ணில் அமைந்துள்ள ஒவ்வொரு கல்விக் கூடங்களுக்கும் நீண்ட பாரம்பரியமும், தனித்துவமான வரலாறுமுண்டு.

இந்தக் கல்விக்கூடங்களை அமைத்த பெரியார்களின் தூரப்பார்வையும், தீர்க்கதரிசனமுமே, இன்றைய தமிழ் மாணவர்களின் திறமைக்கும் வெற்றிக்கும் அடித்தளமாகும்.

இந்து போர்ட் இராசரத்தினத்தின் அளப்பரிய கல்விச்சேவைதமிழர் வரலாற்றினில் வைரக்கற்களால் பதிக்க வேண்டியது

பாவலர் துரையப்பா பிள்ளையின் தெல்லிப்பழை மகாஜனவும், பெரியார் கனகரத்தினத்தின் ஸ்ரான்லி கல்லூரியும்... என்றவாறு ஒவ்வொரு பாடசாலையின் பிறப்புக்கும், வளர்ச்சிக்கும் ஒவ்வொருவர் பின்னணியில் நின்றிருக்கிறார்கள்.

ஆலயங்களில் மகோற்சவங்களும், கும்பாபிஷேகங்களும் நடப்பது போன்று, கல்விக் கூடங்களிலும் மணிவிழாக்கள். வைர விழாக்கள், நூற்றாண்டுவிழாக்கள் இடம் பெறுவது போற்றுதற்கரியது.

ஸ்ரான்லி என அழைக்கப்படும் கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு இது வைரவிழா ஆண்டு.

யாழ். இந்துக் கல்லூரிக்கு இவ்வருட இறுதியில் நூற்றாண்டு விழா ஆரம்பமாகின்றது

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி 150-வது ஆண்டு விழாவைக் கொண்டாட ஆயத்தமாகின்றது.

நாட்டின் சூழ்நிலை நன்றாக இல்லையென்றாலும் கூட, கல்விக்கூடங்களின் விழாக்கள் தடைப்படக் கூடாது

இவ்வாறான விழாக்களின் போது, பாடசாலை நிறுவனர்கள் பற்றி. அவர்கள் தொண்டு பற்றி, அவர்களின் மனிதப்பண்பு பற்றி எடுத்துக் கூறும் நூல்கள் வெளியிடப்பட வேண்டும்.

அடுத்த சந்ததிக்காகவாவது நாம் இதனைச் செய்தேயாகவேண்டும்.

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

வைத்திய கலசம்

# இரத்தசோகை ஏற்படாமல் தவிருங்கள்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey

★ எமது மக்களை மிகவும் அதிகமாப் பாதிக்கும் நோய் என இரத்தச்சோகையைச் சொல்லலாம். பொருளாதாரக் காரணங்களாலும் அறியாமையாலும் போதியளவு போஷாக்கு உணவுகளை உட்கொள்ளாததே இதற்குக் காரணம்.

★ இரத்தச்சோகை வேறு பல காரணங்களாலும் ஏற்படலாம். பெரிய காயங்களிலிருந்து கடுமையாக இரத்தம் வெளியேறுவது, குடற்புணிலிருந்து, மூலமுளையிலிருந்தும் தொடர்ச்சியாகவும், அதிகமாவும் இரத்தம் வெளியேறுவது போன்றவையும் முக்கிய காரணங்கள். மாதவிலக்கின்போதும், மகப்பேற்றின் போதும்மிகக்கடுமையாக இரத்தம் வெளியேறுவதும் காரணமாகலாம். கடுமையான வயிற்றுளைவு, அடிக்கடிவரும் மலேரியாக்காய்ச்சல், கொக்கிப் புழுத் தொற்று ஆகிய நோய்களும் இரத்தச்சோகைக்கு இட்டுச் செல்லலாம். எனவே இத்தகைய நோய்கள் உங்களுக்கு இருந்தால் அவற்றிற்கு உடனடியாக வைத்தியம் செய்து இரத்தச்சோகை ஏற்படாமல் தடுங்கள்.

★ செங்குருதிக் கலங்களில் சிலருக்கு இயற்கையாகவே ஏற்படும் குறைபாடுகள், கிருமித்தொற்று, சிலவகை நச்சுப்பொருட்கள், அலர்ஜி ஆகியவற்றால் செங்குருதிக் கலங்கள் எளிதாக உடலிலேயே சேதமடைதல் போன்றவையும் இரத்தச்சோகை நோயை உண்டாக்கலாம்.

★ இரத்தச்சோகை இருப்பதை எப்படி நாங்கள் கண்டு கொள்ள முடியும் என்று கேட்கிறீர்களா? உடற் பலயீனம், சோம்பல், எளிதில் களைப்படைதல், உடல் வெளிறுதல், நெஞ்சுப் படபடப்பு போன்றவை இரத்தசோகையின் ஆரம்ப அறிகுறிகளாகும். இத்துடன் வெளிறிய நகம், வெளிறிய முரசு, கண் இமைகளின் வெளிறிய உட்பகுதி போன்ற அறிகுறிகளையும் நீங்கள் அவதானிக்கலாம்.

★ சற்று அதிகமான இரத்த சோகையில் சில தனித்துவமான அறிகுறிகளை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும் இவர்களின் நாக்கு தனது வளமையான சொர சொரப்புத்தன்மையை இழந்து, மிக மிருதுவாகவும், பளபளப்பாகவும் காணப்படும் வாயின் இரண்டு மூலைகளிலும் வெடிப்பு அல்லது புண் உள்ள பலரை நீங்கள் கண்டிருக்கக் கூடும். இவர்களும் இரத்த சோகையளர்களே. நகங்களும் தமது வழமையான பளபளப்பையும், வளைவையும் இழந்து. வரட்சியாகவும் குழிவிழுந்தும் காணப்படும்.

★ இரத்தசோகை மிகவும் அதிகமாக இருந்தால் முகமும் கைகால்களும் வீங்கலாம். நடக்கும் போதும் கதைக்கும் போதும் மூச்சு வாங்கலாம். நடுநெஞ்சில் வலி அல்லது அடைப்பும் ஏற்படலாம். இவை இருதயம் செயற்திறனை இழப்பதின் (HEART FAILURE) அறிகுறிகளாதலால் தாமதியாது வைத்திய ஆலோசனையும், தீவிர சிகிச்சையும் பெறுவது அவசியம்.

★ மண், சுண்ணும்பு, அரிசி போன்றவற்றை சில குழந்தைகளும், பெண்களும் விரும்பி உண்பதை நீங்கள் கண்டிருக்கக் கூடும். இவர்கள் பெரும்பாலும் இரத்தசோகையினால்பீடிக்கப் ட்டவர்களாகவே இருப்பார்கள்.

★ இரத்தசோகை உண்டாகாமல் தடுப்பதே புத்திசாலித்தனமானது. இரத்தச்சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் அல்லது நோய்கள் (முன்பு குறிப்பிடப்பட்டவை) இருந்தால் அவற்றை நீக்குவதற்கோ, அல்லது குணமாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுங்கள்.

★ பெரும்பாலனவர்களில் இரும்புச்சத்துக் குறைபாட்டினுலேயே இரத்தசோகை உண்டாவதால், இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகளைத் தவருது உண்ணுங்கள். மீன், இறைச்சி, ஈரல், பசளி, கீரை, பயறு, பருப்பு, கோதுமை, போன்றவற்றில் இரும்புச்சத்து அதிகம் உண்டு. இவற்றைப் போதியளவு உணவில் சேர்ப்பதன் மூலம் இரத்தச்சோகை ஏற்படாமல் தடுக்க முடியும். கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களும் இத்தகைய உணவுகளை உண்பதன் மூலம் இரத்தசோகைக்கு ஆளாகாமல் தப்ப முடியும்.

★ இரத்தசோகை அதிமாக இருந்தால் அதைக் குணப்படுத்துவதற்காக வைத்தியர் உங்களுக்கு இரும்புச்சத்து மாத்திரைகளையும், உயிர்சத்து மாத்திரைகளையும் கொடுப்பார். அல்லது ஊசி மூலம் செலுத்தவும் கூடும்.

★ கொக்கிப் புழுத் தொற்று பெருப்பாலும் இரத்த சோகையுடன் இணைந்து இருப்பதால், கொக்கிப் புழுக்களை ஒழிப்பது அவசியம். வேர்மொக்ஸ் (Ver-mox) கொம்பன்ரின் (Combantrin) போன்ற குடற் புழு நீக்கி மருந்துகளை உபயோகிக்க வேண்டியிருக்கும்.

★ மிக இலகுவாகத் தடுக்கக்கூடியதும், சுலபமாகக் குணமாக்கக் கூடியதும்மான இரத்தசோகை நோயால் இன்னமும் பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

## வெற்றியின் திறவுகோல்

தன்னடக்கம், சிந்தனைத் தெளிவு, கருணை, பணிவு, கட்டுப்பாடு, புலனடக்கம், நேர்மை ஆகியவையே வெற்றியின் திறவுகோல் என்றார் சோக்கிரடீஸ் அவரது கருத்துக்கள் யாவும் அவரது மாணவர் பிளேட்டோவின் மூலமே நமக்குக் கிடைத்துள்ளன.

## யோகாசனம்

யோகாசனப் பயிற்சி முறை நமது மாமுனிவர்களால் கண்டுடிபிக்கப்பட்டதாகும். இன்றைக்கு உலகிலுள்ள பிறமத மக்கள் இதன் பெருமையை உணர்ந்து இதைப் பயின்று வருகிறார்கள்.

நம்முடைய சமயத்தில் தோன்றிய இவ்வரிய கலையின் பெருமையை நாமே இன்னும் சரிவர உணரவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் இனியும் காலந்தாழ்த்தாது நமது இளந்தலைமுறையினருக்கு இக்கலையை அவர்கள் பயிலும் கல்விக்கூடங்களிலும் பிற இடங்களிலும் கற்றுக்கொடுத்துப் பயன் பெறச் செய்யவேண்டும்.

க. கனகராசா

## தத்துவ ஞானியின் காதல்

கல்விமானும் தத்துவ ஞானியுமாகிய எமர்சன் தமது இருபத்தைந்தாம் வயதில் எல்லன் லூயிஸா தக்கர் என்னும் பெண் மீது காதல் கொண்டார்.

''எங்கள் காதல் தெய்விகமானது. வாழ்க்கையில் காதல் அவசியம் காதலிக்கத்தெரியாதவன் விகாரமானமனத் தினைக்கொண்டிருப்பான். நாங்கள் இருவரும். உடலழகைக் கண்டு காதல் கொள்ளவில்லை. ஆத்மிகம்மனத்தையே காதலித்தோ'' என எமர்சன் தங்கள் காதல் பற்றிக் கூறினார்.

காதலித்த லூயிஸாவையே திருமணம் புரிந்து கொண்டு இவ்வாழ்க்கை நடத்தினார்.

## காந்தத்திற்கு பெயர் வந்த வரலாறு

முன்னொரு காலத்தில் கிரேக்க நாட்டில் மாக்னஸ் என்ற பெயருடைய ஒரு இடையன் வசித்து வந்தான். அவன் ஆடுகளை மேய்த்தவாறு கிராமங்கள் எங்கும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான்.

ஒருநாள் மாக்னஸ் ஒரு குன்றின் மீது ஆடுகளை மேய விட்டான். சிதறி ஓடும் ஆடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக தனது கைத் தடியை ஊன்றியவாறு அங்கும் இங்கும் நடக்க வேண்டியிருந்தது. ஒரு தடவை மந்தையை விட்டு ஓடிய ஆட்டைத் தேடிக் கொண்டு வேகமாக நடந்தான். அப்போது ஒரு பாறையின் மீது அவன் சிரமமாக ஏற வேண்டியிருந்தது. தடியை பலமாக பாறை மீது ஊன்றி அவன் மேலே ஏறிப் பின்னர் கைத்தடியைப் பெயர்க்க அவன் முயற்சி எடுத்தபோது அது அந்த பாறையில் ஒட்டிக்கொண்டதைக் கண்டு வியப்படைந்தான்.

அவனுடைய கைத்தடியின் முனையில் ஒரு இரும்புப் பூண் போடப்பட்டிருந்தது. அந்த இரும்புப் பூண் பாறையால் கவர்ந்து இழுக்கப்பட்டு பாறையோடு ஒட்டிக் கொண்டது இதைக் கண்டு அவனுக்கு ஒருபுறம் ஆச்சரியமாகவும்மறுபுறம் திகைப்பாகவும் இருந்தது. மிகுந்த பலத்துடன் அந்தத் தடியை பிடுங்கிய போதுதபன் அதுவிடுபட்டது அந்த அதிசயப்பாறை மீது மாக்னஸ் ஆராய்ச்சி செய்தான். அந்தக்கல் ''வோட் ஸ்டோன்'' என்ற காந்தக்கல் என்பது அவனுக்குப் புலப்பட்டது. காந்தக் கல்லை முதன் முதலாகக் கண்டு பிடித்த மாக்னஸ்சின் நினைவாகத்தான் ஈர்ப்பு சக்தியுடைய காந்தத்திற்கு ஆங்கிலத்தில் மாக்னட் என அழைப்பட்டு வருவதாயிற்று.

—ஜெகவிஜேதன்

## பல நாட்டுப் பழமொழிகள்

நிறையப் பேர் காதலில் ஈடுபடுகிறார்கள், நிறையப்பேர் அரசியலில் ஈடுபடுகிறார்கள்; இவர்களுள் பொய் சொல்பவர்களே வெற்றி பெறுகிறார்கள்.

—ரஷ்யா

எக்காலத்திலும் நம்பிக்கையின் உறுதியை விடச் சிறந்தது எது தெரியுமா? நல்ல இதயம்தான்.

—திபெத்

இளமையில் முட்டாளாக இருப்பது பாவம். வயதானதும் அப்படி இருப்பதோ பயித்தியக்காரத்தனம்.

—சீனு

தாய் உன்னைப் பல மாதங்கள் சுமந்து கொண்டிருந்தாள், பள்ளிக்கு உனக்கு உணவு கொண்டு வந்து தந்தாள்; அத்தகையவள் உன்னைப்பற்றி ஆண்டவனிடம் முறையிடும்படி வைத்துக் கொள்ளாதே.

—எகிப்து

ஓராயிரம் மைல்கள் பிரயாணம் செய்வதாக இருந்தாலும், அது முதலில் அவன் எடுத்து வைக்கும் முதலடியில்தான் ஆரம்பமாகிறது.

—ஜப்பான்

உண்மை ஊமைதான். ஆனால் அது பேச ஆரம்பிப்பதால் நிற்காது

—இங்கிலாந்து

சர்வன்

## பதின்மூன்று வயதில் பாடிய பாரதிதாசன்

பாரதிதாசனுக்கு அப்போது பதின்மூன்று வயது பாரதிதாசன் வீட்டிலேயே அவரது பெரியதாயாரும் தங்கி இருந்தார்.

ஒரு நாள் பாரதிதாசனின் பெரியதாயார் ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்கிப் பாரதிதாசனுக்கும் அவரது சகோதரர்க்கும் ஆளுக்கு ஒவ்வொன்று கொடுத்தார். மிகுதியை அறைக்குள் வைத்துவிட்டு போய் சாப்பிடும்படி மூத்த சகோதரனுக்குக் கண்ணால் தெரிவித்தார்.

இதனை மூத்த சகோதரன் கவனிக்கவில்லை. இதனைக் கவனித்த பாரதிதாசன் அறைக்குள் சென்று பழம் முழுவதையும் சாப்பிட்டுவிட்டுத் தோலை மட்டும் அங்கே போட்டு விட்டார்.

சிறிது நேரத்துக்குப்பின் பெரிய தாயார் மூத்தவனைக் கூப்பிட்டுப் பழத்தைச் சாப்பிடுமாறு கூறினார். மூத்தவன் வெறும் பழத்தோல் மட்டும் இருப்பதைக் கண்டு பாரதிதாசன் தான் சாப்பிட்டதாகக் குற்றம் சாட்டினான்.

கோபம் கொண்ட பெரிய தாயார் பாரதிதாசனின் தந்தையிடம் விடயத்தைச் சொன்னார். பாதிதாசன் பயப்படாது பெரியதாயார் வஞ்சனையாக நடந்து கொண்டார் என்று கூறி அச்சம்பவம் குறித்துதான் எழுதிய பாடலையும் தந்தையிடம் கொடுத்தார்.

'பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத் தேடிப் பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்க வேண்டும்
கெடு நினைப்பே அதிகம் அப்பா
ஒழுங்குபட வாழைச் சீப்பில்
ஒன்று விழுக்காடு தந்தாள்
விழுங்கிடவே அண்ணுவுக்கு
மீத்துக் கொடுக்க மறைப்பதென்ன?

# வித்தி என்ற மானுடன்

## அலைமோதும் நினைவுகள் சில

பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் அறுபத்தைந்தாவது பிறந்த தினம் நாளை எட்டாம் திகதியாகும். அதனை முன்னிட்டு அன்னாரின் மதிப்புக்குரிய மாணவர் ஒருவர் அவரை இங்கு நினைவு கூருகின்றார்.

கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களை நான் முதன் முதலாகக் கண்டதும் அவரது பேச்சினைக் கேட்டதும் குரும்பசிட்டியில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலாகும். அது 1956-ம் ஆண்டிலாய் இருக்கலாம். அவரிடம் வேண்டிய 'ஆட்டோகிராப்'பைத் தவற விட்டுவிட்டேனாயினும், அவர் எழுதித் தந்த அடிகள் நன்றாக நினைவிருக்கின்றன: 'தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதொறும் துறைதொறும் துடித்தெழுந்தே'.

வித்தி தமிழுக்கு மட்டும் தொண்டு செய்தவரல்லர். வேண்டிய யாவருக்கும் அவர் உவந்து உதவினார். மனிதரை இகந்த மொழித் தொண்டிலோ சமயத் தொண்டிலோ அவர் தன்னை மறக்கவில்லை. செய்த காரியங்களைப் பயன் கருதியோ எண்ணிக் கணித்தோ செய்யவில்லை. ஆய் என்ற அரசனின் வண்மை குறித்து ஏணிச்சேரி முடமோசியார் கூறியமாதிரி, செய்ய வேண்டுமென்று தோன்றியதால் செய்தார். அவ்வளவுதான். அது அவரது பொழுதுபோக்கு என்று வேண்டுமானாலும் கொள்ளலாம்.

பேராதனையில் கால்நூற்றாண்டு காலம் வாழ்ந்தவர் வித்தி. அது சாதாரண வாழ்வல்ல, பெருவாழ்வு. ஜனவரி மாதம் 22-ம் திகதி மாலை கேட்ட அந்தச் சோகச் செய்தியை என்னால் நம்ப முடியவில்லை. அதிர்ந்து போனோம். இரண்டு தினங்களுக்கு முன் சுகவீனமுற்ற செய்தி அனுப்பப்பட்டும், அந்தவாரம் முழுதும் யாழ்ப்பாணத்தில் நின்றுவிட்டதால் கிடைக்கவில்லை. திடீரென வந்த செய்தி திக்குமுக்காட வைத்தது. துயர இரவு நீண்டு கழிய, பல்கலைக்கழகத்துக்குப் போகிறேன். ஆசிரியர்கள், ஊழியர்கள்,சிற்றூழியர்கள் எத்தனையோபேர் விசாரிக்கின்றனர். அனேகமானவர்கள் வித்தி பற்றி எத்தனையோ சம்பவங்களை நினைவு கூருகின்றனர். துன்பத்தில் உதவியது, நியமனம் பெற உதவியது, மாறுதல் பெற்றுக் கொடுத்தது, காரில் ஏற்றிச் சென்றது, வைத்தியரிடம் அழைத்துச் சென்றது, வீட்டில் உபசரித்தது, யாழ்ப்பாணம் அழைத்துச் சென்றது-இப்படிப் பலப்பல.

சிங்களப் பேராசிரியர் ராஜகருணா தன் பிரச்சினை ஒன்று சம்பந்தமாகக் கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானியக்குழு அலுவலகத்துக்குச் சென்றாராம். யாரிடம் போய் எப்படித் தொடங்குவது என்ற தயக்கத்துடன் சென்ற போது, அங்கு நின்ற வித்தி, ராஜகருணாவைக் கண்டு விட்டார். உடனே சென்று விசாரித்து அவர் சென்ற காரணத்தைக் கேட்டுவிட்டு உள்ளே அழைத்துச் சென்ற வித்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசிக் காரியத்தைக் கச்சிதமாக முடித்து வைத்தாராம். 'சரியான ஆளிடம்



அகப்பட்டாய்' என்று அவரிடம் கூறினேன்.

அன்று திங்கள் காலை கூடிய கலைப்பீடக் கூட்டத்தில் வித்திக்கு மௌனஞ்சலி,இரங்கலுரைகள் பேசியவர்களால் நிதானித்துப்பேச முடியவில்லை. 'நல்ல மனிதர். எல்லோருக்கும் உதவுபவர்' என்ற கருத்தே உள்ளங்களினின்று ஒலிக்கிறது.

அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஒரு நண்பர் உதவியொன்று வேண்டி வந்தார். வித்தியிடம் போகச் சொன்னேன். அவரிடம் எப்படிப் பேசுவது என்று தயங்கிச் சிபார்சு கேட்டார் தயங்காமல் போய்க் கேளுங்கள், கட்டாயம் உதவுவார் என்று கூறி அனுப்பினேன். அவர் தயக்கம் தீரவில்லை. கண்டியிலுள்ள இன்னொரு நண்பரைப் பிடித்து வித்தியோடு தொலைபேசியில் பேசுவித்தார். மறுநாட்காலை வித்தியுடன் பேசிய நண்பரைக் கண்டேன்.

''இரவு பத்து மணிக்குத்தான் 'லைன்' கிடைத்தது. வித்தி நல்ல தூக்கத்தில் இருந்து எழுந்திருக்க வேண்டும். தெளிவாக அதிகம் பேசவில்லை. அவரைக் காலையில் ஒன்பது மணிக்குமுன் அனுப்பச் சொன்னார். நினைவிருக்குமோ தெரியவில்லை'' என்றார். நான் சொன்னேன்.

''உதவி கேட்கிற விஷயம் வித்தி உறங்கும்போது சொன்னால்கூட அவரது மனதிலே பதிந்துவிடும். உங்கடை ஆள் காலையிலை போய்ச் சேரா விட்டால்தான் தொல்லை. வித்தி இங்கே தேடி வந்தாலும் வந்துவிடுவார்'' என்றேன்

போனவர் திருப்தியோடு திரும்பியதாகப் பின்னர் அறிந்தேன்.

முன்பொரு தடவை, இங்கு வித்தி தமிழ்த்துறை தலைவராக இருந்தபோது, ஆய்வுக்கூட ஊழியர் ஒருவரின் மனைவியின் நீண்டகால சுகயீனம் பற்றி அறிந்துவிட்டார். அப்போது கண்டி வைத்தியசாலையில் இருந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ரகு இராமலிங்கம் வித்தியின் நண்பர், உறவினர்கூட அந்த ஊழியரின் மனைவியை ரகுவிடம் அழைத்துச் செல்வதாகக் கூறிய வித்திக்கு அவர் இருக்குமிடம் தெரியாது. குறிப்பிட்ட ஒரு நாட் காலையில் ஊழியரே வித்தியின் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு ஆயிற்று. அன்று காலை அவசரமாக அலுவலகம் செல்ல வேண்டி நேரிட்டதால், அந்த ஊழியர் வந்ததும் தனக்குத் தொலைபேசியில் அறிவிக்கும்படி பிள்ளைகளிடம் சொல்லிவிட்டு வித்தி போய்விட்டார். இதொன்றும் தெரியாத மாமனார் வித்திபோனபின்வெளியே வந்து உலாவினார். தேடிவந்த ஊழியர் வித்திவீட்டில்இருக்கிறாரா என்று அவரது மாமனாரிடம் விசாரித்தார். வெளியே போய்விட்டதாக அவர் கூற, வித்தி மறந்துபோயிருக்கலாம் என்று நினைத்த ஊழியர்'அவசரமில்லை, இன்னொரு நாள் பார்க்கலாம்' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இதற்குள் வித்தி பிள்ளைகளிடம் இரண்டு முறை ஆள்வரவில்லையா என்று தொலைபேசியில் விசாரித்துவிட்டார். அப்போது அலுவலகம் சென்ற என்னிடம், வருவதாகக் கூறியவரைக் காணவில்லை என்றார். வித்தியின் வீட்டுப்பக்கமாக அவர் போனதைக்கண்டதாகக் கூறினேன். வீட்டில்திரும்ப விசாரித்து நடந்ததை அறிந்து மாமனார் மீதும் கோபம். ஊழியர் அலுவலகத்துக்கு வருவார் வருவார் என்று குட்டி போட்ட பூனைமாதிரி அலைந்தார். பலனில்லை. அவருடைய வீடு எங்கேஎன்று விசாரித்தார். எனக்கும் சரியாகத் தெரியாது. ஒரு குறிப்புக்கு இடத்தைக்கூறி,காரைத் தூர நிறுத்திவிட்டு ஒற்றை வழிப் பாதையில் போய்த் தேடவேண்டுமென்றேன். எனக்கு வகுப்பு இருந்தது. வித்திபோய்த்தேடி, வீட்டில் ஒருவருமில்லாமைகண்டு, அயலவரிடம் விசாரித்து, எப்படியோ ஊழியரையும் மனைவியையும் கண்டுபிடித்து ரகுவிடம் சேத்துவிட்டார்

கந்தானை மலைமீதுள்ளகுறிஞ்சிக்குமரன் கோயில் ஐயர் இரவு பன்னிரண்டரை மணிக்குமேல், மனைவிக்குச் சுகமில்லை என்று அறிவித்தார். உடனே கமலா அக்காவை எழுப்பி ரகுவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆஸ்பத்திரிக்கு வருமாறு கூறும்படி சொல்லிவிட்டுப் பறந்து சென்று ஐயரையும் மனைவியையும் அழைத்துச் சென்றார் வித்தி. இப்படியான நிகழ்ச்சிகள், ஏராளம். அவரோடு சேர்ந்தவர்களுக்குள்ளும் யாரிடம் வேலைவாங்கலாமென்று தெரிந்து அவர்களைக் கூசாமல் கரைச்சல் படுத்துவார். தனக்காக அல்ல: உதவி தேவைப்படும் பிறருக்காக.

ஒரு தடவை நான் டாக்டர் ரகு ராமலிங்கத்திடம் கேட்டேன் 'உங்களுக்கும் வித்தியாலை சரியான கரைச்சலாயிருக்குமல்லவா?' என்று. இதே கேள்வியைப் பேராசிரியர் ம. மு. உவைஸ் அவர்களிடமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணனிடமும் கூடக்கேட்டதுண்டு. மூவரும் தந்த பதில் கிட்டத்தட்ட ஒன்றேதான்; 'கரைச்சல்தான் ஆனால் முடியாது என்று எப்படிச் சொல்லஏலும்? வித்தி எதை, எப்ப கேட்டு முடியாதுஎன்றுசொன்னார்?

இம் மூவரின் பதிலிலும் இருந்த ஏதோ ஓர் உணர்வு அவர்களின் முடிவுகளையும், செயல்களையும் நிர்ணயித்ததை அறிந்துகொள்ளலாம். ஆனால் அந்த உணர்வு எல்லோருக்கும் இருக்கிறதா? அத்தகைய உணர்வு இல்லாவிட்டால், மற்றவர்கள் செய்யட்டும் எனக்கும் என்று கலங்காது 'கம்' மென்று இருந்துவிடலாம் போலும். அது எவ்வாறாயினும் அத்தகைய கேள்விகளுக்கு வித்தியிடம் நேரம் இருந்ததில்லை.

ஒன்றும் செய்யமுடியாத விடத்துத்தான் அவருக்கு ஏமாற்றம் மற்றவர்கள் தன்னைத் தேடி வரவேண்டுமென்று அவர் என்றும் இறுமாந்து இருந்ததில்லை. கண்டிக்கு வரும்போதெல்லாம்தெரிந்தவர்இல்லங்களைத் தேடி அலைவார். பெரியோர், சிறியோர் என்ற பேதம் அந்தப் பார்வையில் இல்லை. கடைசியாக வந்தபோதும் ஒருநாள் முழுவதும் அப்படித்தான் அலைந்தார். செப்டம்பர் முதலாம் திகதி கொழும்பு திரும்புவதற்கு வழக்கம்போல் அவசர அவசரமாகப் பேராதனைச் சந்தி புகைவண்டி நிலையத்திற்குச் சென்றிருந்தபோது,சுங்கான் புகைப்பதற்குப் புகையிலைத் தூளைத் தேடினார், காணவில்லை. ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவரின் வீட்டில் விட்டுவிட்டு வந்தமை அவர் நினைவுக்கு வந்தது. சிரித்துவிட்டு, ''அடுத்த முறை வருகிறபோது எடுக்கலாம்'' என்றார்.

வருவார் என்றே நம்பினோம்.இனி அந்த வரவில்லை. அந்த அன்பு முகத்தையும், முறுவலையும் இலேசில் இழப்பதற்கில்லை. ஆயினும், பாடத்திலோ, தனிப்பட்ட முறையிலோ உதவி தேவைப்பட்டபோதெல்லாம் ஓடிவந்த அந்த அபய நிழல்...? எங்களுக்குப் பேரிழப்பு, அழுகிறோம்.ஆனால் வித்திக்கு?

ஓங்கிய புகழிலும்,அன்பிலும் திளைத்து நின்ற வித்தியை வீழ்த்தி விடுவார்களா, அந்த அன்புள்ளம் சாம்பிவிடுமா, நோய்நொடி பட்டு விடுமா என்று அங்கலாய்த்துக் கலங்கிய வேளை,'அப்படியும் நடக்குமா? ஏற்றுவதும், வீழ்த்துவதும் உங்கள் இஷ்டத்துக்கோ நீண்ட நற்கருமப் பெருமையை ஓரத்துப் புன்களங்கம் விழுங்கிடப்போமா? என்று சவால் விட்ட மாதிரி எல்லாம் நடந்துவிட்டன. புகழேணியில் வித்தி ஏறிச்சென்ற சுவடும் மெல்ல, மெல்ல விளங்குகிறது.

நாங்கள் தொடர்ந்தும் அடிமுடி தேடுகிறோம் ●

பேராசிரியர் சி. தில்லைநாதன்
தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# வெறும் உணவை சத்துணவாக்க!

நாம் உண்ணும் உணவுப் பண்டங்கள் சில மூலக்கூறுகள் கண்ணிகளாய் இணைந்த நீண்ட சங்கிலிக் கோவையான அமைப்புடையவை. இவற்றைப் பல சிறிய மூலக்கூறுகளாக (தனித்தனிக்கண்ணிகளாக) பிளந்து விட்டால் உணவு எளிதில் செரிக்கும் உடலில் உள்ள பல நொதிகள் இந்த வினைக்குத் துணைபுரிகின்றன. இந்த நொதிகளை நாம் எளிதில் பெறமுடியும். தமது உணவுப் பொருள்களை குறிப்பாக விதை உணவுப் பொருள்களை புளிக்க வைப்பதன் மூலம், விதைகளை முளைக்க வைப்பதன் மூலமும் சாதாரண உணவுப் பொருளை சத்துணவுப் பொருளாக மாற்றலாம்.

புளிக்க வைப்பதன்மூலம் நம் உணவுப் பொருள்களில் உள்ள புரதங்களையும் வைட்டமின்களையும் மிகைப்படுத்தலாம். ராசிக்கூழ், கம்பங்கூழ், சோளக்கூழ் முதலியவற்றை நாம் புளிக்கவைக்கிறோம். இவற்றை புளிக்க வைப்பது சில நுண்ணுயிர்கள் இவற்றை நாம் கண்ணால் எளிதில் காண இயலாது. பெருக்காடியின் மூலம்தான் காண இயலும். இவை பூஞ்சணவகை. மற்றும் பாசிவகை ஆகியவற்றைச் சேர்ந்த நுண்ணுயிர்கள். இவை உணவுப் பொருள்களினின்றும் தங்களது வளர்ச்சிக்கு வேண்டியவற்றை எடுத்துக் கொள்கின்றன இந்த வளர்ச்சியின் போது உணவுப் பொருள்களை எளிதில் செரிக்கும் வகையினவாக மாற்றுகின்றன. உணவைப் புளிக்கவைத்து பக்குவம் பண்ணும் பொழுது அதற்குரிய பக்குவத்துடன் செய்ய வேண்டும். அதிகமாகப் புளிக்க வைத்துவிட்டால் (கூடுதலான நாட்களுக்கு புளிக்க வைத்துவிட்டால்) அது புளித்த உணவல்ல அழுகிப் போன உணவு இது தீங்கு விளைவிக்கக் கூடியது. ஊறுகாய் போன்றவையும் புளிக்க வைத்த உணவு வகையைச் சேர்ந்ததே. எனினும், இவற்றை வெகு நாட்களுக்கு பாதுகாக்க உப்பிலிடுகின்றோம்.

சில தானிய உணவுப் பொருள்களை முளைக்க வைப்பதன்மூலம் இவற்றை சத்துணவாக மாற்றலாம் ராசி, கம்பு, கோதுமை பச்சைப் பயறு முதலியவற்றை முளைக்க வைத்து உண்ணலாம். இவற்றை ஈரமான துணியில் பரப்பி வைத்து இரண்டு, மூன்று நாட்கள் ஈரப்பதத்தில் வைத்தால் இவற்றினின்றும் முளை கிளம்பும். முளை சுமார் கால் அங்குலம் முதல் அரை அங்குலம்வரை (6- 12 மி. மீ.) இருக்கும் பொழுது இவற்றில் நொதிகள் நிறைய இருக்கும். விதையுடன் முளைத்த செடிகளை உணவாக உண்ணலாம். இதன்மூலம் சாதாரண உணவை எளிதில் செரிமானமாகும், சத்துணவாக மாற்றும் இயல்புடைய நொதிகளைச் செலவில்லாமல் பெறுகிறோம் முளைத்த உணவு எளிதில் செரிக்கும். உணவு உண்டபின் சீரண மாத்திரைகளை தேடிப் போக வேண்டாம்.

தொகுப்பு- க. கனகராசா
ஆக்கம்- ''கலைக்கதிர்''

# தமிழைப் பிழையின்றிக் கையாளச் சில வழிகள்

சொக்கன்

## சென்றவாரக் கட்டுரையின் இறுதிப் பகுதி

**வாக்கியங்களிலே கையாளப்படும் சொற்களும் அவற்றின் பொருளுணர்ச்சியும்,**

நாம் கையாளுஞ் சொற்கள் யாவும் பொருள் கொண்டவை. தொடக்கத்திலே ஒரு பொருளே தந்த சொற்கள் பல, காலப் போக்கிலே வேறு வேறு பொருள்களைத்தருவனவாய் வளர்ச்சியடைவதையும் சில சொற்கள் தாம் பெற்றிருந்த பொருளை இழப்பதையும் நாம் அநுபவ வாயிலாகக் காண்கிறோம்.

உ-ம் i. மணம் — இச் சொல் தொடக்கத்திலே நல்ல மணத்தையே குறித்தது. பின்பு காரணப் பெயராய்த் திருமணத்தைக் குறிக்கப் பயன்பட்டது. இன்று இவற்றோடு அருவருப்பை உண்டாக்கும் தீய மணத்தையும் (துர்க்கந்தம்) அது குறிக்கிறது. 'சீ இந்தச் சாய்கடை மணக்கிறது,' என்னும் வாக்கியத்தை நோக்குக.

ii. நாற்றம் — இன்று இது நன்மணம் என்ற கருத்தினை இழந்துள்ளது.

இவை போலவே காமம் (முற்காலத்திலே காதலுக்குப் பயன்பட்டசொல்) மாண்டது மாட்சிமைப்பட்டது என்பது (முன்னைய பொருள்) இறும்பூது (புதுமை, வியப்பு என்பன முன்னைய கருத்துக்கள்) முதலாக வரும் சொற்களையும் நோக்குக.

பெரும்பான்மையரான மக்களாலே, பிழையான சொல்லாயிருப்பினும் மீண்டும் மீண்டும் கையாளப்படுவதால் ஒரு சொல் புதிய கருத்தைத் தருவதும் உண்டு

உ-ம்: பாவனை. இதன் உண்மையான பொருள் ஒன்றை வேறொன்றாகக் கருதிக் கையாளல் என்பதே. இன்று இந்தச் சொல் பயன்பாடு என்ற புதுப்பொருளைப் பெற்றுள்ளதை நோக்கலாம்.

உ-ம்: இந்தப் புடைவை சிறந்த பாவனைக்குரியது.
இது நல்லாய்ப் பாவிக்கும்.

எனினும் இத்தகைய சொற்களை மிகவும் நெகிழ்ச்சியான வகையிலே வாக்கியங்களிலே கையாள்வதால் ஏற்படக்கூடிய தீமையையும் நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.' இன்று ஆங்கிலச் சொற்கள், வடசொற்கள் ஆகியவற்றை இவ்வாறு கலப்புச் சொற்களாய் அமைத்துத் தமிழுக்கு வேண்டாத பல சொற்களைச் சேர்க்கும் விபரீதம் நடந்து வருகிறது.

உ-ம்: சிக்காளி =
Sick - (நோய்) + ஆளி.
க்ஷீணத்தது =
க்ஷீணம் - தேய்வு.
பிறக்கிருசியார் =
Proctor ஓடு 'ஆர்' மரியாதைப் பன்மை சேர்க்கப்பட்டுள்ளது.
தனித்துவம் =
தனி என்ற தமிழ்ச் சொல்லோடு 'துவம்' என்ற வடமொழி விகுதியைச் சேர்த்தமைத்த சொல். இத்தகைய சொற்களைக் கலப்புச் சொல் (Hybrid) என்பர்.

**தொழிற்பெயர் வினையடியாதல்**

தொழிற்பெயர் வினையடியாகப் பிறப்பது. வினையடியிலிருந்தே தெரிநிலைவினைமுற்றும் பிறக்கின்றது.

உதாரணம்: அடித்தான்—
அடி—வினையடி.

சிலவேளைகளிலே வினையடிக்குப் பதிலாகத் தொழிற்பெயரையே வினையடியாக்கி வாக்கியங்களிற் கையாள்வர்.

உ-ம்: முயற்சி+கிறு+ஆன் = முயற்சிக்கிறுன். இதனை முயல் + கிறு + ஆன் எனப் புணர்த்தி முயல்கிறுன் என அமைத்துக் கொள்வதே சிறப்பு.

சில இலக்கண வழுக்கள் வாக்கியங்களிலே இடம் பெறுதல்:

i. சொற்கள் வெளியே வராமல் குழற, கண்களால் தாரை தாரையாக நீர் வடிந்தபடி அவள் உயிர் பிரிந்தது.

இவ்வாக்கியத்திலே 'கண்களால் நீர் வடித்தபடி' அவள் எனப் பிறவினையில் அமைக்க வேண்டிய கருத்தைத் தன் வினையில் அமைத்துள்ளமை வழுவாகும்.

ii. அப்படிப்பட்ட ஒருவர் தான் நம்முடைய பாரதியார்.

ஒருவர் என்ற சொல்லிலே 'அர்' என்ற பன்மை விகுதி வந்துள்ளது; ஒருவரையே இங்கு மரியாதை பன்மையில் 'அர்' விகுதி கொடுத்து அழைத்துப் பின் தான் என்ற ஒருமை இடைச் சொல்லை அளித்தது எண் வழு. 'அவர் தன் மகனை இழந்தார்,என்று வேற்றுமைத் தொகையாகக் கையாண்ட விடத்தும் எண்வழு நிகழ இடம் ஏற்பட்டுள்ளது.

iii. இந்த நாட்டிலே வறுமையும், துன்பமும், நோயும் தாண்டவமாடுகின்றது,

இங்கு எழுவாயாக மூன்று சொற்கள் வருகின்றன மூன்றுஞ் சேர்ந்து கூட்டெழுவாயாக அமைந்தபின் ஒருமைப் பயனிலையைக் கையாண்டது எண்வழு.

iv நீண்டகாலம் நிலைக்கக் கூடியதும் எவராலும் போற்றக்கூடியதும் எமக்குப் புகழ் தரக்கூடியதுமான அறங்களையே நாம் செய்தல் வேண்டும்.

இங்குக் 'கூடியதும்' என்ற சொல் மூன்றுமுறை கையாளப்படினும் அம்மூன்றும் ஒரே பொருளைக் குறிக்க வருவனவே. ஆனல், இவ்வாக்கியத்திலே இவற்றை அடைகளாகப் பெற்ற பொருள், (அறங்கள்) பன்மையில் அமைந்திருப்பதால் எண்வழு நேர்ந்துள்ளது.

v. எம்முடைய செயல்கள் பிறர்க்கு நன்மையாகவும், துன்பம் தராதனவாகவும்,பயனுடையனவுமாய் இருத்தல் வேண்டும்.

'உம்' மையிடைச் சொல் கொண்டு சொற்களை இணைக்கும் பொழுது அச்சொற்கள் ஒரே தன்மையானவாயிருத்தல் வேண்டும்.

'நன்மையாகவும்' துன்பம் தராதனவாகவும், பயனுடையனவாகவும் என்று மூன்றும் மூன்று வெவ்வேறு வடிவங்களில் வந்துள்ளமை வழுவாம்.

நன்மை தருவனவாகவும், துன்பம் தராதனவாகவும், பயன் தருவனவாகவும் இருத்தல்வேண்டும் என அமைவதே சிறப்பு.

vi. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அவதரித்தார்.

நாவலரவர்கள் என எழுவாய் அமைந்துள்ளது. அவ்வாறுயின் பயனிலையும் அவதரித்தார்கள் என்றிருப்பதே பொருத்தம். வேறு வகையில் எழுதுவதாயின், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அவதரித்தார் என எழுதலாம்.

vii. அவர்கள் அவனுடன் நடந்து கொள்ளும் முறையை நோக்கினல் அவர்கள் அவனை எவ்வளவு வெறுக்கிறார்கள் எனத் தெரியும்.

இவ் வாக்கியத்தின் பயனிலை 'தெரியும்' என்பது, 'எது தெரியும்?' என்ற வினவிற்கு விடை கிடைத்தால் மட்டுமே இஃது எழுவாயமைந்த வாக்கியம். தோன்றா எழுவாய் அமைவதற்கும் இவ் வாக்கியத்திலே இடமில்லை. 'என' என்னும் இடைச் சொல்லிற்கு மாறாக 'என்பது' என்ற சொல்லை அமைத்துக்கொண்டால் இஃது எழுவாயுடைய பிழையற்ற வாக்கியமாய் அமைந்திருக்கும்.

viii இந்த நூல் பேராசிரியரால் பல்லாண்டுகள் முயன்று எழுதியது.

'பேராசிரியரால்' என்ற மூன்றும் வேற்றுமைக் கருத்தா அமைந்த இவ் வாக்கியத்திலே நூல் என்னும் செயப்படு பொருள் எழுவாய் வந்துள்ளது. எனவே செயப்பாட்டு வினைக்குரிய'படு' என்ற விகுதி பெற்று 'எழுதப்பட்டது' எனப் பயனிலை அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும். வேறு வகையாய் அமைப்பதாயின் 'இந்த நூல், பேராசிரியர் பல ஆண்டுகள் முயன்று எழுதியது' என அமைத்துக்கொள்ளலாம். (செயப்பாட்டு வினையைச் செய்வினையாகக் கூறும் மரபும் உள்ளது) ஆனல்,பேராசிரியரால் என்ற மூன்றும் வேற்றுமைக் கருத்தா, வாக்கியத்தில் இடம்பெற்ருல், எழுதப்பட்டது என்ற செயப்பாட்டு வினை முற்றே வரல் வேண்டும்.

ix. ஒரு மனிதன் என்னைச் சந்திக்க வந்தான்.

'ஒரு' என்னுஞ் சொல் அஃறிணையில் வரும். உ-ம்: ஒரு வீடு, ஒரு புத்தகம், ஒரு பேனை. உயர்திணையில் வரும் பொழுது அச் சொல்லோ அஃது எந்தப்பாலைக் குறிக்குமோ அந்தப் பாலுக்குரிய விகுதி சேர்க்கப்பட்டே வழங்கல் வேண்டும்

ஒருவன் மனிதன்.
மனிதன் ஒருவன்.

என்ற இவ்விரு வடிவங்களில் ஏதாவதொன்றைக் கையாளலாம். (ஒருவன் என்பதற்குப் பெண்பால் ஒருத்தி, ஒருவள் அன்று என்பதும் கவனிக்கத்தக்கதே.)

x. ஒரு, ஓர்,அது, அஃது வருமொழித் தொடக்கத்தில் உயிர் வருமாயின் ஒரு, ஓர் எனவும், அது, அஃது எனவும் அமைவது முறை உ+ம் ஓர் ஆடு, அஃது என்ன?

xi. கம்பன் யாத்த இராமகாவியத்தில் தேவர் முதல் விலங்கு வரை பல பாத்திரப் படைப்புகள் இருக்கின்றனர்.

இவ் வாக்கியத்திலே பயனிலையாய் வந்துள்ள சொல் இருக்கின்றனர் என்பது, எழுவாயாகப் 'பாத்திரப் படைப்புக்கள்- என்ற சொற்தொடர் அமைந்துள்ளது. படைப்புக்கள் அஃறிணை இருக்கின்றனர்- உயர் திணை. எனவே இவ் வாக்கியத்திலே திணை வழு ஏற்பட்டுள்ளது.

கம்பன் யாத்த இராம காவியத்தில் தேவர் முதல் விலங்குகள் ஈறுக அவனுலே படைக்கப்பட்ட பாத்திரங்கள் பலர் இருக்கின்றனர் (பாத்திரங்கள்- வடமொழிச் சொல், அஃது அறிஃணைக்கே உரியது எனினும் இன்று வழக்கிலே இஃது உயர் திணை அஃறிணை இரண்டிற்கும் பொதுப் பெயராகக் கையாளப்படுகின்றது )

''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல''. இஃது உண்மையே காலமாற்றம் மகத்தானது என்பதை நாம் மறுக்க வில்லை. எனினும் பகுத்தறிவுக்குகந்த இலக்கண விதிகளை மீறல் வேண்டியதில்லை. 'இலக்கணம் மொழியின் அளவையியல்' என்பர். அளவையியல் (Logic) சிந்தனையோடு சார்ந்தது. எனவே அளவையியற்றன்மை வாய்ந்த இலக்கணத்தினை எவ்வித காரணமுமின்றி மீறுதல் சிந்தனையின் பாற்பட்டதாகாது.

வாக்கிய அமைப்பிலே மயக்கம் ஏற்படல்.

i. இராமன் இலக்குமணன் சீதை ஆகியவரோடு வனத்துக்குச் சென்றுன்.

இவ்வாக்கியத்திலே மூன்று பெயர்கள் அடுத்தடுத்து வருகின்றன. குறியீடுகள் (Punctu-ation) எவையும் கையாளப்படவில்லை. வாக்கியப் பொருள் புலப்பட்டாலும் எழுவாய் பற்றிய மயக்கம் உண்டாகின்றது. இதே வாக்கியத்தை,

i. இராமன், இலக்குமணன், சீதை ஆகியவரோடு வனத்திற்குச் சென்றுன் எனக் குறியீட்டு விளக்கம் ஏற்படுத்தலாம். இராமனுனவன் இலக்குமணன் சீதை ஆகியவரோடு வனத்துக்குச் சென்றுன் என எழுவாய்ப் பெயருக்குச் சொல் உருபினை அளித்தும் தெளிவையுண்டாக்கலாம்.

ii. மகாத்மா காந்தி அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மைக் கொன்றவனையும் மன்னித்தார்.

இவ்வாக்கியத்திலே 'கொன்றவனை' யும் என்ற சொல், மயக்கத்தை ஏற்படுத்துகின்றது. (கொன்றவனை (கொன்றபின்) எவ்விதம் மன்னிப்பது?)

''மகாத்மா காந்தி அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத்தம்மைச் சுட்டவனையும் (கொல்லமுன்வந்தவனையும்) மன்னித்தார்'' என எழுதுவதே முறை.

iii. பத்திவெள்ளம் கரைபுரண்டோடிக் கொழுந்து விட்ட காலம் பல்லவர் காலம் எனலாம்.

இவ்வாக்கியத்திலே வெள்ளம் கரைபுரண்டோடிய தற்கும் கொழுந்து விட்டதற்கும் எவ்வித தொடர்புமில்லை உருவகங்களை எவ்வித கருத்துமின்றிக் கையாள்வது மயக்கத்தை ஏற்படுத்துவதேயாகும்.

iv காலஞ்சென்றபிரதமர் டி. எஸ்.சேனநாயக்க இந்நாட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார்.

இவ்வாக்கியத்திலே காலஞ் சென்றவர் பிரதமரா டி.எஸ். சேனநாயக்கவா என்ற கேள்வி எழுகின்றது. பாடல்களிலே பொருள் கொள்வது போன்று பொருள் கொள்ள வேண்டிய தேவை, உரை நடை வாக்கியத்திற்கு வேண்டியதில்லை.

'முன்னுட் பிரதமர், காலஞ் சென்ற டி. எஸ் .சேனநாயக்க' என எழுதினுல் மயக்கத்திற்கு இடமிராது

v. இந் நாடு முன்னேற அயராமுயற்சியும் நாட்டுப் பற்றுங்கொண்ட இளைஞர் முயலவேண்டுமென்று உறுதியாக, திட்டவட்டமாக உள்ளங்கை நெல்லிக்கனியாக, திடமாக, துணிவாக எடுத்துரைக்க விரும்புகிறேன்

இவ்வாக்கியத்திலே உறுதியாக என்ற ஒரே சொல்லிற் சொல்ல வேண்டியதைத் திட்டவட்டமாக, உள்ளங்கை நெல்லிக்கனியாக, திடமாக, துணிவாக என்று பல சொற்களையும் சொற்றொடர்களையும் கையாண்டு நீட்டியதனுலே கருத்து உறுதிப்பட்டு விட்டது என்று சொல்லல் இயலாது

vi. செல்வநாயகம் கந்தையா, முன்னுள் அதிபர்,தலத்து ஒயா மகாவித்தியாலயம் காலமானுர்.

இவ்வாக்கியத்திலே தலத்து ஒயா மகாவித்தியாலயம் காலமாகவில்லை. காலமானவர் செல்வநாயகம் கந்தையாவே!

vii அவனுடையஉள்ளத்திலே அறிவு ஒளிவிட்டுப் பிரகாசித்தது ஒளிவிடுவதும் பிரகாசிப்பதும் ஒரே கருத்தினையே தருவதாற் கூறியதும் கூறல் என்னும் குற்றம் ஏற்படுகின்றது

viii. இல்லம் என்றசொல்லினை அந்நாட்டவர் குறிப்பு வினை முற்ருக என்றும் கையாளாது இடப்பெயராகவே கையாள்வதிலிருந்து அவர்களின் செல்வவளம் புலனுகின்றதன்றோ?

'இல்லம்' என்ற சொல் குறிப்பு வினைமுற்ருனுல் (நாம் பொருள்) 'அற்ரேம்' என்று அது பொருள்படும், அந்நாட்டிலே

'இல்லம்' என்ற சொல் குறிப்பு வினை முற்ருனுல் (நாம் பொருள்) 'அற்ரேம்' என்று அது பொருள்படும். அந்நாட்டிலே வறியவர் இல்லாமையாலே அவர்கள் அச்சொல்லை அப்பொருளிலே கையாளார் வீடு என்ற இடப்பெயச் சொல்லாகவே கையாள்வர் என்ற உண்மை எத்தனை பேர்க்கு விளங்கும்? தமிழிலக்கணத்தில் அடிப்படை அறிவு பெருதவர்களுக்கு இந் நீண்ட வாக்கியம் எவ்வித பொருளையும் தராது. எனவே, எழுதும் கருத்து, எல்லார்க்கும் புலனுகக் கூடிய வகையிலே வாக்கியங்கள் அமைக்கப்பட வேண்டும்

ix. அவள் கர்ணகடூரமான குரலிலே கம்பீரமாகவும், இனிமையாகவும் பாடினுள்.

இவ் வாக்கியத்திலே 'கர்ணம், கடூரம்' என்ற இரு புதுச் சொற்கள் கையாளப் பட்டுள்ளன. கர்ணம் என்பது காது, கடூரம் என்பது கடுமை காதுக்குக் கடுமையான குரல் கம்பீரமாகவும் இனிமையாகவும் இருத்தல் கூடுமோ? இதிலே நாம் கவனிக்கவேண்டியது யாதெனில் எமக்கு விளங்காத சொற்களைப் பொருளுணர்வின்றி வெறும் ஓசைச் சிறப்பிற்காகக் கையாளல் கூடாது என்பதே.

x. நாவலர், காசிவாசி செந்திநாதையர் போன்ற பெரியார்கள் தோன்றியிராவிடில் இலங்கையிலே சைவசமயம் என்ருே அழிந்துபோயிருக்கும். 'போன்ற பெரியார்கள்'

(15-ம் பக்கம் பார்க்க)

சமூக நவீனம்

# காலங்கள் மாறும்



கே.எஸ்.ஆனந்தன்

## அத்தியாயம் பதின்மூன்று

ஆஸ்பத்திரி கட்டிலில் காயங்களுக்கு கட்டுப்போட்ட நிலையில் படுத்திருக்கும் கந்தையா மாஸ்டரைப் பார்த்தபோது ரகுவுக்கு கண்கள் கலங்கி விட்டன. உடை கூட மாற்ருமல் வீட்டில் போட்டிருந்த உடைகளுடன் ஓடிவந்த அவனைப் பார்த்ததும் கந்தையா மாஸ்டருடைய கண்களும் கலங்கிவிட்டன.

''தம்பி எனக்கு ஒன்றும் பலத்த காயமில்லை. நீங்கள் பயப்படும்படியாக ஒன்றும் நடக்கவில்லை. சாதாரண சிராய்ப்புக்களோடு சரி'' என்று சிரித்தார்.

''நல்லவர்களுக்குத்தான் சோதனைகளும். செய்தி கேட்டதும் நான் கலங்கிப் போய் விட்டேன்.''

''அவனை மரத்துடன் கட்டிப் போட்டிருக்கிருர்கள். அவனைத் தண்டிப்பது முக்கியமல்ல அவனுக்குப் பின்னேயிருக்கும் தீயசக்திகளை கண்டறிவது தான் முக்கியம். இதன் மூலம் பல பிரச்சனைகளுக்கு முடிவு ஏற்பட வாய்ப்பு உண்டு.' என்ருர்.

ஆஸ்பத்திரியிலிருந்தே பொலிசாருக்கு தகவல் அனுப்பிவிட்டு அங்கே சென்ருன் ரகுவரன்.

தெருவோரத்திலுள்ள ஒரு மரத்துடன் முப்பத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒருவன் கட்டப்பட்டிருந்தான். அவனைச் சுற்றி பெரும் கூட்டமே கூடியிருந்தது. ரகுவரனைக் கண்டதும் கூடி நின்றவர்கள் விலகி வழி விட்டுக் கொடுத்தனர். வெகு நிதானமாக அவனுக்குச் சமீபமாகச் சென்று நின்றவன் எதுவும் பேசாமல் சிறிது நேரம் அவனையே உற்றுப் பார்த்தான்.

'உன்னை அடித்தார்களா?' என்று மிகக் கனிவாகக் கேட்டான்.

'ம்' என்று தலையாட்டினுன்.

அடிப்பதினுல் ஒருவன் திருந்துவான் என்ருல் சமூகத்தில் பெரும்பாலோரை அடித்து நொருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விடுங்கள்' என்ருன்.

'சார் இவன் ஓடிவிடுவான்' என்ருன் ஓர் இளைஞன்.

'அவன் ஓட மாட்டான். நீங்கள் அவிழ்த்து விடுங்கள்' என்ருன்.

கட்டப்பட்டு நின்றவன் அவனை வியப்புடன் பார்த்தான்.

'என்னப்பா அப்படிப் பார்க்கிருய்? உனக்கு நம்பிக்கையில்லையா? நிட்சயமாக உன்னை யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள் பயப்படாதே. உன்னைப் பற்றிய சகல விடயமும் எனக்கு தெரியும் என்று ரகுவரன் கூறியதும் அவன் முகத்தில் திகில் படர்ந்தது. வியப்புடன் அவனைப் பார்த்தான். அவன் கதைத்துக் கொண்டிருக்கும் போதே கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டு விட்டன.

'உன் பெயரென்ன?''

அவன் பதில் கூருமல் மௌனமாக நின்றிருந்தான்.

'நீ என்ன நினைக்கிருய்? உன் பெயர் என்ன? சகலவிடயமும் எனக்குத் தெரியும். நான் ஏன் உன்னை பெயர் கேட்டேன் தெரியுமா? நீ உண்மை பேசுகின்ருயா என்பதை தெரிந்து கொள்ளத்தான் நீ உண்மை பேசினுல் உனக்கு உதவி செய்வேன். இல்லையெனில் நீ தூக்கு மேடை ஏற நேரிடும்'.

'என் பெயர் சுப்பிரமணியம்'

'குட், நல்ல பெயருள்ள நீ ஏன் இப்படி எல்லாம் நடக்கனும்?'

'......'

'நீ பதில் சொல்லமாட்டாய். இப்போ பொலிசார் வருவாங்க கேட்கவேண்டிய முறைப்படி கேட்பாங்க நீ நினைத்தமாதிரி மாஸ்டரைத் தாக்கிவிட்டு ஓடமுடியாது மாட்டிக்கொண்டாய். செல்வாக்குள்ள மனிதர்கள் பொலிசிலிருந்து விடுவித்து விடுவார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிருய். அது நடக்க முடியாத காரியம். மனிதன் நினைக்கிறபடி நடந்துவிட்டால் நீதி செத்திருக்கும். அப்பாவி ஒருவர் கொல்லப்பட்டிருந்தால் நீ ஓடித்தப்பியிருப்பாய். நீங்கள் போட்ட கோடுகள் தவருன கோணங்களிலமைந்து விட்டன. இறைவன் சரியான கோடு போட்டு உன்னை மடக்கிவிட்டான். இதோ பார் சுப்பிரமணியம் நீ மனிதப் பிறவி. ஆறறிவு படைத்தவன். உண்மை பேசினுல் நன்மை பெறுவாய் இல்லையெனில் மிருகங்களை அடக்கியாளும் மனிதர்கள் உன்னை சும்மாவா விடுவார்கள்? ஏற்கனவே இங்கு நடந்த கொலைகள் இரண்டும் உன் தலையில் தான் சுமத்தப்படப் போகின்றன. இனி நீ தப்ப முடியாது' என்று மிக ஆணித்தரமாகக் கூறினுன்.

அவனுடைய முகத்தில் மரண பீதி நிலவியது. என்ன செய்வது என்று அறியாமல் குழம்பி நின்ருன். ரகுவும் எதுவும் பேசாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்ருன்

'என் முன்னிலையில் உண்மைகளை ஒப்புக்கொண்டால் உனக்கு நான் உதவ முடியும். இல்லையேல் உன் முடிவை நீயே தீர்மானித்துக்கொள்' என்று அவன் கூறி முடிப்பதற்குள் அவன் காலடியில் விழுந்தான் சுப்பிரமணியம்.

'ஐயா என்னைக் காப்பாற்றுங்கள். நான் எந்தக் கொலையும் செய்யலீங்க கொலைகாரப் பாவிகள் குணரட்ணம் ஐயாவின் ஆட்கள்தானுங்க– காசுக்கு ஆசைப்பட்டு இந்த வேலையில் இறங்கினேன். நிட்சயமாக கொலை செய்யும் நோக்குடன் வரலை' குலுங்கி குலுங்கி அழுதான்.

'சரி இதே வாக்கு மூலத்தை பொலிசிடம் கூறு மற்றவர்களைப் பிடிப்பதற்கும் உதவி செய். உன்னை காப்பாற்ற நான் உதவி செய்வேன்' என்று கூறி முடிக்கவும், பொலிஸ் ஜீப் வந்து நிற்கவும் சரியாயிருந்தது.

ஜீப் வண்டியில் இருந்து இறங்கிய சப் இன்ஸ்பெக்டர் லியனகேயும், கான்ஸ்டபிள்களும் ரகுவுக்கு முன்னுல் வந்து 'சல்யூட்' கொடுத்து மரியாதை செய்து நின்றனர்.

'மிஸ்டர் லியனகே...' என்று ஆரம்பித்து சிங்களத்தில் நடந்த யாவையும் கூறினுன்.

'மாத்தயா மட்ட சிங்கள தன்னுவ' என்ருன் சுப்பிரமணியம்.

'கொந்தாய் கொந்தாய்' என்ருன் ரகு சிரித்தவாறே.

'ஐயா நீங்கள் கூறியவை யாவும் கேட்டபோது உண்மையிலேயே என் மனம் மாறிட்டுதுங்க. இப்படி என் முன் நின்று நல்ல புத்தி சொன்ன முதலாவது ஆள் நீங்கள் தானுங்க. நீங்கள் இன்ஸ்பெக்டரிடம் என்னை அடிக்க வேண்டாம் என்று கூறியதும், என்னைக் காப்பாற்ற உறுதியளித்ததையும் கேட்டப்போ உண்மையிலேயே நான் செய்த பாவங்களை எண்ணி வெட்கப்படுகின்றேன். உங்களைப்போன்ற ஓர் நேர்மையானவர்கிட்ட என்னை ஒப்படைக்கத்தான் இப்படியாக இறைவன் என்னைச் சிக்க வைத்தாரோ' என்று அவன் மனம் நொந்து அழுதான்.

'சுப்பிரமணியம் உன்னிடமுள்ள நல்ல குணத்தினை பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கு பயப்படாமல் நீ சட்டத்துடன் ஒத்துழைத்தால் உனக்கு மன்னிப்பு கிடைக்கும். உன் பாதுகாப்பு கருதியே உன்னை பிணையில் விடக்கூடாது என்று கூறியுள்ளேன். போய்வா' என்று கூறியவன், அங்கே நின்றவர்கள் பக்கம் திரும்பி உங்களுக்கும் எனது நன்றி உங்கள் ஒத்துழைப்பினுல் உங்கள் சமூகத்தினைப் பிடித்திருந்த கொடிய நோயை விரட்டக் கூடிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியுள்ளீர்கள் உங்கள் துணிச்சலும் செயலும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவிருக்கட்டும்' என்று கூறி ஜீப் வண்டியை நோக்கி நடந்தான்.

அடிக்கு மேல் அடி அடித்தும் கேட்க முடியாத விடயங்களை யெல்லாம் சில நிமிடங்களில் அன்பான பேச்சினுல் சாதித்து விட்ட அவனுடைய ஆற்றலையும், நுண்ணறிவையும் மெச்சியவாறே கூட்டம் கலைந்து கொண்டது.

காட்டுத்தீ போல ஊர் பூரா விடயம் பரவி விட்டது. எங்கே பார்த்தாலும் இதே கதைதான்.

மாசிலாமணியின் மகன் விசுவநாதனே விடயத்தை வீட்டுக்கு கொண்டு வந்தான். விடயமறிந்ததும் சிந்து புறப்பட்டு விட்டாள். அருண்மொழி தடுத்தும் கேட்காமல் கந்தையா மாஸ்டரைச் சென்று பார்த்து விட்டு ரகுவரனைத் தேடிச்சென்ருள்.

அன்றிரவு படுக்கையில் புரண்டுகொண்டிருந்த அருண்மொழியின் மனம் கட்டுக்கடங்காமல் அலை பாய்ந்து கொண்டிருந்தது. சிந்து கூறிய விடயங்களை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. சிந்து மீது அவளுக்கு பொருமை ஏற்பட்டுவிட்டது. மௌனமாகப் படுத்துக்கிடக்கவும் முடியவில்லை.

''ரீச்சர் தூங்கிட்டீங்களா?'' என்ருள்.

சிந்து தூங்கவில்லையாயினும் அரைத்தூக்கத்தில் நினைவு அலைகளில் மிதந்து கொண்டிருந்தாள், அவளுக்கு அன்று ஏற்பட்ட அனுபவங்கள் புதுமையானவையாகவும், மகிழ்ச்சியானதாகவும் அமைந்திருந்தன. நடந்த சம்பவங்களைமீண்டும்மனம் அசைபோட தூங்குவது போலபாசங்கு செய்தபடி பேசாமல் படுத்திருந்தாள்.

மாலைப்பொழுதின் மந்தகாசம் வானப்படுதாவை அலங்கரித்திருந்தது. செம்மஞ்சள் குளித்த வானத்தின் பிரதிபலிப்பு மரஞ் செடிகளையும் பரந்த வயல் வெளிகளையும் பொன்வயல்களாக வே மிளிரச் செய்திருந்தன. பட்சிகளின் இனிய கீதங்களும் பசுக்களின் ஆரவார ஒலிகளும் நிறைந்துவிளங்கிய அந்தநேரத்தில்தான் சிந்துவும் ரகுவரனுடையவிடுதிக்குள்சென்ருள். அவளைப் பார்த்ததுமே எழுந்து சென்று ''வாருங்கள் ரீச்சர்'' என்று வரவேற்று உட்காரும் படிக் வேண்டிக் கொண்டான்.

''தாங்கியூ'' என்றவாறே உட்கார்ந்தாள்.

''ஏது இந்த நேரத்தில்...?''

'பல விடயங்கள் கேள்விப்பட்டேன். மனம் பதைத்தது. புறப்பட்டு விட்டேன் கந்தையா மாஸ்டரைப் பார்த்தேன். உங்களையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்'

'இதெல்லாம் சாதாரண விடயங்கள். இப்படி எத்தனையோ நடக்கும். இதற்கெல்லாம் பயந்தால் வீட்டில் தான் இருக்க வேண்டும்' என்று மேலும் நடந்த சம்பவங்களை விபரித்தான்.

அவனை ஒரு புதுமனிதனைப் பார்ப்பது போல உற்று நோக்கினுள் சிந்து. எப்படி இருந்தவன் குறுகிய காலத்துக்குள் எப்படியெல்லாம் மாறிவிட்டான் என்பதை நினைக்கும் பொழுது அவனை மேலும் வியப்புடன் நோக்கினுள்.

'என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'

'நீங்கள் எவ்வளவோ மாறிவிட்டீர்கள்'

'ஷ்சுயர்'

'ஷ்சுயர்' என்று கூறிச் சிரித்தாள்.

'சிந்து......... வெரி ஸொறி மிஸ் சிந்து' என்று தடுமாறினுன் ரகுவரன்.

'பரவாயில்லை என்னை விட நீங்கள் பெரியவர் அப்படி அழைப்பதில் தவறில்லை என்னை அந்நியப் பெண்ணுக நினைக்காதிருந்தால் நீங்கள் பெயர் சொல்லி அழைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்'

'குட். நானும் அப்படித்தான் நினைக்கின்றேன். இங்கே எனக்கு மிக நெருங்கிய அன்பு காட்டுபவர் சிறியையும், உங்களையும், மாஸ்டரையும் தவிர வேறு யாரும் இருப்பதாக தெரியவில்லை'

'ஏன் அப்படி நினைக்கிறீர்கள்? எல்லோரும் உங்களை நேசிக்கின்ருர்கள்'

'நான் அதை மறுக்கவில்லை. ஆனுலும் இவ்வளவு தூரம் தனியாக என்னை தேடி வந்திர்கள் என்ருல் அதற்கு காரணம் கூற முடியுமா?

சிந்து தலையைக் குனிந்து கொண்டு இருந்தாள். உண்மையில் அவளுக்கோ அதற்கு காரணம் கூற முடியாதிருந்தது

'எங்களை அறியாத ஒரு நிலையில் எமது செயற்பாடுகள் அமைந்து விடுகின்றன. நீங்கள் யாரோ நான் யாரோ என்ற நிலையிலிருந்தால் இப்படி ஓடி வந்திருப்பீர்களா? ஏதோ வழியில் என் மீது மிகுந்த அன்போ, அக்கறையோ உங்கள் மனதிலிருந்ததாலேதான் வந்தீர்கள். சாதாரணமாக வந்திருப்பின் அருண்மொழி வந்திருப்பாளே ஏன் வரவில்லை? என் மனம் உங்களுக்கு தெரியும். நான் எதையும் ஒளிவு மறைவின்றி கதைப்பவன். உங்கள் மனம் நோகும்படி சொல்லியிருந்தால் மன்னித்துவிடுங்கள்'

''அப்படி ஒன்றுமில்லை''

சின்னையா தேநீர் கொண்டு வந்து வைத்தான் ரகுவரனே ஒரு கோப்பையை எடுத்து நீட்டினுன்.

''தாங்கியூ'' என்று எடுத்துக் கொண்டாள்.

அதே சமயம் நீர்பாசன இலாகாவில் வேலைபார்க்கும் ஒரு அதிகாரி ஏற்கனவே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றவர் திரும்பவும் வந்திருந்தார்.

''ஹலோ வாங்க'' என்ருன் ரகு.

''மிஸ்டர் ரகு. எல்லோரும் வவுனியா போருங்களாம்– நான் திரும்பிவிட்டேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்ருல் இரவு இங்கேயே தங்கிக்கலாம்என்றுவந்தேன்'' என்ருர்.

'தாராளமாக தங்கலாம். சின்னையாவும் நானும் தனியாக இருப்பதைவிட நீங்களும் சேர்ந்தால் பொழுது போகும் மீற் மிஸ் சிந்து' என்று அவளையும் அறிமுகம் செய்துவைத்தான். அவரையும் அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

'நான்போய்விட்டு வாரேன்' என்று எழுந்தாள் சிந்து.

'தனியாகவா? இப்பவே நேரம் ஆருகப் போகுது-உட்காருங்க போகலாம். இன்று இங்கே பெரிய விருந்தே நடந்தது இரவுசாப்பாட்டை முடித்துக்கொண்டு போகலாம்' என்ருன்

'அங்கே தேடுவாங்க ..'

'இங்கே வந்தது தெரியும் தானே?'

'ம்'

'நானே கூட்டி வந்து விடுகின்றேன். பயப்படாதேசிந்து' என்ருன்.

'என்னுடைய சுசுகியிலேயே போகலாம் மிஸ்டர் ரகு'

'அப்புறம்என்ன? சின்னையா உங்களோட நாலு பேருக்கு சாப்பாடு வேணும்' என்ருன் ரகு

'பத்து நிமிடத்தில் முடிச்சிடுவேன் தம்பி.

ஏழு மணிக்கு தந்தால் போதும் சின்னையா. இவங்க வீட்டுச் சாப்பாடு பற்றி உங்களுக்கும் சொல்லியிருக்கிறேன். அதேபோல இவங்களும் மறக்காமலிருக்கக் கூடியதாயிருக்கணும்

'என்ன இருந்தாலும் அவர்கள் சமைப்பதில் ஓர் தனித்துவம் இருக்கும் தம்பி' என்று அவன் சிரித்தபோது எல்லோரும் சேர்ந்தே சிரித்தனர்.

இரவு உணவு முடித்துக் கொண்டு புறப்பட்ட பொழுது ஏழுமணிக்கு மேலாகி விட்டது. மோட்டார் சைக்கிளில் அவனுடன் சேர்ந்து வந்த பொழுது அவள் உள்ளத்தில் என்றுமில்லாதஓர் உவகை-பல் வேறு கற்பனைகள்– கனவுகள்.

அருண்மொழி வீட்டு வாசலில் இறக்கிவிட்டு விடை பெற்றுப் புறப்பட்டு விட்டான். அவள் உள்ளே வரும் படி பலதடவை அழைத்த

(14-ம் பக்கம் பார்க்க)

## தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

13

### கடவுளும் பொறுக்கார்

அருணனைப் பெற்ற அவனுடைத் தாயும்
அக்காவும் பற்பல நாளாய்த்
திருமணம் செய்து வைத்திடும் நோக்கில்
தேடினர் பெண்களை; ஆனல்
ஒருவரும் அவர்கள் உள்ளத்தி னுசைக்
கொத்தவ ராகவே யில்லை
வருத்தமே யுற்ற வாறிவர் சொன்ன
வார்த்தைகள் கேட்டிடு வோமே.

தம்பியின் அழகுக் கேற்றவளான
தையலைக் கண்டிலோம் எங்கும்
அம்புலி போற்றும் அந்தஸ்தில் உள்ள
அரிவையர் யாருமே யில்லை
எம்மவர் போன்ற பணக்காரர் பெற்ற
ஏந்திழை மார்களோ கல்வி
இம்மியும் இல்லார் அழகுமே யில்லா
இருப்பவ ரோநடை கல்லார்?

பணம் வேண்டும் தூய பண்புமே வேண்டும்
படிப்பொடு பதவியும் வேண்டும்
குணம் வேண்டும் ஏற்ற குலம் வேண்டும் கற்பில்
குறைவிலா தவளாக வேண்டும்
மணம் வேண்டும் தம்பிக் கழகான பெண்ணே
வரவேண்டும் என்றெலாம் வேண்டி
கணமோய் விலாது அலைந்ததே யன்றி
கண்டதோர் மிச்சமே யில்லை.

ஆதலால் அம்மா அவன் காத லித்த
அரிவை காவேரியை மீண்டும்
தீதறச் சென்று திருமணம் பேசிச்
செய்குவம்; அன்னவள் இன்று
ஓதிடு புகழின் உச்சியில் உள்ளாள்
ஒருவரும் அவளுக்கி டில்லை
சாதியில் குலத்தில் பணத்தினில் கூட
தையல் தான் பொருத்தமாய் உள்ளாள்.

அருணனை அழைத்தார் அன்புடன் சொல்வார்
ஐயனே நீகாத லித்த
பெருமை சேர்பெண்ணை மணப்பதை யிட்டு
பெரியவ ராகிய நாங்கள்
ஒரு பிழை சொல்லோம் மகிழ்வுடன் நீயும்
உத்தமி தன்னையே கண்டு
திருமண ஒழுங்கைச் செய் தெமக் கறிவி
சிறப்புற நடத்திவைப் போமே.

மூத்தவள் சொன்ன வார்த்தைகள் காதில்
முனைப்புடன் நஞ்செனச் செல்ல
ஆத்திரத்தோடு அருணனும் பொங்கி
அறைகுவன் கூடவே பிறந்து
கோத்திரம் சாதி குலம் பணம் என்று
கூறி யென்வாழ்வினைக் கொன்ற
சாத்தனே அவளின் பெயரினைக் கூறும்
தகுதியும் உந்தனுக் குண்டோ?

கடவுளே யின்று கருணை கொண்டிருந்தக்
காவேரி வடிவினில் வந்தார்
இடர்பல வெய்தி யின்ன லுற்றோர்க்கு
இவள்சர ணுகதி யானுள்
படமெடுத் தாடும் கொடுஞ்செயல் களினல்
பாதிக்கப் பட்டவர்க் கெல்லாம்
இடமுடன் சேவை யாற்றிடு மிந்தச்
செல்வியே தெய்வமு மாவாள்.

### வேறு

கண்ணிழந் தார்க்குக் கண்ணுமே யாவாள்
காலிழ்ந் தார்க்குக் காலுமே யாவாள்
மண்ணிழந் தார்க்கோ ரிருப்பிட மாவாள்
மனையிழந் தார்க்கோ ருறைவிட மாவாள்
பண்பிழந் தார்கோர் வழிகாட்டி யாவாள்
பலமிழந் தார்க்கோர் தைரிய மாவாள்
எண்ணரும் தொண்டு புரிந்திடு மிவளே
இக்கலி காலத் துதித்த பெண்தெய்வம்

தலைவனை யிழந்த விதவைகள் வாழத்
தநயனை யிழந்த அன்னையர் வாழ
நிலையிழந் தோர்கள் நிம்மதி காண
நிறையழிந் தோர்கள் அறவழி பேண
அலைகடல் துரும்பாய் அலைந்திடு வோர்கள்
அமைதியாய் வாழ துணைபுரி வோர்கள்
இலைஇவள் போல; இவளொரு தெய்வம்
இதையுண ராநீர் எதையுணர் வீர்கள்

காவேரி தன்னை மனைவியாய் எண்ணில்
கடவுளும் பொறுக்கார் கைகூப்பி நின்று
நாவாரப் போற்றி வணங்குதல் வேண்டும்
நானிலம் வாழ்வதிந் நங்கையினலே
சாவால் அழிபவர் உம்மை யொத்தார்கள்
சாவையும் வெல்பவர் காவேரி போன்றோர்
ஆவேச மாயருண் கர்ச்சிக்க லானுன்
அசையாத சிலைகள் போல் இருபேரு மானுர்.

(தொடரும்)

# க. நா. சுவும் கைலாசபதியும்

தமிழ்த் திறனாய்வுத் துறையின் தமிழ் நாட்டு முன்னேடி க. நா. சுப்பிரமணியத்தையும் ஈழநாட்டு முன்னேடி கைலாசபதியையும் ஒருங்கிணைத்து ஒப்புநோக்குவதாக இந்நூல் அமைகின்றது. இவ்விருவரையும் ஏன் தான் இணைத்துப் பார்க்க வேண்டியேற்பட்டது என்பதனை நூலாசிரியர் பின்வருமாறு விளக்குகிறார்.

''யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் பல ஆண்டுகட்டு முன்னுலேயே திறனாய்வைப் பாடமாக்கினர் கைலாசபதி என்கிறபோது நிரம்பவும் கவனிக்கப்பட வேண்டியவராக அவர் எனக்குப்பட்டார்.

நவீன இலக்கியப் பிரக்ஞையை அதிகம் கொண்டவரான க. நா. சு. கல்வித்துறை சாராத இலக்கிய ஆர்வலர்களால் போற்றப்பட்டவர், போற்றப்படுபவர். திறனாய்வு குறித்த இலக்கிய வரலாற்றில்

**நூலாசிரியர்**
**பு. சி. கணேசன்**
**அ. சா. கல்லூரி**
**சிவகாசி**

அவருக்குத் தனியிடம் தரப்பட வேண்டும்.

இவ்விருவரின் எழுத்துக்களை ஓரளவு இனங்கண்டு, இனங்காண எழுதப்பட்டதே இந்நூல்; சிறிய முயற்சி.''

நூல் முழுவதும் 107 பக்கங்களைக் கொண்டது. பின்வரும் இயல்களாக நூல் பாகுபடுத்தி எழுதப்பட்டுள்ளது. (1) விமர்சனத்திற்கு ஒரு விமர்சனம், (2) திறனாய்வு முன்னேடிகள், (3) இரு வேறு ஆளுமைகள், (4) க. நா. சு. என்ற விமர்சகர், (5) கைலாசபதியின் பங்களிப்பு, (6) க. நா. சு கைலாசபதி... அணுகுமுறைகள். (7) முடிவுரை.

முதலாவது இயலிலே, விமர்சனம் திறனாய்வு என்ற இரு சொற்களும் பயன்பாட்டிலே வேறுபட்டன என்ற ஒரு கருத்தினை ஆசிரியர் முன்வைக்கிறார். புதிய இலக்கிய வகைகளை (சிறுகதை, நாவல், புதுக்கவிதை போன்றவை), குறிப்பாக மொழிக்கலப்பின் அனுமதியுடைய நவீன படைப்புகளை ஆராய்வது விமர்சனமென்றும், மரபுணர்வோடு பழைய இலக்கியங்கள் முதல் மரபை மீருத இன்றைய இலக்கியங்கள் வரை ஆராய்வது (குறிப்பாகக் கல்வித்துறையாளரின் ஆய்வுகள்) திறனாய்வென்றும் ஆசிரியர் இனங்காணுகின்றார். இவ்வேறுபாட்டு விளக்கம் பொருத்தமானதோ என்பதுபற்றி ஆராயப்பட வேண்டியுள்ளது. ஆசிரியரே இவ்வேறுபாட்டைக் கூர்மையாகக் கடைப்பிடிக்கின்ருர் என்று கூறுவதற்குமில்லை; பல்வேறு வகைப்பட்ட விமர்சகர்களை அல்லது திறனாய்வாளர்களை ஆசிரியர் இனங்கண்டு தரம்பிரித்து நிரைப்படுத்தியுள்ளமை பயனுடைய ஒரு முயற்சியாகும். (1) சிறந்த பகுதிகளைப் பொறுக்கியெடுத்து ரசனையுணர்வோடு வெளிப்படுத்துபவர்; குற்றங்குறை காணுதலையே வெளிப்படுத்தியவர் (2) பத்திரிகைகளின் பலத்தைக்கொண்டு 'கோஷ்டியாக தாக்குதல் நடத்தும்' விமரிசனங்கள்(3) படைப்பைவிடப் பரிச்சயமான எழுத்தாளனின் கொள்கை முரண்பாட்டில் அக்கறை காட்டல். (4) ஆய்வின் முறைமைக்குக் கல்வியாளர்கள் அதிக அழுத்தம் கொடுப்பதுபோல ஆய்வுப் பொருளுக்குக் கொடுக்காமை. (5) குறிப்பிட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் அவற்றைத் தம் வயமாக்கி இலக்கியங்களை அணுகும் விமரிசகர்கள்: அழகியல் உணர்வு ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களை டி. கே. சி. அணுகியமை, பகுத்தறிவுவாத அடிப்படையில் திராவிட இயக்கத்தினர் விமரிசித்தமை, காந்திய- மார்க்கிய சிந்தனைகளைக் கொண்டு அணுகியமை. (6) ''சில குறிப்பிட்ட சிந்தனைகளைத் தங்களைத்தவிர யாருமே பயன்படுத்தல் கூடாது என்று நினைக்கும் படைப்பாளரும், விமரிசகரும் தமிழிலக்கிய உலகில் நிறைய உண்டு. வர்க்கச் சிந்தனையில் இருந்து ஜெயகாந்தன் விடுபடும்போது முற்போக்குச் சிந்தனையாளர் அவரைச் சாடுவதும்,ரசிகமணியைக் கைலாசபதி பாராட்டுகிறபொழுது சிலர் சலனப்படுவதும் எதேச்சாதிகாரச் சிந்தனையின் விளைவேயாகும்.''(7) அதிகமான அந்நியமொழிப் பரிச்சயத்தை வெளிப்படுத்தி விமரிசனத்தில் அஜீர்ண உணர்வை ஏற்படுத்துபவர் (8) நூலைச் சுருக்கிச் சொல்லுதல் அல்லது தரம் பிரித்தலே விமரிசனமாக எண்ணுபவர். (9) கொள்கைகளில் தோயாத திறனாய்வாளர் சிலர், திறனாய்வுக்கு உட்படுகிற படைப்புகளை அக்கொள்கைகளோடு பொருத்த முயன்று, தோற்றுத் தாமும் குழம்பிப் படிக்கிற வாசகர்களையும் குழப்புகின்றனர். (10) கல்வித் துறையைச் சாராத வெளி விமரிசகர்கள் கல்வியாளர்களின் ஆய்வுகளை முற்றிலுமாகப் புறக்கணித்தல். ''சமூக ஆய்வுகள், நாட்டுப்புற ஆய்வுகள், தலஆய்வுகள், கோயில் ஆய்வுகள் போன்ற ஆய்வுகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. சமூகவியலுக்கோ, தல ஆய்வுக்கோ உரிய நூல்கள் இன்னும் பெருகவில்லை'' என ஆசிரியர் குறிப்பிடுவது இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும்.

**பேராசிரியர்**
**அ. சண்முகதாஸ்**

திறனாய்வு முன்னேடிகள் பற்றிக் கூறுமிடத்து தொல்காப்பியருடன் ஆசிரியர் தொடங்கி 'தொல்காப்பியரையும் இலக்கியம் கண்டு இலக்கணம் படைத்த திறனாய்வாளனுகக் கொள்ளலாம். இலக்கணம் படைக்கும் நோக்கம் தொல்காப்பியரை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிறுத்துகிறது.'முழுத் திறனாய்வாளராக' அவரைக் கொள்ளவியலாமைக்கு 'இலக்கிய வழி இலக்கணம் படைத்ததே காரணமாகும்'' என்று கூறி முடிக்கிருர். 19, 20 ஆம் நூற்ருண்டுகளில் தமிழில் அறிவியல் சிந்தனையோடு இலக்கியம் ஆராயப்பட்டமை எடுத்துக் காட்டப்படுகின்றது. உ. வே. சா. தமிழ் கற்றல், ஆராய்தல் என்ற இரு நிலைகளைத் தோற்றுவித்தவராகக் காணப்படுகின்ருர். திறனாய்வு முன்னேடிகளுள் ஒருவராக ஆறுமுக நாவலரை இனங்காணும் ஆசிரியர் 'இலங்கையில் ஆறுமுகநாவலரின் (1822) புதிய உரைநடை எழுதும் பாங்கும், அவரது சிந்தனைகளும் திறனாய்வு நோக்கில் அமைந்திருந்தன. தர்க்க முறை மின்னவிட எழுதிச் சென்றவர்' என்று கூறுவது சிந்தனைக்கு விருந்தாகும். ஈழத்துத்தமிழிலக்கியவரலாற்றுப் பகுப்பிலே, ஈழத்துக்கே தனித்துவமான - மண்வாசனையுடைய - படைப்புக்கள் தோன்றும் ஒரு காலப் பகுதியைத் தோற்றி வைத்தவர் ஆறுமுகநாவலர் என்று கூறுவதற்கு ஆசிரியருடைய மேற்குறித்த கூற்றும் சான்ருக அமைகின்றது. கம்பராமாயணத் திறனாய்வாளர்களான வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார், டி. கே சி பி. ஸ்ரீ வ வே. சு ஐயர், ஏ. சி. பால்நாடார் போன்ருேரும் இம் முன்னேடிகள் வரிசையிலே இடம் பெறுகின்றனர். முற்போக்குக் குழுவைச் சார்ந்தவர்களென நா. வானமாமலை, எஸ். இராமகிருஷ்ணன், ரகுநாதன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி டானியல் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர்.

விமரிசனமும் திறனாய்வும் இருவேறு வகைப்பட்ட ஆளுமைகள் என மூன்ருவது இயலிலே ஆசிரியர் விளக்கங் கொடுக்கிருர். 'புதிய படைப்புகளான சிறுகதையையும் நாவலையும் புதுக்கவிதையையும் படைத்த படைப்பாளிகளும், இவற்றை விரும்பிய இலக்கிய உபாசகர்களும் விமர்சன ஆளுமைக்கு ஆட்பட்டிருந்தனர்' இது 'விமரி

### நூலகம்

சகன்' என்ற ஆளுமை. திறனாய்வாவன் என்ற ஆளுமை, மொழியைப் பற்றிய பாரம்பரிய அறிவும், மொழிசார்ந்த சமூக சமுதாய பண்பாட்டு அறிவும், வரலாற்று உணர்வும் கூடிய ஒருவனுக்கே பொருந்துவதாகிறது' இவ்விரு ஆளுமை விளக்கம் புதுமையாகவும் சுவையாகவும் உள்ளது. ஆனல் அது தெளிவாக உள்ளதோ என்பது ஐயத்துக்கிடமாயுள்ளது. புதியபடைப்புக்களான சிறுகதைகளையும் நாவல்களையும் ஆராய்பவர்கள் எல்லோருமே மொழி, பண்பாட்டு அறிவும் வரலாற்றுணர்வும் இல்லாத விமரிசகர்களாக அல்லது ஏனையஇலக்கியங்களைஆராய்ந்தவர்கள் எல்லோரும் அத்தகைய தகைமையுடையவர்களாஎன்றநியாயமான கேள்வி எழுவதற்கு இடமுண்டு. இருவரையும் (விமரிசகன்–திறனாய்வாளன்) தரம்பிரித்துக் கூறுவற்கு ஆசிரியர் கூர்மையான அளவுகோல்களைக் கையாள வேண்டும். எனினும், இவ்வழியிலே புதுமையாகச் சிந்தனை செய்வதற்கு கோடி காட்டியிருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

நான்காவது இயலிலே க. நா. சு. என்ற விமர்சகர் விரிவான முறையிலே அறிமுகப்படுத்தப்பட்டு மதிப்பிடப்படுகிருர். ஐந்தாவது இயலிலே க. கைலாசபதியின் பங்களிப்புகள் வரிசைப்படுத்தப்பட்டு மதிப்பிடப்படுகின்றன. ஆருவது இயலிலே, இருவருடைய அணுகுமுறைகள் ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. ''படைப்புகளை, படைப்பாளிகளை உணர்தல், அனுபவங்களின் அடிப்படையில் வெளியிடுதல் என்ற நிலைகளை ஒவ்வொரு திறனாய்வாளனிடத்தும் நாம் காண முடியும். இந்த அனுபவரீதியான 'ஒருமுகச் சிந்தனைக்கு (School of thought) க நா. சு. வும் க. கை. யும் நிறுவநர்களாக விளங்குகிருர்கள். க. நா. சு. விற்குப் பின்னே ஒரு குழுவும் க. கை.க்குப்பின்னே ஒரு குழுவும் செயற்பட்டன, செயற்படுகின்றன. ஒத்த கருத்து நிலைகளையும், வேறுபட்ட கருத்து நிலைகளையும் இருவரின் எழுத்துக்களிலும் நாம் காணலாம்'' என ஆசிரியர் குறிப்பிடுகிருர். ஆங்கில மொழிப் பரிச்சயம், நவீன இலக்கியத்துறையிலுள்ள ஆர்வம், இரசனை ஆய்வு தொடர்

(14-ம் பக்கம் பார்க்க)

'கலைச்செல்வி'ப் பண்ணையில் உருவான எழுத்தாளர்களில் முன்னணி வகித்தவர் துருவன் என்ற பெயரில் எழுதிய க. பரராஜசிங்கம். இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து, உதவி அரச அதிபராகப் பணியாற்றிய இவர் கடந்த மாதம் காலமானார். அன்னாரது நினைவை முன்னிட்டு அவரால் எழுதப்பட்டு, பேராதனைப் பல்கலைக்கழக 'விண்ணும் மண்ணும்' தொகுதியில் வெளியான 'குருடு' சிறுகதையை இங்கு மறுபிரசுரஞ் செய்கின்றோம்.

இதற்கிடையில் இப்படியென்றால்... இருளே வாழ்வாகி வாழ்வே இருளாகி விட்ட குருடனுக்கு......?

வைக்கோலைக்கடித்த மாதிரி என் உடம்பு சிலிர்க்கிறது! கதிரையை விட்டு எழுந்து தடவித் தடவிக் கதவைத் திறந்து வெளியே பார்க்கிறேன். எங்கும் வெறுமையின் கருமை.

மாணவர்கள் 'கூய் கூய்' என்று கத்துகிறார்கள் பல்கலைக்கழகத்தில் இப்படித் திடீரென்று வெளிச்சம் அணைவது மிக அருமை. ஆனால் நிகழ்ச்சி நினைவைக் குத்துவது... அது கூட அருமைதான.

என் இதய விளக்கிலிருந்து ஒளிக்கற்றை கும்மிருட்டைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து சென்று, கைதடியிலே அந்தக் குடிசையின் பின்னால் சாக்கிலே படுத்துக் கிடக்கும் சின்னையனின் உடலில் பட்டுத் தெறிக்கிறது. என்னுடைய மன ஒளியோடு மோத அவனுக்கு ஒளி இல்லை.

அவன் குருடன்.

'ஒரு நிமிசத்திலை என்னால் ஒன்றுமே செய்ய முடியாத இயக்கமற்ற நிலை... ஆனால் சின்னையன், தடியிலே கண்ணை வைத்து என்னவென்ன வெல்லாம் செய்கிறான்? ஒன்று இயங்காவிட்டால் இன்னொன்று அதிக சக்தியுடன் இயங்குவதுதான் மனித இயந்திரத்தின் சூட்சுமமா?

'சொறி மச்சான், ஒண்டுமே தெரியேயில்லை' என்னிலே தற்செயலாக மோதிவிட்ட நண்பனொருவன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு இருளைத் துளாவிக் கொண்டு நடக்கிறான். இப்போது அவன் கூடக் குருடுதான். அவனுக்கு ஒன்றும் தெரியவில்லையாம், எனக்கு ஏதோ தெரிகிறது.

நினைவுக் கதிர் நத்தையின் உணர்ச்சி உறுப்பைப்போல் ஒரு முறை சுருங்கி விரிகின்றது அடிமனதிலிருந்து அவனுடைய முழு நினைவும் சுருள் சுருளாக வெளியே வந்து நீண்டு விரிகின்றது.

✶

'எட துலைஞ்சு போவாங்களே, என்ரை தடியை தாருங்கோவன்ரா., கையை அப்படியும் இப்படியும் விசிக்கொண்டு பரிதாபமாகக் கத்துகிறான் சின்னையா. சப்பித் துப்பிய நம்புட்டான் பழக் கொட்டையைப் போல் சதைக் குழிக்குள் கிடந்து அவன் விழிகள் உருண்டு புரள்கின்றன.

வேதனையை ரசிக்கும் சிறுவர் கூட்டத்துக்குப் பின்னால் நானும் நிற்கிறேன்.

எனக்கும் வேதனையா?

எனக்கு முன்னால் நிற்பவர்கள் கையைத் தட்ட சின்னையா கண்ணைக் கட்டாமலே 'கண் கட்டி விளையாட்டு' விளையாடுகிறான். அவனுடையமுகம் நான் நிற்கும் பக்கமாகத் திரும்பும் போதெல்லாம் ஒன்றுமில்லாத அவனுடைய அந்தக் கண்களிலிருந்து இரண்டு நெருப்பிலே காய்ச்சிய ஆணிகள், பிய்த்துக் கொண்டு வந்து என் இதயத்தைக் குத்தித் துளைப்பது போல்...?

'கோதாரியிலை போவாங்களே, தடியை இப்ப தரமாட்டியளோ?'' உரக்கக் கத்திவிட்டு கீழே குனிந்து கல்லையும் மண்ணையும் நாலா பக்கமும் அள்ளி வீசுகிறான்–

'என்னைத் திட்டுகிறானா?'

திடீரென்று கைகளை முன்னுக்கு நீட்டி எதையோ இலக்கு வைத்து. ஓடுபவன் போல் ஓடுகிறான்.. அந்தப் பூவரச மரத்தோடு மோதி நெற்றியால் இரத்தம் வடியக் கீழே விழுந்து கத்துகிறான் தடியை எடுத்து ஒளித்து வைத்தவன் அதைக் கொண்டு போய் அவனுக்குப் பக்கத்தில் போட்டுவிட்டு ஓட, எல்லாரும் ஓடிப்போய் விடுகிறோம்.

அடுத்த நாள் தலையிலே பழைய சீலையால் சுற்றிக் கட்டிக் கொண்டு, கையில் வைத்திருக்கும் தடியால் ஒழுங்கை வேலியைத் தட்டியபடியே ஒழுங்கைக்குள்ளிருந்து வருகிறான் அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது

'சின்னையா?'

நின்று என் பக்கம் திரும்புகிறான். பார்வையில்லாத வெறும் கண் துடிக்கிறது. என் குரல் அவனுக்குத் தெரியும். வெறும் இமைகளின் துடிப்பிலே நான் பார்ப்பது ஒரு உணர்ச்சிச் சித்திரமா? மூடிவிட்ட பானைக்குள் கிடந்து வேகும் அரிசியைப் போல் அவனுடைய மூடிய கண்களுக்கூடாக உணர்ச்சிகள் வெந்து கொண்டிருப்பது தெரிகிறது. மனவேக்காட்டின் உந்தலில் அவனைக் கூப்பிட்டுவிட்டு என்ன பேசுவதென்று தெரியாமல் நிற்கிறேன். உள்ளப் பயத்தை உணர்வு மூடிவிடுகின்றது

'நான் தெருவுக்குக் கிட்ட வந்துட்டனே? நல்லம்மா வீட்டை விளையாடப்போறன். நீரும் அங்கை தான் வந்தனீரோ?'



# க. பரராஜசிங்கம் (துருவன்)

படிப்பே இல்லாத அவன் மரியாதையாகப் பேசுவதில் மட்டும் குறை வைக்கமாட்டான்.

'ஓம்' நான் தலையை ஆட்டுகிறேன்; குரல்தான் அவனுக்குக் கேட்டிருக்கும் தடியால் தடவித் தடவிக் கொண்டே நல்லம்மா வீட்டுக்கு எந்த நாளும் பின்னேரத்திலே விளையாட வந்து விடுவான். அவனுக்குக் கண் அந்தத் தடிதான். ஐந்தாறு பேராகச் சேர்ந்து விளையாடும் போது அவனைச் சும்மாசாட்டுக்குத்தான் விளையாட்டில் சேர்த்துக் கொள்வது.

'சின்னையா! நான் இந்தக் கொஞ்சநேர இருட்டுக்கை எவ்வளவு அவலப் படுறன்? நீ என்ன மாதிரி இருப்பாய் எண்டதை இப்ப நல்லா உணர்ந்து கொள்ளுறன். உன்ரை மனதாலை இரத்தம் வடியக்கூடிய எவ்வளவு துன்பத்தை உனக்கு நாங்கள் குடுத்திருப்பம்? சின்னப்பிள்ளை விளையாட்டு உன்னையே......'

நினைவுக் கண் அங்கே மொய்த்தது நிற்க என் கண் கண்ணீரில் ஊறுகின்றது. கதவைத் திறந்து கொண்டு அறைக்குள் வந்து கதிரையில் இருக்கிறேன்.

'நீ அந்தரத் தாமரை மாதிரி என் மனக்கிணற்றின் மேற்பரப்பிலே மிதந்து கொண்டு எவ்வளவு நினைவு வேர்களை தொங்க விட்டுக் கொண்டிருக்கிறாய் தெரியுமா?

வேர்கள் கும்பலாக நீரிலே ஆட ஒன்று நீளுகின்றது

நல்லம்மா வீட்டிலிருந்து மேளச் சத்தம் ஒலி பெருக்கி மூலம் கேட்கிறது. அவள் பெரிய பிள்ளையாகி விட்டதை ஊருக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவள் பெரியபிள்ளையாகும் போது நாங்கள் மட்டும் சின்னப் பிள்ளைகளாக இருக்க முடியவில்லை. ஆனால் சின்னையா...?

அவன் அன்று முழுவதும் நல்லம்மா வீட்டிலேதான் தங்கி நிற்கிறான். அவர்களுக்கு உதவி




செய்வதாக அங்கு மிங்கும் ஓடி எல்லாருடைய திட்டையும் வாங்கிக் கொள்கிறான்.

'இந்தக் குருட்டுப் பெடியன்ரை கரைச்சல் பெரிய கரைச்சல். சும்மா அதுக்குள்ளாலையும் இதுக்குள்ளாலையும் தடியை ஆட்டிக் கொண்டு பெரிய உவத்திரவம்'

'கண் தெரியாட்டி எங்கையாலும் மூலையிலை படுத்திருக்கிறதுதானே. இல்லாட்டிப் பக்கத்திலை குருட்டுப் பள்ளிக்குடமிருக்கு அங்கை போறது'

'குருடன்'

'குருடன்'

'அவர்களுடைய ஒவ்வொரு பேச்சும் 'சப்பல் வெடி'யாகி என் மனப்பாறையைப் பிளந்தெறிகின்றது.

நல்லம்மாவுக்கு சின்னையா மீது அளவு கடந்த பாசம். அவனோடு சேர்ந்து குருட்டு விளையாட்டு விளையாட மனமில்லாமல் • அவனை மற்றவர்கள் ஒதுக்கி வைக்கும் போது அவன் அழ ஆரம்பித்து விடுவான். பார்வையில்லாத கண்களுக் கூடாக உருண்டு வரும் நீர் அவனுடைய ஊத்தைச் சாறத்தில் விழுந்து சிதற, நல்லம்மா அவனையும் விளையாடச் சேர்த்துக் கொள்ளும்படி மற்றவர்களைத் தூண்டுவாள்.

'சரியெடா நீயும் வா' என்றவுடன் அவன் மகிழ்வதைப் போலவே நானும் மகிழ்வேன்.

✶

என்னை நோக்கியா?

எனக்கு உள்ளேயும், வெளியேயும் எவ்வளவோ மாற்றங்கள். அவனுக்கு என்னைக் காணமுடியாது. பேசாமல் ஒதுங்கிவிடத் துடிக்கிறேன். ஆனால் நாக்குக்கு இருந்தாற்போல் உணர்வு வந்து என்னை வென்று விடுகின்றது.

'சின்னையா?'

'தம்பியே?'

ஏனோ தெரியாது இப்போது என்னைத் தம்பி என்கிறான். பழைய எண்ணம் பசுமையாக இருக்க வயதின் வளர்ச்சி புதிய உறவை ஏற்படுத்துகின்றதா? வயதளவில் அவனுக்கு நான் தம்பிதான்.

'அப்படியென்றால் அண்ணையே...'

'சாமத்தியச் சடங்கு இவ்வளவு பெரிசா நடக்குது. எனக்குத்தான் தம்பி அதைப் பாக்கேலாது எண்டாலும் என்ரை மனக் கண்ணுக்கை நல்லம்மாவின்ரை வடிவு தெரியுது. எப்படித்தம்பி நல்லம்மாவின்ரை வடிவு தெரியுது. எப்பிடித் தம்பி நல்லம்மா நல்ல வடிவா இருக்கிறாவே?'

'ஓம் சின்னையா நல்ல வடிவா இருக்கிறா. உனக்குத்தான் சின்னனிலை இருந்தே அவவிலை நல்ல விருப்பமிருக்கே. விருப்பத்திற்கும், பார்வைக்கும் என்ன நீ வீணா மனவருத்தப்படத் தேவையில்லை.'

'மனவருத்த மொண்டு மில்லைத் தம்பி எனக்கு இந்தத் தடியும், மனமும் நல்லா இருந்தாக் காணும். ஆனாக் கண்ணிருந்தா நானும் உம்மைப் போலை டவுண் பள்ளிக்கூடத்திலை படிச்சு...... இண்டைக்கு நல்லம்மாவின்ரை வீட்டை வர... எவ்வளவு சந்தோசமா இருக்கும் தம்பி'

'இதுகளிலை என்ன சின்னையா? நீநல்லம்மாவிலை வைச்சிருக்கிற அன்பு எனக்குத் தெரியும். உலகத்திலை எல்லா வகையான மனுசரும் இருக்கினம் தானே. உனக்கும் கட்டாயமாக நல்ல வாழ்வு கிடைக்கும்.'

அவனுக்காக நான் பிரார்த்திக்கிறேன். என்னுடைய நம்பிக்கை வார்த்தைகளில் தொங்கித் தொங்கிச் சின்னையா வெகுதூரம் போய்விட்டான்போல் இருக்கிறது. அவனுக்கு இனி வாழ்வே நம்பிக்கைதான். திடீரென்று பெருமூச்சு விடுகிறான்.

'எனக்கு ஒரே ஒரு ஆறுதல் தம்பி. கொஞ்சநாளெண்டாலும் இந்த உலகத்தைச் கண்ணாலை பார்த்துட்டன் நல்லம்மாவை எவ்வளவு சின்னனிலை நான் சுடைசியாகப் பார்த்தது. கடவுளே! அண்டைக்கொரு நாள்... அது தான் என்ரை கடைசிப் பார்வை அதுக்குப் பிறகு நல்லம்மா என்ரை மனதிலை வளருறா.'

நான் பெருமூச்சு விடுகிறேன்

நல்லம்மாவில் அவன் வைத்திருக்கும் அளவு கடந்த அன்பின் முடிவைச் சிந்திக்க என்னால் முடியவில்லை. நல்லம்மா அவன் இதயத்தில் சுடர் விடுகின்றாள். ஆனால் அவளுக்கு மனதிலே விளக்கேற்றக் கூடிய பக்குவமே இப்போது தானே ஏற்பட்டுள்ளது.

'சின்னையா, நீ ஏன் கடுமையாய் யோசிக்கிறாய்? உன்ரை நிலை எனக்குத் தெரியும் கடவுள் இனியும் உனக்குத் துன்பத்தைத் தரமாட்டார்.'

அவனுடைய இருண்ட முகம் மலர்கிறது எவ்வளவோ நம்பிக்கைகளின் கூட்டு மலர்ச்சி அது. வாயைத் திறந்து சிரிக்கிறான். என்னிடம் விடை பெற்றுக்கொண்டு உற்சாகமாகத் தடியால் தடவிக் கொண்டு திரும்பவும் நல்லம்மா வீட்டுக்குள் நுழைகிறான்.

நான் ..?

கதிரையில் சாய்ந்து கொண்டு நினைவுக் கதிரின் பிறப்பிடமாக இருக்கிறேன். பல்கலைக்கழகம் இருட்டிலே தோய்ந்து போய்க் கிடக்கின்றது மாணவர்களுடைய கூச்சல் இன்னும் ஓயவில்லை. நான் குருடனாகி அவனுடைய உணர்வுகளை அனுபவிக்கிறேன். சிகரெட் புகைவளையங்களைப் போல் நினைவும் சிறிது சிறிதாக ஆரம்பித்து பெரிய பெரிய வளையங்களாகி .

'சின்னையா?'......

ஒரு கையிலே தடியையும், இன்னொரு கையிலே ஒரு போத்தலையும் கொண்டு பழக்கப்பட்ட நடத்தால் அடி அடியாக நடந்து வந்து கைதடிச் சந்தியால் திரும்பி, சங்கக் கடைக்குக் கிட்ட வந்து விட்டவன் அப்படியே நிற்கிறான்

'ஆரது?'

அவனுடைய பெயரைச் சொல்லிக் கூப்பிட்டவுடனேயே என்னைத் தெரிந்து கொள்பவனுக்கு என்னுடைய பெயரைச் சொல்லித் தெரியப்படுத்துகிறேன்; ஒருகணம் வார்த்தைகளை நிறுத்திவிட்டு அவனை நோட்டமிடுகிறேன். இடையிடையே யாரோ முள்ளுக் கரண்டியால் பிறாண்டி எடுத்து விட்டதைப்போல் முகத்திலே சுருக்கங்கள்; நெஞ்சு உள்ளே குழிந்துவிட்டது; தலையிலே நரை மயிர்கள் கரு மயிர்களை வெல்ல முனைகின்றன. வெடித்துப் போன முட்டையை அவிக்க, வெள்ளைக்கரு வெடிப்புக் கூடாசப் பீறிக்கொண்டு வந்து மேலோட்டிலே படிந்து கிடப்பதைப்போல் இரு கண்மடல்களுக்கு நடுவில் சதையும், பீழையும் கலந்துகிடந்தன.

'தம்பி எப்ப வந்தது?'

அவன் கேட்டதற்கு ஏதோ பதில் சொல்லுகிறேன். மனம் அரிக்கிறது.

'நீ ஏன் சின்னையா இப்பிடி மாறிப் போனாய்? நாலைஞ்சு மாதத்துக்கை உன்னை அடையாளம் கண்டுகொள்ளேலாமலிருக்கு.'

'நான் என்னத்தைத் தம்பி சொல்ல? இப்பிடியே கிடந்து அழிஞ்சு போகவேண்டியதுதான் நான். எனக்கு எவ்வளவெவ்வளவு மனவேதினை; எல்லாமாகச் சேத்துத்தான் என்னை இப்பிடி ஆக்கிப் போட்டுது. உங்களைப்போல என்னமாதிரி இருக்க வேண்டியனான் கடவுளே...கடவுளே!'

'உனக்குக் கண் குருடெண்டால் என்ன சின்னையா? கண்ணில்லாட்டி ஒண்டுமேயில்லையே? ஏன் வீணா மனசைப் போட்டு அலட்டி இப்படியா உருக்குலையிறாய்?'

'என்னைப்பற்றி இப்பிடி அன்பாய்க் கதைக்க நீர் மட்டும் தான் தம்பி இந்த உலகத்தில் இருக்கிறீர். நான் குருட்டுத்தனமாய்ப் பெரிய பெரிய எண்ணங்கள் எண்ணிப்போட்டன்; குருடனுக்கு ஆசையளும் குருடாய்த் தான் போகும் தம்பி '

சின்னையாவைக் குடைந்து குடைந்து கேட்டுக்கொண்ட விஷயங்களை என் மனதிலே போட்டுப் புரட்டுகிறேன்.

'ஒன்று இயங்கா விட்டால் இன்னொன்று அதிகசக்தியுடன் இயங்குவதுதான் மனித யந்திரத்தின் சூட்சுமமா?'

படலையைத் திறந்துகொண்டு சின்னையா நல்லம்மா வீட்டுக்குள் நுழைகிறான். அவனைக் காத்துக்கொண்டு நின்ற மாதிரி அவளும் வரவேற்கிறாள்

ஏன் சின்னையா இரண்டு நாளா இஞ்சினேக்கை காணேல்லை.'

'இனிமேல் அடிக்கடி இஞ்சை வாறது அவ்வளவு நல்லதில்லையெண்டு மனதுக்குப் பட்டது அதுதான்...?'

திகைக்கிறாள்

'சரி சின்னையா எனக்கொரு உதவி செய்ய வேணும் மெது மெதுவாய்ச் சங்கக்கடைக்குப் போய் எங்கடை கூப்பனை ஒருக்கால் எடுத்துத் தர வேணும். அப்பு வயலுக்குப் போட்டார்: ஆச்சியும் சாவச்சேரிச் சந்தைக்குப் போட்ட'

'ஓ... அதுக்கென்ன நல்லம்.

... 14ம்- பக்கம் பார்க்க.

# [4] அருப ஓவியம் (Abstract Art)

## தற்காலக் கலைக்கொள்கைகள்

**கலாநிதி சோ. கிருஷ்ணராசா**

**ஆறுவாரக் கட்டுரை**

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கமான 1900–1914 ஆண்டு காலப்பகுதி ஓவிய வரலாற்றில் ஒருபுதிய அத்தியாயமாகும். புதிய சகாப்தத்திற்குரிய தமது பங்களிப்பை கலை வரலாற்றில் சாதனையாக்கும் கரிசனையுடன் அருப ஓவியப்பாணியை ஓவியர்கள் தோற்றுவித்தனர். கடந்த காலத்தில் ஓவியர்களால் பின்பற்றப்பட்ட கூறுகள் பலவற்றை நிராகரித்து புதிய முறையிலான ஓவிய வெளிப்பாடு பற்றிய சிந்தனைகள் மேலோங்கின. கயூசின், வான்கோ ஸ்ருவாட் போன்ருேர்களின் சிந்தனைகளால் தூண்டப்பெற்றதே இவ் வளர்ச்சியாகும். ஓவியத்தில் படைப்பாளியின் மனநிலை, நிறங்களின் பயன்பாடு என்பன இக்காலத்தில் முதன்மை பெறலாயின.

1909–ம் ஆண்டிலிருந்து ஓவியம் வரைதலில் பின்பற்றப்பட்ட வரன் முறைகள் அனைத்தும் கியூபிசம், போவிஸ்ம், அருப ஓவியம் வெளிப்பாட்டு வாதம் என்பன போன்ற பெயர்களில் உள்ள ஏதோவொரு பிரிவில் உள்ளடக்கப்படலாயிற்று அத்துடன் பொருளின் புறத்தோற்றத்தை ஓவியமாக வரைதல் என்ற கோட்பாடு கைவிடப்படலாயிற்று. அருப ஓவியர்கள் நாட்டார் கலைகளிலிருந்தும், அலங்காரக் கலைகளிலிருந்தும் பலவற்றைப் பெற்றனர். இருபரிமாண அருப வடிவங்கள் பண்டைய கட்டிடக் கலையிலும், ஆடை வகைகளிலும், வீட்டுப் பாவனைப் பொருட்களிலும் அலங்கார நோக்கில் இடம்பெற்றதொரு அம்சமாகும். இதுவே நவீன கால ஓவியர்களால் புதியதொரு ஓவியப் பாணியாக விருத்தி செய்யப்படலாயிற்று எனினும் இவ்விருத்தி ஐரோப்பிய ஓவிய மரபின் வளர்ச்சியிலிருந்தே தனித்ததொரு ஓவியப் பாணியாக முகிழ்விட்டதென்பதை மறுப்பதற்கில்லை.

அருப ஓவியர்களின் வாதப்படி புறநிலை உலகை ஓவியங்கள் பிரதிபலிக்க வேண்டுமென்பது எல்லாக் காலத்தும் நிலவி வந்ததொரு கொள்கை அல்ல. பத்தொன்பதாம் நூற்ருண்டில் யதார்த்தவாதத்தின் செல்வாக்கினுலேயே மேற்படி கொள்கை பொதுமக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற தொன்ருகக் காணப்பட்டது. கலை வரலாற்றை உன்னிப்பாகக் கவனிப்பின் எல்லாக் காலத்தும் கலைஞனின் நடவடிக்கைகள் இரு நிலைப்பட்டதாக இருந்து வந்ததை அறியலாம். ஓவியன் கலையாக்கத்தின் பொழுது அலங்கார நோக்கில் அருப வடிவங்களை வரைந்தான் எனினும், அவனது படைப்புக்கள் புறநிலை உலகை பிரதி செய்வதாகவும் காணப்பட்டது. குறிப்பாக ஓவியர்களிடம் இவ்விருமைவாத நிலைப்பாடு அவதானிக்கக் கூடியதாயிருந்தது. அருப ஓவியர்கள் இவ்விரண்டாம் அம்சத்தை ஓவியத்தில்இலட்சியமாக ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

முதன் முதலில் கலையில் இயற்கை பற்றிய சிந்தனைகள் இயற்பண்பு வாதமாகவும் குறிப்பாக ஓவியத்தில் யதார்த்தவாதமாகவும் பரிணமித்து மனப்பதிவுவாதிகள் யதார்த்தவாத ஓவியப் பாணியில் சோர்வுற்றுதமது புதிய பாணியைப் பிரபல்யப்படுத்தினர். இவர்கள் இயற்பண்புவாத நிலையை கலையில் முற்ருக மறுதலித்தவர்கள் அல்ல. ஆனுல் அருப வாதிகளோ ஓவியத்தில் இயற்பண்புவாதத்தை முற்ருக நிராகரித்ததுடன் இயற்பண்புவாதத்திற்கெதிரான புதியதொருபாணியை ஓவிய உலகில் தொடக்கி வைத்தனர்.

வசிலி கன்டின்ஸ்கி என்ற ரஷ்சிய நாட்டவரும் பியட் மொன்றீன் என்ற டச்சுக்காரரும் அருப ஓவியப் பாணியின் பிதாமகர்கள் என அழைக்கப்படும் தகுதியைப் பெற்றவர்களாவார்கள். முதன் முதலில் பிரக்ஞை பூர்வமாக அருப ஓவியங்களை வரையத் தொடங்கியவர் கன்டின்ஸ்கியாவர். அருபப் பண்புகள் சிலவற்றை ஓவியமும் இசையும் பெற்றுள்ளதாய் இவர் கருதினுர். பீத்தோவன், பாச் போன்ற பிரபல இசைவாணர்களின் இசைக்கோவைகளை ஓவியங்களாக மாற்ற முயன்றுர். அதாவது செவிப் புலனுல் கேட்கப்படுபவற்றை கட்புலனுல் உணர வைக்க இவர் முயன்ருர்.

எளிமையான வர்ணங்களைப் பெற்ற வடிவங்களிற்கூடாக ஓவியத்திற்குரியதொரு மொழியை உருவாக்கி அதன் மூலம் ஓவியன் தன் கருத்தைப் பிறருக்குப் புலப்பட வைக்கலாம் என நம்பி கன்டின்ஸ்கி செயற்பட்டார். அருப வாதிகளின்படி தொனி, சாயல், செறிவு என்பன மூலம் கருத்துக்களை உணர வைக்க முடியும். வர்ணங்களிற்கிடையிலான வேறுபாடுகள் விழுமிய வேறுபாடுகளை உணர்த்துகின்றன என அருப வாதிகள் நம்பினர். கலைஞர்கள் பூரண சுயாதீனம் உடையவர்கள். அவர்களிற்கு அகநிலைக் கட்டுப்பாடுகள் மட்டுமேயுள. படைப்பாளியின் ஆளுமையை வெளிப்படுத்தவும், தன்காலத்துப் பாணியைப் பேணவும் கலைஞனுக்கு அகநிலைக் கட்டுப்பாடுகள் தேவைப்படுகின்றன.

கலை தன்னளவில் மிகவும் பெறுமதியானது. அதற்கு கலைக்கப்பாற்பட்ட பணிகள் எதுவுமில்லை என வாதிடும் அருப ஓவியர்கள் இசைக் கோலங்கள் எவ்வாறு யாக்கப்படுகின்றனவோ அவ்வாறே ஓவியமும் யாக்கப்படுகிறது எனக் கருதினர். யாத்தல் முறை அருப ஓவியத்தில் மிகவும் முக்கியமானது. இதற்கென பொதுவான விதிமுறைகள் எதுவுமில்லாத பொழுதும், ஒவ்வொரு ஓவியப் படைப்பும் தனக்கேயுரிய கோவை முறைகளைக் கொண்டுள்ளது

ஓவியத்தின் கருத்து அதன் பிரதியுருத்தன்மையிலிருந்து வேருனது என்ற கயூகினது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு அதனடிப்படையில் கன்டின்ஸ்கி தனது அருப ஓவிய முறையை வளம்படுத்தினுர். 'உருவம்பற்றிய பிரச்சனை'' என்ற நூலில் கன்டின்ஸ்கி அருப ஓவியக்கோட்பாடு ஒன்றை உருவாக்கினுர். இக் கோட்பாடு அனுபூதி நெறிகளுடன் கலப்புற்றுள்ளது. அவரது அபிப்பிராயப்படி கலைஞன் பூரண சுயாதீன முடையவனெனினும், அவனுக்கு அகநிலைப்பட்டதொரு நிர்ப்பந்தம் உளது.

அருப ஓவியமரபில் முதன்மை பெற்ற ஓவியர்களான கன்டின்ஸ்கி தனது ஓவியப் பயிற்சியை போவிஸ்ம் என்பதிலிருந்தும், மொண்டீன் கியூபிசம் என்ற ஓவியப் பாணியிலிருந்தும் ஆரம்பித்தன. ஏறக்குறைய இதே காலப்பகுதியில் பிக்காசோ, ப்ரகுவே போன்ருேர் பாரம்பரிய ஓவிய மரபைப் புறக்கணித்து அருப ஓவியப் பாணியில் தமது படைப்புக்களைத் தந்தனர்.

1914—ல் டச்சுக் கட்டிடக் கலைஞர்கள் ஓவியர்கள் என்போர் ஒரு குழுவாக இணைந்து ''style'' என்ற சஞ்சிகையை நடாத்தினர். இச்சஞ்சிகையில் கவிஞர், நாவலாசிரியர்கள், கலை விமர்சகர்கள். ஓவியர்கள் சிற்பிகள் எனப்பலரும் இணைந்து நுண்கலைகளிற்கென்ற பொதுவானதொரு மொழியை உருவாக்க முயன்றனர். அருபமுறை இவர்களது பொதுவான கலை மொழியின் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அல்புஸ், பேயர், மக்பில், மக்நெல்,கேர்பின் என்போர்கள் குறிப்பிடத்தக்க அருப ஓவியர்களாவர். ஓவியத்தின் வியப்புப் பண்பு புகைப்படக் கருவியின் வருகையால் ஒழிக்கப்பட்டது என பொதுவாகக் கூறப்படினும், இதைவிட பிறிதொரு காரணமும் இதற்குண்டு. பிரபஞ்சம் பற்றிய யந்திர நோக்கு பத்தொன்பதாம்நூற்ருண்டின். பிரபல்யம் பெற்ற விஞ்ஞானக் கருத்தாக இருந்தது. இக் கருத்தே ஓவியத்தில் பிரதியுரு என்ற கருத்தாக்கத்திற்கு ஆதரவாயிருந்தது. அருப வாதிகள் ஓவியத்தின் பணி பிரதியுரு செய்தல் என்பதை நிராகரித்ததுடன் விஞ்ஞானிகளின் ஆய்வுப்பரப்பிற்கப்பால் உள்ள விடயங்களையே ஓவியர்கள் தேடிச்செல்லுதல் வேண்டும் என வற்புறுத்தினர்.

அருப ஓவியங்கள் எதனையும் பிரதியுரு செய்வதில்லை. அது எப்பொருள் பற்றியதுமல்ல. பிரக்ஞை பூர்வமான உளத்திருந்தெழுந்த அருப வடிவங்களே அவை. தற்கால அருப ஓவியர்கள் வட்டம், சதுரம் போன்ற கோல வடிவங்களைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். இருபதாம் நூற்ருண்டின் காலக்கோலமாக அருப ஓவியப் பாணி வளர்ச்சி பெற்று வந்துள்ளது. அமெரிக்க நாட்டவர்களான ஓவியர்களே இதன் முன்னேடிகளாக மதிக்கப்படுகின்றனர். கேத்திரகணிதக் கோலங்கள் என்பதிலிருந்து அருப வெளிப்பாடு என்பது வரையிலான பல்வேறு பாணிகள் இன்று கிளைவிட்டு வளர்ந்து வந்துள்ளது. இரண்டாம் உலகயுத்த காலத்திலிருந்து இன்றுவரை பிரான்ஸிலும்,இங்கிலாந்திலும்அருப ஓவியங்கள் மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளது.

எளிமையான, மேலேழுந்தவாரியான சுவையுடையோர் அருப ஓவியங்களால் குளப்பமடையத் தேவையில்லை. மத்தியகாலக் கைவினைஞர் போலவே அருப ஓவியர்களும் எளிமையான உத்திகளையே கையாள்கின்றனர். ஓவியத்தில் சுவைஞர்கள் ஒளிவு மறைவின்றி, மனம்விட்டு ஈடுபடுதல் வேண்டும் என்பதனை மட்டுமே எதிர்பார்க்கின்றனர்.

அருப ஓவிய ரசிகர்களிற்கு பிரச்சனையாக விருப்பது உள்ளடக்கம் பற்றிய பிரச்சனையே உள்ளடக்கம் பற்றிய விளக்கத்தை எவ்வாறு பெறுவதென்பதே பலவகையான வாதப் பிரதிவாதங்களுக்கு சுவைஞரை இட்டுச் செல்கிறது. இதற்கு அருப ஓவியர்களின் பதிலாவது; சுவைஞர்கள் அருப ஓவியங்களை ரசிப்பதுடன் நின்றுவிடவேண்டும். ரசனைக்கு அப்பால் கலைஞனின் கருத்தையோ அன்றி ஓவியத்தின் கருத்தையோ தேடிக் கண்டுபிடிப்பது அவசியமுமில்லை. ஓவியரசனைக்கு அது இன்றியமையாததுமல்ல. பாரம்பரியமான பிரதியுரு ஓவியங்களைப் போலல்லாது அருப ஓவியங்கள் துணிவும் நேர்மையும் கொண்ட சுவைஞர்களின் உடனடி ரசனைக்கு உரியவை. அவர்களிடம் எத்தகைய முன்பதான தயார் நிலையையும் அவை வேண்டி நிற்பதில்லை. சுவரொட்டிகள், ஆடைவகைகள், என்பனவற்றில் அருப ஓவியப்பாணி அங்கீகரிக்கப்பட்டதொரு மரபாக வந்துள்ளது.இன்று அருப ஓவியப்பாணியானது ஒரு தற்காலிகமான தோற்றப்பாடு அல்ல என்றே கூறவேண்டும். யதார்த்தவாதம், மனப்பதிவு

(14-ம் பக்கம் பார்க்க)

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள், புதுமனை புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள், விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள், அறிமுக அட்டைகள் அடிக்கும் அட்டைகள், பிறந்த தின மற்றும் சுபதின அழைப்பிதழ் அடிக்கும் அட்டைகள், இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள், எழுதுகருவிகள், மின்சார உபகரணங்கள், அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் தீந்தைகள், மற்றும் இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் சகலவிதமான கடதாசி வகைகள் மட்டை வகைகள் அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

(இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கிகரிக்கப்பட்ட முகவர்கள்)

196, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்

05030

**ஆங்கிலம்**

**பேச வேண்டுமா?**

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நாமும் ஆங்கிலம் சரளமாக கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

- தபால் மூலம் ஆங்கிலம் கற்று ஒருபோதும் கதைக்க முடியாது என சிலர் சொல்ல கேட்டிருக்கின்றேன். ஆனுல் உங்களின் உளவியல் ரீதியில் அமைந்த பாடங்கள் எனது இலட்சியத்தை அடையவும், பய உணர்வையும் அகற்றி விட்டது.
  செல்வி பாத்திமா சலிமா
  எலுவில, பாணந்துறை
- தங்களின் ஆங்கில கல்வி விருத்தி யாழ். மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. நானும் உங்களின் பலாபலன்களை பெற்ற மாணவியரில் ஒருவர்.
  செல்வி பிரேமாவதி செல்லையா
  உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
- இப்போது எனக்கு ஆங்கிலம் பேச முடியும் எனும் மனத்திடத்தை உங்கள் தபால் மூலம் கல்வி ஏற்படுத்தியுள்ளது
  செல்வி நிர்மலா தங்கவேலு
  அப்புத்தளை.
- ஆங்கிலத்தை இலகுவாக மாணவர்களின் தராதரத்திற்கேற்ப ஆரம்பத்தில் இருந்து தபாலில் கற்றுக் கொள்ளக்கூடிய சிறந்த திட்டம் உங்களுடையதே.
  செல்வன் எஸ். எம். ராசா
  ஏழாலை வடக்கு, ஏழாலை.
- பிறைட் றெயினிங் சென்ரரின் ஆங்கில பாடப் பயிற்சி மூலம் நான் நல்ல பயன் அடைந்துள்ளேன்.
  செல்வன் ரி கேதீஸ்வரன்
  457, கே.கே.எஸ்.ரோட்,கோண்டாவில்.
- குறுகிய காலத்துக்குள்ளே ஆங்கிலக்கல்வியை திறம்படக் கற்றுக்கொடுக்க உங்களின் பிறைட் றெயினிங் சென்ரரால் தான் முடியும்.
  செல்வன் ச செல்வகுணச்சந்திரன்
  ஓடைக்கரை, பருத்தித்துறை.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**

P. O. BOX 162

COLOMBO.

05029

# கூந்தலில் எதற்காக கவனம் செலுத்துகிறோம்?

**மங்கையர் மஞ்சரி**

தமது தலைமயிரைப் பற்றிக் கவலைப்படாதவர்களே இல்லையெனலாம். தலை மயிர் நிறைந்ததாய் இருக்கும் போது பெருமைப்பட்டுக் கொள்பவர்கள் அது உதிர்ந்து மொட்டையாகும் போது கவலைப்பட்டுக் கொள்வார்கள். தலைமயிர் உதிர்வதற்கு பரம்பரை ஒரு காரணமாயிருந்தாலும் குறிப்பிட்டவர் தாய்வழி செல்லும் போது உதிர்வு தடுக்கப்படுகின்றது.

பல காரணிகளால் மயிர் உதிர்வு ஏற்படலாம். அவற்றில் வெய்யிலில் அதிகமாக நடமாடுதல், தலைக்குச் சோப்புப் போடுதல், கடினமான பிரஷ்களை உபயோகித்தல், நிறையான உணவு உட்கொள்ளாமை என்பன முக்கியமானவை.

புத்திசாலித்தனமாகவோ இல்லையோ கோடிக் கணக்கான ரூபாய்கள் தலைமயிருக்காக இன்று விரயமிடப்படுகின்றன. தலைமயிர் நிச்சயமாகக் கவர்ச்சியுடையது. பெண்களின் நீண்ட, சுதந்திரமாகப் பறக்கும் கூந்தல் அழகானதுடன் இனிமையான செய்திகளையும் தூதனுப்பும் ஆண்களின் உடல் மயிர், தாடி, மீசை என்பன அவர்களின் சக்தியையும், திடகாத்திரத்தையும் பிரதிபலிக்கும்.

ஒவ்வொருவரது தலையிலுள்ள தோலிலும் அண்ணளவாக 1,00,000 முதல் 1,50,000 வரையிலான மயிர்கள் முளைக்கின்றன. இவற்றில் சராசரியாக நாளாந்தம் 40முதல்100 வரையிலான மயிர்கள் விழுகின்றன. இப்படியே ஐந்து வருட காலத்துள் அனைத்து மயிர்களும் புதுப்பிக்கப்படுகின்றன. பெண் இன 'ஹார்மோன்கள்' ஆரோக்கியமான மயிர்கள் முளைக்கப் பொறுப்பாகின்றன.

'ஹார்மோன்களின்' அளவில் மாற்றத்தை உண்டு பண்ணும் எதுவும் தலை மயிரிலும் மாற்றங்களை உண்டாக்க வல்லது. சிலவகைக் குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகளில் அடங்கியுள்ள 'ஹார்மோன்'கள் தற்காலிக மயிர் உதிர்வை ஏற்படுத்தும், மேலும் இம் மாத்திரைகளின் பாவனையைக் கைவிடும் போதும் உதிர்வு தோன்றலாம். இருந்தாலும் அது ஒரு சில மாத காலத்துடன் சரியாகி விடும்.

**தலைமயிர் உதிர்வதற்கு பரம்பரைதான் காரணமா?**

ஒருவரின் உடலின் பொதுவான ஆரோக்கிய நிலையை அவரின் தலைமயிரின் அமைப்பைக் கொண்டு அறிய முடிகிறது. மயிரில் ஏற்படும் மாற்றங்கள் ஒருவரின் ஆரோக்கியமின்மையை எச்சரிப்பதாயுமிருக்கும். தலைமயிரில் ஏற்படும் ஒழுங்கீனம், ஈரல் இயக்கத்தில் சங்கடம் நீரிழிவு போன்ற நோய்களைச் சுட்டுவதாயும் அமையும்.

## வழிகள்

தலை மயிர் உதிர்வுக்கு உங்களது கவனயீனம் அல்லது பேணுதலில்லாமை என்பன காரணமாகும். கீழ் வரும் 9 பயனுள்ள அறிவுரைகளைக் கைக்கொள்வது கொண்டு உங்களது பொன்னான முடியைக் காக்கலாம்.

● போஷாக்குள்ள, அளவான உணவு வகைகளைப் புசித்தல். நீங்கள் சரியாகச் சாப்பிடாவிட்டால் உங்கள் முடி கஷ்டப்படும் கொழுப்புச் சத்து சேராததும் விட்டமின் நிறைந்ததுமான உணவே ஆரோக்கியமானது. அதிகளவு பழவகை, பச்சை இலைகள், மீன்வகை, மெதுவான இறைச்சி போன்றவற்றை உட்கொள்ளவும்.

● உடற்பயிற்சி செய்தல் உடலின் ஆரோக்கியத்திற்கு நல்லது. நாளாந்தம் ஒழுங்கான உடற்பயிற்சி முடி உதிர்வைக் குறைக்கும்.

● தேவையிருந்தால் எந்நாளும் மயிரைக் கழுவுதல் சூடுகுறைவான நீரினால் மயிரைச்சுத்தம்செய்வதுகொண்டு மயிரில் படியும் தூசு, அழுக்கு, வேர்வை என்பன அகலும்.

● எண்ணெய் தடவுதலால் மயிர்கள் செழித்து வளர்கின்றன. மயிர் சுத்தமானவுடன் உங்கள் மயிருக்கு ஒத்துவரும் சுத்தமான எண்ணெயை தடவுங்கள். எப்பொழுதும் மயிரிலுள்ள ஈரத்தை துவாயால் ஒத்துவதுகொண்டு நீக்குங்கள். துவாயை மயிரில் தேய்க்கக்கூடாது

● கூந்தலை இயற்கையாகவே உலர விடுங்கள். சிலவேளைகளில் உங்கள் கூந்தலை உலர விட நேரம் போதாமலிருந்தால் குறைந்த வேக வீச்சைக் கொண்ட 'ஹெயர் ட்ரையரை' உபயோகப்படுத்தவும். அதனை முடியிலிருந்து ஆறு அங்குலம் தள்ளிப் பிடியுங்கள். சில விநாடிகளுக்குத் தொடர்ந்து குறிப்பிட்டோர் இடத்திலேயே அதனைப் பிடித்துக்கொண்டிருப்பதைத் தவிருங்கள்.

● கூந்தல் ஈரமாயிருக்கும் போது அதனைச் சீவாதீர்கள். அகலமான (பற்கள்) இடைவெளியுடையதும் மெதுவான இயல்புடையதுமான சீப்பையே எப்போதும் பயன்படுத்துங்கள்.

● தலையில் பொடுகு வராது கவனியுங்கள். தலை காய்ந்த நிலையைவிட தலைக்கு எண்ணெய் தடவியபோது இது முக்கியமாகக் கவனிக்கப் பாலது.

● மயிருக்கு ஊறு விளைவிப்பதால் மயிர்கெட்டுப்போகும். தலைக்கு சாயமிடும்போதும் மற்றும் வேளைகளிலும் அதற்கெனச் சொல்லப்பட்ட விதிமுறைகளைச்சரிவர அனுசரியுங்கள். உங்கள் மயிர் ஆரோக்கியமானதாயிருந்தால் எந்த ஒரு குறிப்பிட்ட இன மருந்தையும் இடைவிடாது தொடர்ந்து பாவிக்காதீர்கள் தலைமயிரை இழுத்தெடுக்கக் கூடிய சாதனங்களையும் எக்காரணத்துக்காகவும் உபயோகிக்காதீர்கள்.

தலைக்கு தொப்பிபோன்றவற்றை அணிந்துகொள்வதால் உங்களது மயிர் பாதுகாப்பாகும்.

● முன்னிருந்த நிலைமைக்கே முடியைக் கொண்டுவரும் எனச் சொல்லப்படுவதும் அதி அவசரமாக மாற்றங்களை உண்டுபண்ணுவதுமான எச்சாதனத்தையும் உபயோகப்படுத்துவதைத் தவிருங்கள். அவை நிச்சயமாக முடிஉதிர்வையோ வழுக்கையையோ தடைப்படுத்தாது.

ஆரோக்கியமான மயிர்களைத் தாங்கிய தலையின்தோல் உயிரோட்டமுள்ள ஒருவரை 'டிசு'வாலானது. நீங்கள் அதனைப் பாதுகாப்பதாலும் அது விடுக்கும் எச்சரிக்கைகளைக் கவனிப்பதாலுமே அது உங்களிடத்தில் அன்பாயிருக்கும்.

தகவல்—டைஜஸ்ட்

# வாழ்வதும் மனத்தாலே! வீழ்வதும் மனத்தாலே!

**உளவியற் கட்டுரை**

**செல்வி மாலா தேவசகாயம்**

உளம் என்பது புறப் பொருளை அறியும் பொழுது கண்டும், கேட்டும், மோந்தும், சுவைத்தும், தொட்டும் அறிவதாகும். ஒரு புலன் அறிந்த காட்சியை பிறிதோர் புலன் அறியாததால் ஐவகை பொருளையே சுட்டுகின்றன என அறிவது ஒன்றுண்டு. 'அதுவே உளம்' என்றார் மக்டுகல் என்னும் ஆங்கில உளநூல் அறிஞர். அத்தோடு மனிதன் மனமென்னும் சிறையில் தன்னை அடைத்து வைத்திருக்கின்றான். தன் மனநிலையே தன் வாழ்வுக்கும், தாழ்வுக்கும் அடிப்படை. நமது வாழ்வில் ஏற்றமும், இறக்கமும் நமது மனநிலையைப் பொறுத்துள்ளது. இக்கருததினை மனிதன் நன்கு உணர்தல் அவசியம் என, உளவியல் மேதை கால்யுங் கூறுகிறார்.

## மனம்போல் வாழ்வு

ஜொனதன் ஸ்விப்ட் என்பவர் மனத்திற்கு சக்தி வேண்டுமானால் செய்யும் காரியங்கள், பேசும் வார்த்தைகள் எல்லாம், நேர்மையானவையாக வேண்டும் என்றும், சாந்தமும் மனச்செம்மையும் பழக்கத்தால் வரக்கூடியவைகள், என்றும் தானாக வந்து விட மாட்டா என்றும் கூறுகிறார். அத்தோடு அன்னி பௌன்ட் என்பவர் நன்றாகவே வேயப் பெறுத வீட்டில் மழைநீர் புகுவதுபோல் பண்படுத்தப்படாத மனத்தில் துர் எண்ணங்கள் புகுந்து விடும் என்கிறார். இவற்றோடு பழமொழிகளில் கூட மனிதனது மனத்தின் சுயரூபத்தை எடுத்துக் காட்டுவதற்காக எம்முன்னோர்கள் வகுத்து வைத்துள்ளார்கள். அதாவது எல்லா மகிழ்ச்சியும் மனதில் தான் இருக்கின்றது. போதுமென்ற மனமுள்ளவனே மகிழ்ச்சி உள்ளவனாக இருப்பான் என்பது பழமொழி. உன் உள்ளம், மனம் எப்படியோ அப்படியே உலகம் என்று கூறுகின்றது யூகொஸ்லாவியா பழமொழி.

'மனம் உண்டானால் இடமுண்டு' என்ற கருத்துச் செறிந்த பழமொழியை நாம் நமது அனுபவத்தில் நன்கு அறிந்திருக்கின்றோம். நமது மனம் மிகவும் சக்தி வாய்ந்த மந்திரக் கருவி போன்றது. நமது அனைத்து நினைவுகளும், செயல்களும் குறிப்பாக அறிதல், உணர்தல, விளைதல் என்னும் முக்கூற்றுக்களும் அங்கே தான் நடைபெறுகின்றன. எனவே நமது கட்டுப்பாட்டு நிலையம் அதுவென்றும் கூறலாம் எமது மனதிலே மன ஆற்றல் அல்லது விருப்பாற்றல் என்ற சக்தி உண்டு. அது மிகவும் சக்தி வாய்ந்த நமக்கே உரித்தான ஒன்று எம்மால் முடியாது என்று எதை நினைக்கிறோமோ அது முடிவதில்லை. எமது விருப்பாற்றலை நாம் எவ்வளவு பயன்படுத்துகிறோமோ அவ்வளவு பயன் பெறுவோம்.

## மனத்தின் ஆற்றல்

இந்த மனமானது உலகில் மிகவும் கடுமையானதும் இரகசியமானதும் தன்னையே அறிந்து கொள்வதும் என்று கூறுகிறார்கள், மனநூல் அறிஞர்கள். 'மனம் கொண்டதே மாளிகை' இது ஆன்றோர் வாக்கு இதிலிருந்து மனிதனின் வாழ்க்கையை நிர்ணயம் செய்வது மனமாகும். மனப் பலத்தில் ஏற்பட்ட முன்னேற்றமே நிரந்தரமானதாயும், முழுமையானதாயும் அமையும். வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு மனப்பலமே அவசியமாகும். மலர் சாய்ந்து போனால் சரமாகலாம், மலை சாய்ந்து போனால் சிலையாகலாம், இந்த மனம்சாய்ந்து போனால் என்ன செய்யலாம் என்று கவிஞர் கண்ணதாசன் வினவியுள்ளார். இதிலிருந்து ஒரு கவிஞரே மனத்தின் சக்தியை எப்படி உணர்ந்துள்ளார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

மனதிலே சிந்தனையை உருவாக்க தெரிந்தவர்கள் மட்டுமே வாழ்க்கையில் முதிர்ச்சி பெற்றவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

## உளவியல் ஆய்வுகள்

மனத்தை உளவியல் அறிஞர்கள் பிரித்து ஆராய்ந்துள்ளனர்.

ஒன்று சாதாரண நிலையில் மனம்-நனவானது புலனுணர்வுகள், உணர்ச்சிகள், விம்பங்கள், சிந்தனைகள், புலன்கட்சிகள் கொண்ட தொகுப்பாகும். மனமானது எந்நேரத்திலும் சுயமுள்ளது ஆகும் மனதை குறிப்பிட்ட காலத்தில் நடக்கும் அனுபவத்துள் அடக்கி விட முடியாது. மாறாக புலன் உணர்வுகள், புலன் கட்சிகள் என்பவற்றின் தொடர்ச்சியான மாற்றத்தைக் கொண்ட நிலையாகும். இந்த மனதின் நிலையானது இரண்டு வகையில் செயற்படுகின்றது. ஒன்று அந்தக் காலத்தில் என்ன நடந்து கொண்டு இருக்கின்றது என்பதை அறிந்த மனநிலை.

இரண்டாவது கனவு நிலையில் மனம்—இங்கு மனமானது இயங்குகின்றது. ஒரு உசார் நிலையில் வைக்கப்படுகின்றது. இது ஒரு குழம்பிய நிலையாகும். ஏனெனில் நினைவுகள் நிஜங்கள் தான் என்ற ஒரு பூரித்த நிலை இம் மன நிலை, நீடிப்பது ஒன்றல்ல.

மூன்றாவதாக தியான நிலையில் மனம்—இங்கு மனமானது ஒருவனின் விருப்பத்திற்கு ஏற்றதாக உசார் நிலைப்படுத்தப்படுகிறது இங்கு மனம் நிலைப்படுத்தப்பட்ட பக்குவப்படுத்தப்பட்ட நிலையை அடைந்திருக்கின்றது. வெளித் தூண்டலால் மனம் பாதிப்படையாத நிலையாகும்.

நான்காவதாக அறிதுயில் மனம்—இங்கு மனத்தின் சுய உணர்வானது இன்னொருவனின் உதவியோடு குறுக்கப்படுகிறது. இதனால் இந்நிலையிலுள்ள மனமானது மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றாக உருவாகின்றது அத்தோடு புலன் கட்சியில் ஏற்படும் மாற்றத்தை அனுபவிக்கக் கூடிய நிலைக்கு ஒருவனை உட்படுத்துகின்றது போதைமயக்கத்தில் மனம்—போதைப் பொருள்களால் சாதாரண செயல்பாடுகள் உசார்படுத்தப்பட்டு அதன் காரணமாக மன அனுபவத்தில் ஒரு ஏமாற்றம் ஏற்படுகின்றது. இம் மாற்றமானது நீடிப்பதில்லை அத்தோடு மனம் சாதாரண நிலைக்கு திரும்பிய பின் நடந்த மாற்றத்தை அறியும் திறனை இழக்கின்றது.

## மனமே காரணம்

இதிலிருந்து மனிதன் வாழ்வதும் மனதாலே, மனிதன் வீழ்வதும் மனதாலே என்ற முடிவுக்கு வந்துவிடலாம். உடலிலும் பார்க்க உள்ளத்திலும் பணத்திலும் பார்க்க குணத்தில்புறக்கவர்ச்சியிலும்பார்க்க அக அழகினில் நல்ல பொருத்தம் வேண்டும். காலத்தால், கலாசாரத்தால், கருத்துக்களால் இருவர் வேறுபட்டாலும், ஒருவரையொருவர் மதித்து விட்டுக்கொடுத்து அன்பு செய்யும் புரிந்துணர்வு அவர்களிடையே வளர்க்கப்படும் பொழுது அவர்களது இல்வாழ்க்கை இனிதே அமையும். குடும்பம் என்பது ஒரு கோவில். வாழ்க்கை என்பது ஒரு வசந்தம். வாழ்க்கையை வசந்தமாக்குவது மனம். ஏனென்றால் மனம் போல வாழ்வு. மனம்போல் மாங்கல்யம் என்பது ஆன்றோர் கூற்றுக்களாகும்.

வாழ்வில் பண்பட்ட உள்ளம் கொண்டவர்கள் இன்பத்தைக்கண்டு துள்ளுவதும் இல்லை, தோல்வியைக்கண்டு விரக்தியடைவதும் இல்லை, எத்தனை குடும்பங்களில் எண்ணற்ற பிரச்சனைகள், ஏராளமான சிக்கல்கள், அவை மனவேதனைகள், மனக் குழப்பங்கள், என்பதில் முடிகின்றன இதற்கெல்லாம் காரணம் மனமாகும்.

# வங்கிக்கு வந்த கன்னியின்பாடு

கிட்டிண பிள்ளை என்பார்
கிழவய தான பிள்ளை;
கட்டழ குடைய வர்தான்;
காசென்ருல் இலேசி வீயார்.
வெட்டிப்பேச் செதுவும் பேசார்;
வேட்டியை மடித்துக் கட்டிக்
சட்டையுஞ் சரிகை வைத்த
சால்வையும் போட்டுக் கொண்டு

வங்கியில் முதனுட் போட்ட
வவுச்சருக் குரிய காசைப்
பொங்கிய மகிழ்ச்சி யோடும்
பெற்றிடும் வேட்கை உந்த,
வங்கியுள் நுழைந்த கிட்ண
பிள்ளையுங் 'கவுண்டர்' அண்டை
தங்கி நின்று ''ஐயா'' என்ருர்;
'தா' என்ருர் ஒருவர் உள்ளே.

சுணக்கம நின்றி வீட்டில்
தூய்மையாய் நிரப்பி வந்த
பணமீட்புப் படிவத் தோடு
பகர் அடை யாளப் பத்ரம்
இணையவே கொடுத்து நின்ருர்;
'இந்தாடோக் கன்காட்' என்ன
மனக்களிப் புடனே வாங்கி
மக்கள்வெள் ளத்துள் நீந்தி.

வாங்கொன்றில் வந்தி ருந்து
மடியினின் றெடுத்தார்பையை;
பாங்கொடுவெற் றிலைசுண் ணும்பு
பாக்கையும் நசுக்கி வாய்க்குள்
தீங்கனி போல வைத்துத்
தின்றுகொண் டிருக்கும் போழ்து
ஆங்கொரு கன்னி வந்து
அருகினில் அமர்ந்தாள் அண்டி.

பொன்னிறக் கவுணும் போட்டுப்
பொலிவொடு இருந்த கன்னி
துன்னியரு கிருந்தோர் தள்ளத்
துவண்டிடை நொந்து பின்னர்
பன்னிப்போல், அருகி ருந்த
கிட்டிண பிள்ளை தன்னைப்
பின்னிய கொடியே போன்றே
பின்னும்நன் கணைந் திருந்தாள்;

வாய்க்குள்தாம் பூல எச்சில்
வடியவே தொடங்கும் வேளை
மூக்கினுள் தும்ம லுக்கோர்
அறிகுறி கிட்ண ருக்கு;
மூக்கினைக் கன்னி பக்கம்
திருப்பினர்; முடியவில்லை;
மூக்கினி லிருந்து இரட்டைத்
தும்மலைத் தும்மி விட்டார்.

மூக்குநீர் சிந்திக் கன்னி
முகத்தினிற் பன்னீ ராச்சு;
பாக்குநீர் பாவம்! கன்னி;
மடியினில் வெள்ள மாச்சு;
நோக்கினள் கவுணைக் கன்னி
நொந்துளம் வெந்தாள்; பின்னர்
நீக்கினள் முகப்பன் னீரை
நீலக்கைக் குட்டை கொண்டே!

கவுண்டரில் ''கிட்டிண பிள்ளை
கார்ட் நம்பர் எட்டு'' என்ற
'சவுண்' டொன்று கேட்கக் கிட்ணர்
'சடக்' கென எழுந்தார்;சென்ருர்;
கவுண்டருள் கார்ட்டை நீட்டிக்
காசினைப் பெற்ருர்; எண்ணிக்
கவுண்டரின் முன்னுல் உள்ள
கதவினுல் வெளியே சென்ருர்.

கவியரசு முருகசூரியன்

## பெருமை வாய்ந்த குடிசை

மாடியிலே ஏறி நின்று
ஓலைகளை எட்டிப் பார்த்து
கேலிகளைப் பேசிவரும்
போலிகளே சிந்தியுங்கள்
வேலிகளை மதிலாக்கி
வீடுகளைப் மேலெழுப்பி
வாழும் அந்த வாழ்க்கை
யினுல்
வந்திடாது சோறுமக்கு
வயலினிலே வந்திறங்கி
வறுமையுடன் போராடி
பொறுமையுடன்சோறுமக்கு
பெருமையுடன் தரும்
ஓலைகள் தான் அவை

குப்பிளான் ஜெகன்

## சுவடுகள்

அவனுக்கு
அதிகாலையில்
முற்றத்தை
தண்ணீர் தெளித்து
கூட்டிப் பெருக்குவதும்
ஓர் காலைக்கடன்!
சுகாதாரத்திற்காக அல்ல;
மனைவியின் மேலான
சந்தேகத்தை
மாலையில் வந்து
உறுதிப்படுத்துவதற்காக!
அவள்
அவதிப்படுவதும்
அயல் வீட்டுப் பெண்களின்
பாதங்களால் தான்!

ஜெகௌதா

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## வில் படாப் பாடு

கனகரா செனும் இன்ஸ்பெக்ரர்
கல்லூரி வகுப்புட் சென்று
'ஜனகனின் வில்லுத் தன்னை
உடைத்தவன் யாரோ?' என்ருர்
'சொல்லடா தம்பி' என்று
சொல்லினர் ஒருவனுக்குக்
கல்லென இருந்த அன்னுன்
கதறியே எழுந்து நின்ருன்
'மற்றவர் பொருள்கள் தம்மை
மறந்தும் நான் தீண்டமாட்டேன்
வில்தனை உடைத்த வில்லன்
யாரென அறிந்தேன் அல்லேன்'
'என்னடா கொடுமை' யென்று
இன்ஸ்பெக்ரர் வியந்து நின்று
ஆசிரியரினைப் பார்த்து
அழுபவர் போல நின்ருர்.
ஆசிரியரும் இன்ஸ்பெக்ரர்
அவர்களைப் பார்த்துச் சொன்னர்
'இவன் மிக நல்ல பையன்
பொய் சொல்லமாட்டான்' என்ருர்
அதிபரின் இடத்தை நோக்கி
அலறியபடி இன்ஸ்பெக்ரர்
விரைவினில் ஓடிச் சென்று
விவரத்தைச் சொல்லலானர்
அதிபரும் வெகுண்டெ ழுந்தார்
ஆத்திரம் கொண்ட அன்னர்
'அடிதனை இட்டால் அன்றி
உண்மைதான் வருமோ?' என்ருர்
வெல வெலத்தா ரின்ஸ்பெக்டர்
வீதியால் ஓடிப் பின்னும்
புயலெனப் பாய்து டீ. ஈ.
புறத்தினில் சென்ற மர்ந்தார்
நடந்தவை எல்லாம் சொன்னர்
நயமுடன் கேட்ட டீ. ஈ,
கிடந்த ஓர் இருக்கை மீது
கேலியாய் உதைந்துவிட்டு
பல்லினைக் காட்டி மெல்லச்
சிரித்தனர் 'ஹீ ஹீ' என்று
பின்னவர் சொன்னர் ஹீ ஹீ
வில் லொடிந்ததற்கு நீவிர்
வெல வெலத்தையோ பாவம்
என்னமாய்ப் பதைத்து விட்டீர்
பில்லினைப் புதிதாய் வாங்கும்
வில்லினை அனுப்பும் போம் போம்'
திடுக்குற்ருர் இன்ஸ்பெக்ரர்
திகைப்புடன் எழுந்து நின்ருர்
மடக்கெனத் தலையும் சுற்ற
மயங்கியே வீழ்ந்து போனர்
கம்பனைப் படித்த கல்வி
அதிகாரி பாவம் அந்த
வம்பனுல் வில்லுப் பாட்டால்
வில் படாப்பாடு பட்டார்.

உமா. சுமுகன்

## இப்படியும் இருக்கின்ருர்

ஆணழகன் நீயே என் அறிவழகன் நீயே
காதலனும் நீயே என் காவலனும் நீயே
கோமகனும் நீயே என் கொழுநனும் நீதான் என்று
கதைகள் பல கூறியே கருத்தை கவர்ந்திடுவர்
கடைக்கண்ணுலே பார்த்து காதல் மொழிபேசிடுவர்
என் வீட்டில் விசேடம் என இனிப்பு பல தந்திடுவர்
இனிக்க இனிக்க பேசிடுவர் இவரே என் உலகம் என்பர்
சிரித்து சிரித்து பேசிடுவர் எம் சிந்தையை மயக்கிடுவர்
தொடர்ந்து வரும் வேளையிலே தொடர்பைஅறுத்திடவே
பெற்றவரைக் காட்டியே பெற்றிடுவர் விடையை
நீ எனக்கு இல்லையெனநீலிக் கண்ணீர் வடித்திடுவாள்
அன்றுடன் முடிந்துவிடும் அவள் காதல் நாடகம்
காலம் சில சென்றபின் காதகியை மறந்திடினும்
மண ஓலை வந்திடுமே மன உளைச்சல் தந்திடுமே
மனத்தை மாற்றினள் மண மகனை மாற்றினள்
இதயத்தை மாற்றினள் இனி இவளை நம்பாதீர்
எதிர்க்கருத்து வேண்டுமென இக்கவிதை எழுதவில்லை
மத்தளத்திற்கு இருபக்கமுண்டு என்று மட்டுமே
கூறினேன்
எங்கை விரல்கள் ஒன்றைப்போலொன்று இல்லை
என்பது உண்மை
உலக மாந்தரும் இப்படியே என சொல்லித்தான்
தெரிவதில்லை

கு. சிவா

## எண்ணம் உயர்கிறதே

அன்பே
உன் வீட்டு
யன்னல் கண்ணுடிகள்
''ஷெல்லால்''
உடைந்திருப்பதைப்போல
உன்
உதட்டிலிருந்து பிறக்கும்
''சொல்லால்''
என் இதயத்தை
உடைத்து விடாதே
இது மீண்டும்
மாற்றிப்போடுவதற்கு
கண்ணுடியல்ல
இதயம்...

அன்பே
உன் வீட்டு
''அசோக்கா'' மரம்போல
என் மனதில்
உன்னைப் பற்றிய
எண்ணங்கள்
வளர்ந்து
உயர்ந்துகொண்டே
போகிறதே...

கா. யோ. கிரிதரன்

## இதயத்தின் ஏக்கம்

அந்த
நந்தவனத்தோரம்
ஓங்கியொரு ஆலமரம்
அதனடியில் சாய்ந்து
கொண்டே
என் எண்ணங்கட்
கெல்லாம்
குழை அடித்துக்
கொண்டிருந்தேன்.

அங்கு
வந்த வண்டுகளெல்லாம்
அன்று
வயசுக்கு வந்த
பூ இதழ்களிலே
ஏதேதோ
உரை எழுதிச்செல்ல
அங்கு
அமர்க்களமாய் - வந்த
புயலொன்று
சின்னமர -
பெரியமர -
பேதமின்றி
முத்தமிட்டகல
இளையவன் - நான்
என்னினியவளை
நினைத்துக் கொண்டேன்.

காலையில் தான்
நான் அவளை
பார்த்திடினும்
மாலையிலும்
ஒரு தடவை
பார்த்திடவே
அவள்
வீட்டு
வீதியோரம்
போய் வருவேன்.

இன்று
அவளை
தொடர்ந்து -
தொடர்ந்து -
அவள்
கூந்தலின் வாசனையை
புரிந்து கொண்டேன்
அவள்
மனதின் யோசனையை
மட்டும்
இன்னமும் புரியவில்லை.

என்
இதயத்தின் அறைகளும்
அவள் வரவிற்காக
காத்திருக்கின்றன
காரிகையே
நீ
வந்தமர்ந்து கொண்டு
ஒரு தாப்பாள்
போட்டு விடு.

என்
மானசீக காதலியே!
நீ -
என்னை நேசித்து விடு
இல்லையேல்
நான் -
இவ் உலகையே
கோபித்து விடுவேன்.

முரளிதரன்




## விலங்குகள் விதம் விதம் 27:

# கழுதைப்புலி

தன்குட்டிகளைத் தானே உண்ணும், செத்த விலங்குகளை உண்ணும் கொடுமையான விலங்குதான் கழுதைப்புலி ஆகும். இறந்த மனித உடல் என்றால் கழுதைப்புலிக்கு வலுகொண்டாட்டம்தான். கழுதைப்புலிகள் ஆசிய, ஆபிரிக்க காடுகளில் வாழ்கின்றன.

உலகில் 4 வகையான கழுதைப்புலிகள் வாழ்கின்றன. கழுதைப்புலியின் முன் இரு கால்கள் உயரமாகவும் பின் கால்கள் கட்டையாகவும் இருக்கும். இரை உண்கையில் எலும்பு கொம்புகளைக் கூட விட்டுவைப்பதில்லை. செமிக்காத பொருட்களைக் கக்கிவிடும் தன்மை கொண்டது இக் கழுதைப்புலி. இவை தனித்தனியாக பெரிய வெளியில் வளை தோண்டி வாழும். இரு கழுதைப் புலிகளின் பொந்துகளுக்கு நிலத்தின்கீழ் இணைப்பு இருக்கும்.

இவற்றின் வாலின் அடிப்பகுதியில் சுரக்கும் திரவத்தை மரங்களில் பூசிவிட்டால் அதன் வாசனையை முகர்ந்து மற்றைய கழுதைப்புலிகளும் தொடர்ந்து வரும்.

இவை சந்திக்கும் வேளையில் முகத்தோடு முகம் தேய்த்தும் வால்பையை தேய்த்தும் குசலம் விசாரிக்கும். கழுதைப்புலிகள் கத்துயது சிரிப்பதுபோல இருக்கும். கழுதைப்புலி இரையை பகிர்ந்தே உண்ணும் வழக்கத்தை கொண்டது கழுதைப் புலிகள் ஒன்று கூடினால் புலியே பயந்து ஓடிவிடும் அவ்வளவு கொடியது கழுதைப் புலி. நான்கு குட்டிகளை ஒரே தடவையில் ஈனும். பெண் கழுதைப்புலி குட்டிகளுக்கு 17மாதம் வரை பால்கொடுக்கும்.

இதனை சிறுவயது முதல் வளர்த்தால் உற்ற நண்பனாகிவிடும்.

தி. தவபாலன்

# உலக வரலாற்றில் ரோஜா

★ ரோஜா இதழ்களை பரப்பி அவற்றின் மீது படுப்பது ரோமானிய உயர் குலத்தின் வழக்கம்.

★ எகிப்திய அழகி கிளியோபாட்ராமார்க் அன்ரனியை ரோஜா இதழ்களை பரப்பிவரவேற்றாள்.

★ ரோமானியரும் கிரேக்கர்களும் தங்களின் அன்புக்குரியவர்கள் இறந்தால் அவர்களின் கல்லறைகளை ரோஜா மலர்களால் அலங்கரிப்பது வழக்கம்.

★ நெப்போலியனின் காதலி ஜோஸ்பின் உலகப் புகழ் பெற்ற பெரிய ரோஜா தோட்டத்தை அமைத்து அதில் இருநூறுக்கு மேற்பட்ட ரோஜா இனங்களை வளர்த்தாள்.

★ இரண்டாம் உலகப் போரின் போது இராணுவ வீரர்களுக்கு விற்றமின் சி சத்துக்காக ரோஜா இதழ்களையே உண்ணக் கொடுத்தனர்.

★ அமெரிக்காவின் தேசிய மலர் ரோஜா.

கசில்டா ஆர் ஆர். அற்றியானந்தம்

# பூந்தோட்டம் அங்கத்தவர்

இலக்கம் 301 சிவமாலா சிவப்பிரகாசம்
வயது 12, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 302 பத்மநாதன் கலைமதி
வயது 09, அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மீசாலை

இலக்கம் 303 நவரட்ணம் அகிலா
வயது 11, கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், யாழ்ப்பாணம்

இலக்கம் 304 நாகேந்திரராசா கார்த்திகேயன்
வயது 08, ட்றிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி

இலக்கம் 305 நாகேந்திரன் மயூரன்
வயது 11, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

இலக்கம் 306 சண்முகலிங்கம் சசி
வயது 11, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,

இலக்கம் 307 சண்முகம் அரவிந்தன்
வயது 10, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுழிபுரம்

இலக்கம் 308 செல்வராஜா தாரகா
வயது 07, திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்

இலக்கம் 309 வாசுதேவன் தேவதாஸ்
வயது 12, ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை

இலக்கம் 310 கதிர்வேல் விஜிதரன்
வயது 12, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

# பூமி சுழல்வதால் ஏற்படும் விளைவுகள்

பூமி சுழல்வதால் பகலும், இரவும் உண்டாகின்றன. பகற்பொழுதும் பகுதிபகுதியாகத் தோன்றுகிறது.

சூரியனை நோக்கி இருக்கும் பகுதிகளுக்குக் காலை நேரமாகவும், சூரியன் செங்குத்தாக வரும் பகுதிகளுக்கு மதிய நேரமாகவும், சூரியனை விட்டு விலகி இருக்கும் பகுதிகளுக்கு மாலை நேரமாகவும் இருக்கிறது.

காற்றும், மழையும், மாறி, மாறி வருகின்றன. சந்திரனும் மற்றைய கிரகங்களும் பூமியைக் கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றி வருவதைப் போல் தோன்றுகின்றன. ஆனால் உண்மையில் பூமி தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவருகின்றது. மற்றக் கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன.

# காலையில் படிப்பதே நல்லது

காலைப் பொழுது அமைதியானது. உற்சாகமானது. நாம் இரவில் தூங்கும் போது எமது உடலும் மனமும் பூரண ஓய்வு பெறுகின்றன. இதனால் காலை எழும்போது சிந்தித்து மனதில் படியவைக்கும் ஆற்றல் அதிகமாக இருக்கிறது. உடல் பூரண ஓய்வு பெறுமல் கண் முதலிய உறுப்புக்களின்செயற்பாட்டுத்திறன் அதிகமாகவே இருக்கும்.

எனவே உடலும் உள்ளமும் ஒருங்கே தயார் நிலையை அடக்கின்றன. இதனால் காலையிற் படிப்பது மிகவும் இலகுவானதாக இருக்கின்றது. காலையிற் படிக்கும் பாடம் இலகுவில் மனதில் படிகின்றது. மனனம் பண்ணுவதற்கும் காலைப் பொழுதே ஏற்றது. காலைப்பொழுதில் பொழுது போக்குவதற்கான அம்சங்களும் இல்லாதிருப்பதால் மனத்தை ஒரு முகப்படுத்திப் படிக்க முடிகிறது.

காலை நாலுமணியளவில் எழுந்து காலைக்கடன்களை முடித்து இறைவனை வழிபட்ட பின்பு படிக்கத் தொடங்குதல் வேண்டும். அவ்வாறு படிக்கும்இரண்டு மணிநேரப் படிப்பு மாலையில் படிக்கும் நாலு ஐந்து மணித்தியாலப் படிப்பிலும் கூடிய பயன் உள்ளது பாரதியார் 'காலை எழுந்தவுடன் படிப்பு பின் கனிவு தரும் நல்ல பாட்டு'' எனப்படிக்கும் முறையைக் கூறுவதும் நோக்கத் தக்கது. எனவே உடலுக்கும் உள்ளத்திற்கும்இன்பந்தரும் காலைப் பொழுதில் படிப்பதே சாலவும் சிறந்தது.

செல்வராசா நிசாதுலன்
(அங்கத்தவர் இலக்கம் 149)

# மின்பல்ப் உடையும் போது

மின்பல்ப் உடையும் போது பெரும் சத்தம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் பல்ப்பின் உட்புறம் காற்று இல்லாமல் இருப்பதுதான்.

பல்ப் உடையும் போது வெளியில் இருக்கும் காற்று எல்லாப் பக்கங்களிலிருந்தும் அதிக வேகத்தோடு பல்ப்பிலுள்ள வெற்றிடத்தை நிரப்ப வருகிறது பல்ப் உடையும் நேரமும் காற்றுப் புகும் நேரமும் ஒன்றாக இருப்பதால் அது பெரும் சத்தமாகக் கேட்கிறது.

## முரசொலி பூந்தோட்டம்
### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..............................

வயது: ..............................

பாடசாலையின்
பெயர்: ..............................

கல்விகற்கும் வகுப்பு: ..............................


வீட்டு முகவரி: ..............................

கையொப்பம்: ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

.................... ....................
திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினைந்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)



நீண்ட செவியன்
நான் தம்பி
நெருப்பு விழியன்
நான் தம்பி
கூண்டில் அடைத்து
வைத்தாயே
குந்தி இருக்கிறேன்
தம்பி!
வெளியில் என்னை
விட்டுப் பார்!
வேகத்தை நீ
கேட்டுப் பார்!
வழியில் . . . . . .
வந்தாலே
எனக்கு நித்திரை
வரும் தம்பி

● சத்தியசீலன்

(கீறிட்ட இடத்தை நிரப்பினால் சிரிப்புவரும்)
(விடை – 15-ம் பக்கம்)

# தெரிந்து கொள்ளுங்கள்

● உலகின் முதல் தபாற்தலையானது 1840 ஆம் ஆண்டு மேமாதம் 6 ந்திகதி பிரிட்டனில் வெளியிடப்பட்டது.

● ஐ. நா. சபையில் இலங்கை 1955 ஆம் ஆண்டு டிசம்பர் 14ந்–திகதி அங்கத்துவம் பெற்றது.

● ஆங்கில அகராதியை முதன் முதலில் எழுதியவர் டாக்டர் சாம்யுவல் ஜோன்சன்.

● இலங்கையின் முதற் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சேர் ஐவர் ஜெனிங்ஸன்.

● சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்தவர் சேர் ஐசாக் பீற்மன்.

● இலங்கையின் நாணய அலகு முறை 1872 ஆம் ஆண்டு அமுலானது

● 'ஹோமியோபதி' வைத்திய முறையைக் கண்டு பிடித்தவர் டாக்டர் ஹனிமன்.

● 'பிறேல்' முறை என்றால் பார்வையற்றோர் கை விரல்களால் எழுத்துக்களைக் கற்கும் முறை.

● சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைத் தாபித்தவர் கென்றிடு நான்ற்.

சாயி இ. அனுராதன்

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ் சோதிடர் ச. அரியநாயகம்

## 07-05-1989 — 13-05-1989

**மேடம்:** வீண் விரையம், இனப்பகை, பெரியோராதரவு, எண்ணிய எண்ணம் தடை, வெளியூர் செய்தியால் நன்மை, வாகன மாற்றம், இளைய சகோதரவழியுதவி, மாமன் வழியில் நன்மை, வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் சமபலன்,

**இடபம்:** பெண்களால் கவலை திருடர் பயம், வாகன நஷ்டம் வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் சமபலன், தூர தேசம் போனவர்கள் வருகை, புதுத்தொழில், உத்தியோக இடமாற்றம், தேடியவர் வருகை,

**மிதுனம்:** விவாக நிச்சயம், பணவரவு, புதுத் தொழில். திடீர் பிரயாணம் இலட்சுமி கடாச்சம், வாகன மாற்றம், இளைய சகோதரவழியுதவி. மனைபூமிச் சேர்க்கை கலைஞர்கள் கௌரவிக்கப்படல்

**கடகம்:** உயர் பதவி, தேடியவர் வருகை, தடைப்பட்ட விவாக நிச்சயம், வாகன இலாபம், கடல் தொழில்செய்வோர் இயந்திரத் தொழில் செய்வோர் மகிழ்ச்சி, மனையலங்காரம் மாமன்வழியுதவி,

**சிங்கம்:** புகழ் தேடிவரும், கல்வியால் புகழ், காதலர் மகிழ்ச்சி, விவாக நிச்சயம், பணவரவு, வாகன சேர்க்கை, இளைய சகோதர வழியுதவி, வெளியூர் போனவர்கள் வருகை, புதுத்தொழில்.

**கன்னி:** பிதா வழியுதவி, பணவரவு, வாகன சுகம். விவாகப்பேறு, புத்திரரால் புகழ், தெய்வ ஆசி, புதுமனையலங்காரம், வணிகர்கள் இயந்திர தொழில் செய்வோர் இலாபம், கல்வியாளர்கௌரவிக்கப்படல்.

**துலாம்:** மாதா வழியுதவி வாகன இலாபம் வணிகர்கள் மகிழ்ச்சி, மூத்த சகோதரவழியுதவி, தேடியவர் வருகை, மனை பூமியால் நன்மை ஆடையாபரண சிறப்பு, புதுத்தொழில், உயர் பதவி, இராஜயோகம், தேடியவர் வருகை.

**விருட்சிகம்:** வாகன சுகம். வணிகர்கள் இலாபம், பெரியோராதரவு புகழ் தேடிவரும், புண்ணிய வழிபாடு, கொடுக்கல் வாங்கல் சிறப்பு, பூமியால் இலாபம் கலைஞர்கள் கௌரவிக்கப்படல்

**தனுசு:** மங்களகாரிய நிச்சயம் பெரியோராசி, வாகன இலாபம், வணிகர்கள் இலாபம், புதுத்தொழில், புண்ணிய வழிபாடு, பெரியோராசி. புகழ் தேடிவரும், தடைப்பட்ட பணம் கிடைக்கும், திடீர்பிரயாணம்.

**மகரம்:** உடல் ஒட்டிய ரோகம், வீண் செலவு, விவாகத் தடை, தூரத்து செய்தியால் நன்மை வாகன மாற்றம் மனை பூமியால் கவலை, வெளியிடத்து செய்தியால் நன்மை.

**கும்பம்:** தூரத்து பிரயாணம் உயர்பதவி, தொழில் மாற்றம் எண்ணியது நடக்கும், மூத்த சகோதரவழி நன்மை, பிரிந்த காதலர் ஒன்று சேருவார், தடைப்பட்ட பணவரவு. மாதாவழி சொத்து சேரும்.

**மீனம்** வாகன நஷ்டம் பெரியோரால் உதவி, உடல் நலம், விவாக நிச்சயம் இரு தொழில் வருமானம், பகைத்தவர்கள் உறவு, வெளியூர் போனவர்கள் வருகை, கல்வியால் உயர்பதவி, வணிகர்கள் இலாபம்.


# வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

## அமெரிக்கா

1. பொது வேலையாட்கள் கப்பல்தள வேலையாட்கள் — 500பேர் தேவை 500 US$
2. ஹோட்டலுக்கு உதவியாளர்கள் பெண்களும், ஆண்களும் — 100பேர் தேவை 600 US$
3. தொழிற்பேட்டைக்கு/ஆலைக்கு வேலையாட்கள் — 400பேர் தேவை 500 US$

(ஓரளவு ஆங்கில அறிவு அவசியம்)

உடனடியாக தொடர்புகொள்ளவும்

## சவூதியில்

கிளினேர்ஸ் 20 பேர் தேவை
சம்பளம் மாதம் 450+150 S. R.
இருப்பிடம் கொடுக்கப்படும்.

## சைப்பான்

தச்சு வேலையாட்கள், மேசன் வேலையாட்கள்
சம்பளம் ஒரு மணித்தியாலத்துக்கு 2.15 US$

(லேபர்) பொது வேலையாட்கள் தேவை

உடனடியாக நேரில் தொடர்புகொள்ளவும்

**INTERNATIONAL TRAVELS GROUP LTD**

கிளை:
13, ஆஸ்பத்திரி வீதி.
கொட்டடி
யாழ்ப்பாணம்

No. 7, NANDANA GARDENS
BAMBALAPITIYA
Colombo-4
Tele: 584900

05065


### காலங்கள்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போதும் அவன் மறுத்துவிட்டுச் சென்றான்.

அவற்றையெல்லாம் நினைக்கும் தோறும் இனம் புரியாத ஓர் இன்ப வேதனைக்குள்ளாகித் தவித்தாள் சிந்து

இருவேறு உள்ளங்களின் மனத்தவிப்பை புரிந்து கொள்ளாமல் இரவு நகர்ந்து கொண்டிருந்தது.

ரகுவரன் கடிகாரத்தைப் பார்த்தான் ஒன்பதுக்கு இன்னும் ஐந்து நிமிடங்களிருந்தன. சின்னையா பால் கோப்பையுடன் அவன் அருகில் வந்து நின்றான். பால் கோப்பையை அவனிடம் கொடுத்துவிட்டு தலையை சொறிந்து நின்றான்.

'என்ன சின்னையா?'

'தம்பி கோபிக்காவிட்டால் ஒரு விடயம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்' என்றான்

'சொல்லேன் சின்னையா எனக்கு தாயும் தந்தையுமாயிருக்கும் உங்களை கோபிப்பேனா?' என்றான்.

'சின்னையா கூறிய விடயம் அவனைப் பிரமிக்க வைத்தது மட்டுமல்ல சிந்திக்கவும் வைத்து விட்டது.

(வளரும்)

### தற்காலக்..

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதம் என்பன போன்ற போக்குகளுக்கு இது எதிரானதுமல்ல மாறாக அவற்றுடன் இணைந்து, அவையனைத்தையும் வளப்படுத்தும் ஒரு போக்காகும். அரூபக் கலையானது எமது காலத்தின் கண்ணாடியாகவல்லாது மனித வாழ்க்கையை புத்தாக்கம் செய்வதொன்றாக கலை வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

(தொடரும்)

### க. நா. சுவும்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பான கருத்தொற்றுமை, இலக்கியத்தை ஒப்பிட்டு ஆராய்கின்ற போக்கு, மாற்றுக்கருத்துக்கள் வரும்போது உணர்ச்சிவயப்படாமை போன்ற ஒற்றுமைகளை எடுத்துக்காட்டும் ஆசிரியர், இருவரும் மார்க்சிய சிந்தனை தொடர்பாகவும் வேறு விடயங்களிலும் வேறுபட்டிருப்பதாகவும் குறிப்பிடுவர். வேறுபாடுகளைத் தொகுத்துக் கூறுமிடத்து ''பழைய பண்டித மரபையும், புதிய மரபுகளையும் போற்றியவர் க. கை. க நா. சு. புதிய மரபுகளையும், புதிய இலக்கியங்களையும் பற்றியே விமர்சித்தவர். பல்கலைக்கழக அங்கீகாரத்தோடு கல்வியாளர்க்குப்,பாட போதனைக்காகவும் எழுதியவர் க. கை. பத்திரிகைகளை நினைவில் ஊன்றி, தன் எழுத்துக்களைப் படிக்கும் வாசகரை மனதில் கொண்டு எழுதியவர் க நா. சு. குறிப்பிட்ட ஒரு கொள்கையாளராகத் தன்னை க. கை. வெளிப்படையாகக் காட்டிக் கொள்வார். க. நா சு. தன்னை ஒரு கொள்கையைச் சார்ந்தவராகக் குறிப்பிட்டுக் கூறவில்லை'' எனக் காட்டப்பட்டுள்ளது.

க நா. சு. தன்னுடைய நாட்டைச் சேர்ந்தவரென்ற காரணத்தால் அளவுக்கு மீறிப் புகழ் வார்த்தைகளை ஆசிரியர் கூறவில்லை. கைலாசபதி ஈழத்தவர் என்ற காரணத்தால் குறைத்தும் மதிப்பிடவில்லை. இந்த வகையில் பு. சி. கணேசன் அவர்களுடைய பக்கஞ் சாரா மதிப்பீடு பாராட்டுக்குரியதாகின்றது. ''தமிழ்ப் பண்டிதர்களுக்காகவும், இலக்கியப் பத்திரிகைக்காரர்களுக்காகவும், இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சீண்டுவதற்காகவும் மட்டுமே திறனாய்வும், விமர்சனமும் வெளிவரும் நிலை மாறவேண்டும். அத்தகைய மாறுதற் காலமே தமிழ் மொழியின் புது வளர்ச்சிக் காலம்'' என்று பொருத்தமாக நூலை முடித்து வைக்கிறார் ஆசிரியர்.

# ரமழான் சிந்தனைகள்

தொகுப்பு: மௌலவி கே.பி. நஸார்தீன் (ரஷாதி)

ஒருமுறை நபிகள் (ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகைக்காகச் சென்று அப்பெருநாள் தொழுகை முடிந்தவுடன் தமது தோழர்களுக்குப் பின்வருமாறு உபதேசித்தார்கள் என்னருமைத் தோழர்களே! நீங்கள் பெருநாள் தொழுகைக்காக வரும்போது ஒரு பாதையாலும் போகும் போது வேறொரு பாதையாலும் செல்லுங்கள், பாதைகளில் ஏழைகள், அநாதைகள், வழிப்போக்கர்கள் ஆகியோரைச் சந்தித்தால் அவர்களை உங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று உபசரித்து மிக்க மகிழ்ச்சியில் ஆழ்த்துங்கள் என்றார்கள். எனவே நாளை வரும் பெருநாளில் நாம் இந்த மனப்பான்மையோடு எங்களிலிருக்கும் ஏழைகளையும், அநாதைகளையும் நன்றாக உபசரித்து இறைவனின் திருப்தியைப் பெறுவோமாக.

**ஸஹர் முடிவு 4-21**
**நோன்பு திறக்கும் நேரம் 6-20**

### குருடு ..

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

பையையும் கூப்பனையும் எடு உனக்கு உதவாமல் வேறை ஆருக்கு உதவப்போறன்!'

மகிழ்ச்சியோடு பையையும் கூப்பனையும்எடுத்துக் கொண்டு தடியால் தட்டித் தட்டிப் பழகிப் போன தடத்தால் கடைக்குப் போகிறான் நல்லம்மாவோடு மனம் திறந்து பேச வேண்டுமென்ற ஆசை மனதில் கருக்கூட்டி நிற்கிறது. கடைக்கு வருவதற்கிடையில் ஆசையைச் சொல்ல வார்த்தைகளை நெஞ்சிலிருந்து உதட்டுக்குத் தட்டி முணு முணுத்தும் பொறுக்கிக் கொள்கிறான்.

அரிசிப் பையை இறக்கி வைத்துவிட்டுக் கூப்பனை அவள் கையிலே கொடுத்துவிட்டு நெற்றியிலே அரும்பி நின்ற வியர்வையை வளித்துச் சிதற அடிக்கிறான்.

'நல்லம் .........?'

'என்ன சின்னையா?'

'என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'

'என்ன புதிசா? நீர் அருமையான மனுசன்'

'நல்லம்'

'என்ன?'

'என்னை நீ நல்ல மனுசனெண்டு மதிச்சா என்ரை ஆசையை நிறைவேத்தி வைப்பியே?'

'ஓ .....சொல்லுமன்'

'நான் உன்னை......'

'என்னை...'

'கலியாணம் கட்ட வேணுமெண்டு......'

'என்ன?'

கூப்பன் அவரது முகத்திலே மோதி, மடியிலே விழுகின்றது. அவனது ஆசையும் ..

'குருட்டு மனிசனெண்டு நான் இவ்வளவு மரியாதை தர. நீர் என்னடா எண்டால்... உமக்கேன் இந்தக் கண்கெட்ட ஆசை.'

'நல்லம் என்னிலை கோவிக்கிறியா?'

'வீட்டுக்காறர் எனக்குச் சந்திக்கடைச் சுப்பையாவைப் பேசி எல்லாம் முற்றாக்கி வைச்சிருக்க எனக்கு எளிய பேர் வாங்கித்தரவோ இந்தக் கோலம் கொண்டனீர்?'

சின்னையா அவமானத்தில் சிறுக்கிறான். அவனது மனமேட்டில் முளைவிட்டு வளர்ந்திருந்த ஆசைக் செடி அப்படியே ஆழப்புதைந்து விடுகிறது.

'தம்பி, நான் இப்பவும் நல்லத்துக்காகத்தான் மண்ணெண்ணை வாங்க வந்தனான். அவளின்ரை புருசன்நல்லவன்; எனக்கொரு கொட்டிலையும் ஒதுக்கிச் சாப்பாடும் போடுறான்.'

'சின்னையா'

என் குரல் கரகரக்கிறது.

'நல்லம் என்னை மன்னிச்சிட்டாள். ஒரு வீண் ஆசை வந்தமாதிரிப் போட்டுது. இப்ப அவள் என்ரை தங்கச்சி மாதிரி. சின்னனிலே நாங்களெல்லாம் ஒண்டாயிருந்து விளையாடினது எனக்கு அடிக்கடி நினைவு வரும்.'

அவனுக்கு முன்னால் நிற்க என் மனம் கூசுகின்றது. என்னை அவனுடைய உணர்ச்சிகளெல்லாம் உருவமெடுத்து வந்து கழுத்தை நெரிப்பது போன்று உள்ளத் தகிப்பிலே வியர்வை கக்கிறது அவனுடைய முகத்திலே கவலைகள் எல்லாவற்றையும் மூடிய புன்னகை நெளிய...

என்னைச் சுடுகிறது.

பளீரென்று அறையெங்கும் ஒளி பரவுகின்றது. பல்கலைக்கழகம் பழையபடி வெளிச்சப் புள்ளிகளால் பொட்டிடப்படுகின்றது; மாணவர்களது கூச்சல் அப்படியே ஒடுங்கி விடுகின்றது

இருளுக்கூடாக ஓடிக்கொண்டிருந்த நினைவு ஒளி மங்கிப் போகின்றது.

நான் யன்னலைத் திறந்து அறைக்கு வெளியே பார்க்கிறேன். இருளும் ஒளியும் கலந்து மங்கிப் போய்...மலை முகட்டுக்குமேல் எறித்துக் கொண்டிருக்கும் நிலவுக்குள் யாரோ தடியை வைத்துக் கொண்டு குந்திக் கொண்டிருக்குமாப் போன்ற பிரமை.

'சின்னையாவா?'

நான் முணுமுணுக்கிறேன்.

'சின்னையா! அந்தத் தைப் பொங்கலண்டு நீ நல்லம்மா வீட்டை விளையாட வர விளையாட்டுக்காக அவளின்ரை வீட்டு அந்தப் பனை மரத்துக்குப் பின்னாலை ஒளிச்சு நிண்டு, அந்தப் பெரிய கப்பல் வெடியைக் கொளுத்தி உன்ரை காலுக்கை எறிஞ்சுபோட்டு, பயத்திலை நான் ஓடிப் போகாட்டி இண்டைக்கு நீ இப்படியே இருப்பாய்? ●


# R. M. S. பந்தல் சேவை

திருமண வைபவங்கள் முதற்கொண்டு, வேறு சகல விதமான வைபவங்களுக்கும் உடனடியாக அழகிய பந்தல் அமைத்துக் கொடுக்கப்படும்- அத்துடன் பந்தலை அலங்கரிப்பதற்குரிய மாலைகளும், கதிரைகளும் கொடுக்கப்படும். இவற்றைப்பெற நீங்கள் நாடவேண்டிய முகவரி:

இ. சிவகுருநாதன்

**R. M. S. பந்தல் சேவை**

(பத்தாவைச் சந்திக்கருகாமை)

கீரிமலை வீதி இளவாலை

05028

13-ம் பக்கப் பாடல் புதிருக்கான விடை

## ஆனை

## கம்பனின் பார்வையில்

(... 3-ம் பக்கத் தொடர்ச்சி)

கெடு முடிந்து விட்டதே என்று கவலை கொண்டு தன் உயிரைப் போக்கிக் கொள்ளத் தயாராக நிற்கிருனே பரதன் அவனும் இராமனுக்கு ஒரு தம்பி.

இந்தநிலைமைகளுக்கிடையே தசரதனின் மகனுகப் பிறந்து, இராமனின் தம்பியாக நானும் ஒருவன் வெட்கமில்லாமல் உன் சொல்லைக் கேட்டுக் கொண்டு,உயிர் நீக்காமல் நிற்கின்றேனே. இந்த அரசாட்சியை நினைத்து ஆசைகொண்டு தான் நான் இன்னும் இறக்காமல் இருக்கிறேன் என்று நினைத்தாயோ இந்த அரசாட்சி எனக்கு என் மூத்தோரை விட இனிமையானதோ'' என்று கூறுகிறுன் சத்துருக்னன்.

காளை நிலமகளைக் கைவிட்டுப்
போவானைக் காத்துப் பின்பு
போனுனும் ஒரு தம்பி; போனவர்கள்
வருமவதிபோயிற்றென்னு
ஆனுத உயிர் விடவென்றமைவானும்
ஒரு தம்பி; அயலேநானுது
யானுமிவ் வரசாள்வேன் என்னே இவ்
அரசாட்சி இனிதே அம்மா!

''உங்களுக்கெல்லாம் அரசாட்சியை விடப் பாசமும், கடமையும் பெரிதாக இருக்க எனக்கு மட்டும் அரசாட்சியும், சுகபோகமும் பெரிதாக ஆகிவிடமுடியுமா'' என்கிருன் சத்துருக்னன். ''யானும் இவ் அரசாள்வேன்'' என்று அரசாட்சியைப் பற்றி ஏளனமாகக் கூறும் பாங்கு அவனது நிலையை நன்கு விளக்குவதாக இருக்கிறது.

இதையும் கூறி இன்னெரு விடயத்தையும் உறுதியாகக் கூறுகிருன்.''தசரதன் இறந்த பின் பரதன் அரசாண்டான் என்ற பழிவரக் கூடாது என்ற காரணத்துக்காக நகரத்துக்கே செல்லாமல் நாட்டெல்லையிலே இருந்து தவஞ் செய்தாயே உனக்குப் பின் உன் அடிமையான நான் இருக்கிறேன் என்று நீ நினைத்திருக்கலாம். நீ இறந்த பின் ஒரு கணப் பொழுது நான் வாழ்ந்தாலும் நான் அரசுக்குரியவனுகிவிடுவேன்.''

மன்னிற்பின் வளநகரம் புக்கிருந்து
வாழ்ந்தானே பரதன் என்னும்
சொன்னிற்கும் என்றஞ்சிப் புறத்திருந்தும்
அருந்தவமே தொடங்கினுயே
என்னிற்பின் இவனுளனும் என்றோ,நின்
அடிமையுனக் கிருந்ததேனும்
உன்னிற்பின் இருந்ததுவும் ஒரு குடைக் கீழ்
இருப்பதுவும் ஒக்கும் என்றுன்.

நீ இறந்தபின் நான் உயிர் வாழ்வதுவும், வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்து அரசாட்சி செய்வதுவும் ஒன்றே தான். அதனுல் நான் உனக்குப் பின் ஒரு கணமும் உயிர் வாழப் போவதில்லை என்று உறுதியாகக் கூறுகிருன் சத்துருக்னன்.

இராமனேடுஇலக்குவன்காட்டுக்குப் போகும் போது இலக்குவனின் தாயான சுமித்திரை கூறுகிருள். 'மகனே நீ இராமனின் தம்பியாக அல்ல, அடியவனுகச் செல். மீண்டும் இராமன் நாட்டுக்கு வந்தால் அவன் பின்னே வா. இராமனுக்கு ஆபத்து நேர்ந்தால் அவனுக்கு முன்னே இறந்து விடு என்று. ஆனுல் பரதனேடு நின்ற சத்துருக்னனுக்கு யாரும் எதுவும் சொல்லி வைக்கவில்லை ஆனுல் அவனது உள்ளம் அண்ணனுக்காகவே உருகும் உள்ளம்.

இராமனேடு நிழல்போல் தொடர்ந்த தம்பி இலக்குவன் பற்றி கம்பன் பல இடங்களிலும் போற்றிப் புகழ்ந்து தள்ளியிருக்கிருன். பரதனேடு நின்ற சத்துருக்னனைப் பற்றிப் புகழ இந்த ஒரு சந்தர்ப்பமே கம்பனுக்குக் கிடைத்தது. அந்த ஒரு சந்தர்ப்பத்தை வைத்து அந்த உத்தமத் தம்பியின் சத்திய ஒழுக்கத்தை மிகவும் தத்ரூபமாகக் காட்டி விடுகிருன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.


### தேவை

ஆலயத்தூபி, மூடுமண்டபம் முதலியன கட்ட அனுபவம் மிக்க சிற்பாசாரியர்களும், ஆசாரிமார்களும் தேவை. வேதனம் நேரில் பேசி இணக்கம் காணலாம். தொடர்பு கொள்க.

சி. இராசரத்தினம்
உடையார் வீதி, ஊரெழு, சுன்னுகம்.

05139



### கோக்கி தேவை

பிரபல சைவ போசன சாலைக்கு பலகாரம் போடக் கூடிய ஆள் தேவை. இனிப்புப் பண்டங்கள் போடத் தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளலாம். தயாரிப்பு திறனுக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

யாழினி கபே,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
05117



### காணி விற்பனைக்கு

புன்னலைக்கட்டுவன் தெற்கு குப்பிழான் ரேட்டில் மயிலங்காடு பெரியகலட்டியில் 15 பரப்பு தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: திருமதி தெய்வேந்திர குமாரசாமி மணியகாரவளவு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
05127


## தமிழைப் பிழை ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எனில் மேற்குறித்த பெரியார்களை ஒத்த வேறு பெரியார்கள் என்ற பொருள் உண்டாக்கும். இவர்களே சைவம் காத்தோர் எனில் ஆகிய பெரியார்கள் எனவும் வேறும்பெரியார்கள் உளராயின் முதலிய பெரியார்கள் எனவும்எழுதுதல் வேண்டும்.

11. மழை பெய்ததன் காரணமாகப் பயிர் விளைந்தது.

இவ்வாக்கியத்தில் மழை பெய்தமையே காரணம். பயிர் விளைந்தமை காரியம். இதனை மாற்றி மழை பெய்ததுகாரியமாகவும் பயிர் விளைவு காரணமாகவும் காட்டப்பட்டுள்ளன.

'மழை பெய்ததனுலே பயிர் விளைந்தது' என்பதே சரியான பிரயோகம்.

12. அங்கு வீசும் தென்றலும் வீங்கிள வேனிலும் உளர்ந்தன; மாசில் வீணையும் மாலை மதியமும் இனியஒலியும் ஒளியும் நல்கின:பற்றற்ருன் பற்றினைப் பற்றி நின்ற பழவடியார்க்குத் தீதும் நன்ருகும் என்பதற்கு ஐயமும் உளதோ?

இங்கு மூன்று வாக்கியங்கள் தொடர்ந்து ஒரேவாக்கிய வடிவில் அமைந்து பொருள் தருகின்றன. இவற்றின் கண்ணே, 'வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்' 'மாசில் வீணையும் மாலை மதியமும்' 'பற்றற்ருன் பற்றினைப் பற்றல்' என்பன எழுதியவருக்கு உரிமையான சொற்ருெடர்களல்ல; வேறு கவிதைகளிலிருந்து கடன் பெற்றவை; தமது மனன ஆற்றலையும், வித்துவத் திறத்தையும் புலப்படுத்தக் கையாளப்பட்டவை இத்தகைய ஆடம்பரச் சொற்கூட்டங்களை அளவு மீறிக் கையாள்வதால் எவ்வித பயனுமில்லை. எதுகை மோனைகளை எல்லை மீறிக்கையாண்டு எழுதும் வாக்கியங்களும் 'மலையைக் கல்லி எலியைப் பிடிக்கும்' வெற்று முயற்சியின் வெளிப்பாடுகளே. இவற்றைத் தவிர்த்துச்சொற் செட்டுடன் தெளிவாக அறிவியலுக்குப் பொருந்தும் வண்ணம் வாக்கியங்களை அமைப்பது சிறந்தது.

### பேச்சுத் தமிழ்ச் சொற்களைக் கையாளல்

இலக்கண விதிக்கமைந்த செந்தமிழ்ச் சொற்களோடு. இக்காலத்திலே பெருமளவு பேச்சுத்தமிழ்ச் சொற்களையும் கையாள்வது வழக்கமாயிருந்து வருகிறது. ஆக்க இலக்கியங்களிலே கதாபாத்திரங்களின் உரையாடல்களை இயற்கையாகக் கையாண்டு சுவையினை ஏற்படுத்துவது வரவேற்கத் தக்கதே. சிறப்பாகச் சமூக நாடகங்களிலே பாத்திர உரையாடல்கள் பேச்சுத் தமிழில் அமைவதே சிறப்பு. பேராசிரியர் க. கணதிப்பிள்ளை இது பற்றிக் கூறியுள்ளது பின்வருமாறு;

''...அன்றியும் நாடகம் என்பது உலக இயல்பை உள்ளது உள்ளபடி காட்டுவது. ஆகவே வீட்டிலும் வீதியிலும் பேசுவதுபோலவே அரங்கிலும் ஆடுவார் பேசல் வேண்டும்.''

பேராசிரியரின் கூற்று நாடகத்திற்கு மட்டுமன்றி சிறுகதை, நாவல் ஆகியவற்றுக்கும் பொருந்துவதே.

எனினும், பாத்திரங்களின் உரையாடல்களோடு பேச்சுத் தமிழ் நின்றுவிடுவதே நன்று. கதாசிரியர் எழுதும் தங்கூற்று வாக்கியங்களிலும் (தங்கூற்று—தமது கூற்று)பாத்திரங்களின் இயக்கம் பற்றிய வாக்கியங்களிலும் பேச்சுத் தமிழ் இடம்பெருதிருத்தலே வரவேற்கத்தக்கது.

11. வாக்கியங்களிலே பிறமொழிச் சொற்களைக் கையாளுதல்.

பிறமொழிச் சொற்களைத் தமிழிற் கையாளுவதற்கான சில காரணங்கள் பின்வருமாறு:

1. அச்சொற்களுக்குரிய பொருள் தமிழுக்குப் புதியன.

உ—ம்: பஸ், கார், ரெலிவிஷன், அலவாங்கு.

இவை காலகதியிலே தமிழினின்று பிரிக்கமுடியாத அளவிற்குத் தமிழே ஆகிவிடுவதுமுண்டு. 'அலவாங்கு' இதற்கு உதாரணம். மற்றைச் சொற்களுக்கு முறையே பேருந்து, சிற்றுந்து தொலைக்காட்சி என்ற தமிழ்ச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. எனினும் பழக்கம் காரணமாக இவையே எம்மைவிட்டு நீங்காத வாழ்வைப் பெற்றுவிட்டன.

### தத்துவம் அறிவியல் சார்ந்து வருவன

1. ஆன்மா,ஆணவம்,மாயை, — வடமொழியிலிருந்து வந்தவை.
2. ஒட்சிசன், ஐதரசன், காபோனிக்கமிலம்—இவை ஆங்கிலத்னூடாக வந்தவை.

இவை தவிர்க்கவேண்டாதவை; ஏற்க வேண்டிய கட்டாயத்தேவை எமக்கு உண்டு.

3. ஒலிநயக் கவர்ச்சியாலும் அவற்றைக் கையாள்வது நன்மை அறிவுடையவராகவும் நாகரிகமுடையவராகவும் காட்ட உதவும் எனக் கருதும் கருத்தாலும் தொற்று நோயாகித் தமிழைப் பீடித்து வருவன.

இவை பேச்சில் மட்டுமன்றி எழுத்திலும் கையாளப்பட்டுத் தமிழை மணிப்பிரவாளமாக்கிக் கொண்டிருக்கின்றன.

உ+ம்: ''இந்த நாவலில் ஒரு False conflict தான் காட்டப்பட்டிருக்கிறது. Authentic Crisis கிடையாது. அதனுல் தான் Authentic Choice இல்லை.''

இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகி வரும் சஞ்சிகைகளிலே வடசொற்கள் மட்டுமன்றி ஆங்கிலச் சொற்களும் கையாளப்படுகின்றன. மேலேயுள்ள உதாரண வாக்கியங்களிலே ஆங்கிலச் சொற்கள் ஆங்கில எழுத்துகளிலேயே எழுதப்பட்டுள்ளமையை நோக்குக. இப்பிரயோக முறை படிப்படியாக் கூடிக் கொண்டு வருவதையும் தமிழகத்துச் சஞ்சிகைகளிலே நாம் அவதானிக்கலாம். இம்முறையினைத் தவிர்ப்பது நன்று. இயன்ற அளவு தமிழிலுள்ள இயற்சொற்களைக் கையாண்டு,இலக்கண வழுவற்ற நடையில் எழுதுவதே விரும்பத்தக்கது.

### ஆங்கிலச்சொற்ருெடர்கள் சில தமிழ்க் கருத்து வடிவம் பெறல்

ஆங்கிலச் சொற்கள் மட்டுமன்றி ஆங்கிலச் சொற்ருெடர்கள் சிலவும் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ்க் கருத்து வடிவங்களாயுள்ளன.

உ-ம்:

1. A FEW – ஒரு சில,
2. TO FACE–முகங்கொடுத்தல் (A PROBLEM பிரச்சனைக்கு)
3. HEALTHY ATMOSPHERE – ஆரோக்கியமான சூழ்நிலை
4. (SPREAD LIKE) WILD FIRE – காட்டுத்தீ போலப் (பரவியது)
5. DECADE – ஒரு தசாப்தம்
6. UNDER THE INFLUENCE – செல்வாக்கினுல்
7. *UNDER THE PRESIDENTSHIP (CHAIRMANSHIP) —தலைமையில்
8. WELCOME CHANGE— வரவேற்கக் கூடிய மாற்றம்
9. GOLDEN OPPORTUNITY— பொன்னுன வாய்ப்பு (சந்தர்ப்பம்)
10. NAKED TRUTH— நிருவாண உண்மை

(இதனைத் 'தலைமையின் கீழ்' என்ற நேரடி மொழிபெயர்ப்புச் செய்வதும் உண்டு. இது போன்றே 'ALL ARE CORDIALLY INVITED'என்பதையும், அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்'என்பர்.தலைமையில் எனவும் கையாள்வதே சிறப்பு)

மேற்குறித்த வகையில் இன்னும் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. விரிக்கிற் பெருகும். இவை வெறும் மொழிபெயர்ப்புச் சொற்ருெடர்களாய் அமையாமல், கருத்தாழத்தைக் கூட்டுவனவாய் அமைதல் வேண்டும். மொழியின் வளர்ச்சிக்கும் வளத்திற்கு வேண்டிய யாவும் பல திசைகளிலுமிருந்து காலத்திற்கு காலம் கிடைத்துக்கொண்டேயிருக்கின்றன. அவற்றைப் பயன்பாடும் தேவையும் நோக்கி கையாள்வதாலே எமது மொழி மேலும் சிறக்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும்
—கலைச்
செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்
-பாரதி


### 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



ப. தவத்துரை பாஸ்கரன்

தோற்றம்: 1961
மறைவு: 07 - 05 - 1986

ஓடிவிட்ட ஆண்டதோ
ஒன்றுடன் ரெண்டு சேர்ந்ததையா
சூடு பட்டு நீ வீழ்ந்த
சிவந்த இடம் நிறம் மாறுதையா? ஆனுல்
நீர் சிந்திவிட்டுச் சென்ற
சிரிப்பலைகள் எம்மை
தினம் தினம் வாட்டுதையா
கோடிகள் குவிந்தாலும்
கோபுரங்கள் உயர்ந்தாலும்
நும் நினைவலைகளை எம்மைவிட்டு அகலாது

உமது பிரிவால் துயருறும்
தந்தை, தாய், அத்தான், அக்கா, தம்பி, தங்கை, உற்ருர், உறவினர்.

வேலணை கிழக்கு - 2
வங்களாவடி,
வேலணை

05121

சிறந்த முறையில்
விடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

# இந்திய துணைப்பிரதமர் பதவியில் ஜெயலலிதா ஆசை

[சென்னை]

**இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழக அமைப்புக்குள் ஏற்பட்டு வரும் பிளவு, பிரிவு ஆகியவைகளை ஜெயலலிதா தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகவும், தேசிய அரசியலில் தம்மை இணைப்பதற்காக இவர் நாட்டின் துணைப்பிரதம மந்திரி பதவியைக் கேட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.**

அண்மையில் புதுடில்லி சென்றிருந்த ஜெயலலிதா இதுபற்றி காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்துடன் விரிவாகப் பேச்சுநடத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிட காங்கிரஸ் சம்மதிக்குமானால், அதற்காக தமிழ் நாட்டில் கூடிய ஆசனங்களை காங்கிரஸுக்கு வழங்கவும் ஜெயலலிதா சம்மதம் தெரிவித்துள்ளார். அதேசமயம், ஜெயலலிதா தமது சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் துறந்து, அதனையும் இந்திரா காங்கிரஸுக்கு வழங்குவார்.

இத்தனையும் அவருக்கு துணைப்பிரதமர் பதவி வழங்கப்படுமென்றால் மட்டுமே என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தெற்கின் பல்கலைக்கழகங்கள் புதனன்று திறக்கப்படும்

தெற்கின் சகல பல்கலைக் கழகங்களும் புதன்கிழமை ஆரம்பமாகும் என்றும் சகல விடுதி மாணவர்களும் செவ்வாய்க்கிழமை சமுகமளிக்க வேண்டும் என்றும் உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

1987–1988; 1988 – 1989 ஆண்டுகளுக்கான புதிய மாணவர்களின் விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகளை துணைவேந்தர்கள் பின்னர் அறிவிப்பார்கள் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஆசிரியர்கள் பென்ஷனை துரிதப்படுத்த அமைச்சு முயற்சி

கல்வியமைச்சின் அதிகாரிகளுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பொது நிர்வாக இராஜாங்க அமைச்சும், ஓய்வூதியத் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

கல்வித்திணைக்கள ஊழியர், ஆசிரியர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பெறும் காலவிரயத்தை குறைப்பதற்கான ஆலோசனைகளை பொது நிர்வாக அமைச்சு இக் கலந்துரையாடலில் வழங்கும்.

ஒருவர் ஓய்வூதியம் பெறும் வயதிற்கு முதல் வருடமே அவரது சகல கோப்புகளும் பரிசீலிக்கப்பட்டு, அவர் இளைப்பாறிய அடுத்த மாதமே ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வியதிகாரிகள் பணிக்கப்படவுள்ளனர்.

## அரசாங்க ஊழியர்களுக்கு உல்லாச விடுமுறைத் திட்டம்

அரச ஊழியர்கள் தமது விடுமுறை தினங்களை உல்லாசமாக கழிப்பதற்கு ஏற்றவகையில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசு ஆலோசித்து வருகிறது என்று பொது நிர்வாக ராஜாங்க அமைச்சர் சந்திரா பண்டார தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் தமது விடுமுறை தினங்களை உல்லாசமாக வெளியூர்களில் செலவிட வசதியாக அரச விடுமுறை விடுதிகளும், வாடி இல்லங்களும் அமைக்கப்படவுள்ளது. ஊழியர்கள் தங்கள் விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உல்லாசப் பயணத்துறையுடன் இணைந்து இதற்கான திட்டங்கள் அமைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

### இந்திய ராணுவ அணி நேற்றுத் திரும்பியது

இந்திய இராணுவத்தின் மூன்றுவது அணியினர் நேற்று திருகோணமலை துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் சென்னைக்கு புறப்பட்டனர். இன்று சென்னை வரும் இவர்களுக்கு வரவேற்புபசாரம் அளிக்கப்படவுள்ளது.

### கச்சாயில் மோதல்

தென்மராட்சியில் கச்சாய் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் இரு ஜவான்கள் பலியானதாகவும், வேறு சிலர் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் இடம்பெற்றது.

### வன்னி, முல்லைத் ..

பொருட்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கல்வியங்காடு ...

அழைப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் ஒன்றுகவே வாழ்க்கை நடத்திவந்ததாகத் தெரிகின்றது.

### முதலாண்டு...

பெறும் புள்ளிகளின் சராசரிக்கு அமைய அவர்கள் அரசாங்க பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அரச அதிபரின்...

யோகேஸ்வரன் அவரின் சிதைக்குத் தீ மூட்டினார். தகனக்கிரியையிலும் பெருமளவிலானவர்கள் பங்குபற்றினர்.

## சிறு செய்திகள்

### சரணடையும் வரவேற்பு நிலையம் தீ வைப்பு

தென்பகுதி தீவிரவாதிகள் சரணடைவதற்காக அரசால் திறக்கப்பட்ட நாலந்த வரவேற்பு நிலையம் இனம் தெரியாதோரால் தீ வைக்கப்பட்டதுடன், அதன் பொறுப்பதிகாரியும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

### அரச ஊழியர் இடமாற்றம் இடை நிறுத்தம்

அரச ஊழியர்களின் இடமாற்றம் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு அதிகாரிகளை விடுவிப்பது சம்பந்தமான இடைக்கால ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

### பார்வையிட தடை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை மறு அறிவித்தல் வரையும் பார்வையிடக் கூடாதென அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் முகாம்களின் முன்பு ஒட்டப்பட்டுள்ளது.

### கருத்தரங்கு

"சமுதாய அபிவிருத்தியில் பெண்களின் பங்கு" என்ற தலைப்பிலான கருத்தரங்கு புங்குடுதீவு அமெரிக்க மிஷன் பாடசாலையில் இன்று நடைபெறும் பெண்களுக்கும் அபிவிருத்திக்குமான மத்திய நிலையம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

### மரணதண்டனை

சிறுவில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தின் போது வன்முறைகளில் ஈடுபட்ட அரச ஊழியர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும்

அவனியில் 22.11.1943



அவனடியில் 07.04.1989

### அமரர் உயர்திரு க. பராஜசிங்கம்

B.A (Hons) S. L. A. S.

(முன்னைநாள் உதவி அரசாங்க அதிபர் குச்சவெளி)

ஆலமரமாய் நின்று அனைவருக்கும் நிழல் தந்தீர்
பாசமாய் நின்று பரிவுடனே ஆதரித்தீர்
காரிருளில் ஒளி தந்தீர் கடமை முடித்தீர்
காலமெல்லாம் உம் நினைவுடன் காத்திருப்போம்
போற்றிடுவோம் உமது புகழை
நீர் சென்ற இடம் ஏதோ
சிந்தித்துப்பார்க்க முடியவில்லை ஐயா!

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

★ குறிப்பு: நாளை 08. 05 89 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரித்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இல 15, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு.

மனைவி, மகன்மார்,
சகோதரங்கள்.

05155

PHYSICS
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
21, மணற்தறை லேன்,
கந்தர்மடம். (யாழ்)
A/L 91
சனி, ஞாயிறு
3 - 4 P. M
(ஆரம்பமாகிவிட்டது)
05146

PHYSICS
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
B.M.C. முன் லேன்
யாழ்ப்பாணம்
A/L 89
ஒளியியல்
(துரிதமீட்டலும் வினா விடையும்)
சனி, ஞாயிறு
7·30 A.M.
05147

A/L MATHS
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 07-05-89 அச்சிட்டு வெளியிடப்பெற்றது